Registered as a News Paper
பொழிவு - 16
குவிப்பு -05
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
மே 2013
(ISSN 1800-2641)

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா
THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Center, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 023-3233276 / 0777420811 Fax No - 0232250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 36 / News / 2013"

## மன்னார் ஆயர் - எதிர்க்கட்சித் தலைவர் சந்திப்பு
## காணாமல்போன 472 பேரின் விபரம் கையளிப்பு

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகையை எதிர்கட்சித் தலைவர் திரு. ரணில் விக்கிரமசிங்க சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். மன்னார் ஆயர் இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின்போது வடக்கில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து மன்னார் ஆயர் எதிர்க்கட்சித் தலைவருக்கு விரிவாக எடுத்துக் கூறினார். இந்தச் சந்திப்பில் மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் காணாமல்போயுள்ள 472 பேருடைய விபரங்கள் காணாமல்போன உறவுகளைத் தேடும் அமைப்பினரால் எதிர்கட்சித் தலைவரிடம் கையளிக்கப்பட்டது.



இந்தச் சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, எம். பி.க்களான ஜெயலத் ஜெயவர்தன, ரவி கருணாநாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர். ஆயருடனான சந்திப்புக்கு முன்னர் மன்னார் மூர் வீதியில் ஐ. தே. க. யின் முக்கியஸ்தர்கள் மற்றும் முஸ்லிம் மதப் பிரமுகர்களையும் எதிர்கட்சித் தலைவர் தலைமையிலான குழுவினர் சந்தித்துப் பேசினர்.

இதுனையடுத்து மன்னார் நகரசபை மண்டபத்தில் பொதுக்கூட்டம் இடம்பெற்றது. இதில் மீனவ சங்கப் பிரதிநிதிகள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள், மாதர் கிராம, சங்கங்களின் பிரதிநிதிகள் வர்த்தகர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர். இந்தக் கூட்டத்தில் மன்னார் மாவட்டத்தில் மீனவர்கள், விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

## அடம்பன் பங்கில் திருச்சுருபம் உடைத்து அழிப்பு







அடம்பன் பங்கிற்கு உட்பட்ட கன்னாட்டி என்ற கிராமத்தில் வைக்கப்பட்டிருந்த புனித பிலிப்பு நேரியரின் திருச்சுருபம் கடந்த ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி அன்று இரவு இனம்தெரியாத நபர்களினால் உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளதாக அடம்பன் பங்குத் தந்தை லக்கோண்ஸ் பிகிராடோ அடிகளார் தெரிவித்தார்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## கண்ணீரின் வழியாக கடவுளைத் தெளிவாகக் காணமுடியும்

### திருத்தந்தை பிரான்சிஸ்



நமது கண்ணீர் என்ற கண்ணாடியின் வழியாக இயேசுவை நாம் தெளிவாகக் காணமுடியும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார். "நான் ஆண்டவரைக் கண்டேன்" என்று மகதலா மரியா சொன்ன வார்த்தைகளை மையப்படுத்தி கடந்த ஏப்ரல் 2ஆம் திகதி அன்று காலைத் திருப்பலியை புனித மார்த்தா இல்லத்தில் உள்ள சிற்றாலயத்தில் நிறைவேற்றிய திருத்தந்தை இவ்வாறு கூறினார்.

சமுதாயத்தால் தவறாகப் பயன்படுத்தப்பட்ட பெண்ணாக, பாவத்தில் வாழ்ந்த மகதலா மரியா, இயேசுவைக் கல்லறையில் காணாததால் வடித்த துயரக்கண்ணீர், இயேசுவை அடையாளம் கண்டுகொண்டதும் ஆனந்த கண்ணீராக மாறியது என்பதைக் குறிப்பிட்ட திருத்தந்தை கண்ணீருக்கு உள்ள வலிமையை எடுத்துரைத்தார். நாம் ஒவ்வொருவரும் துயரிலும், மகிழ்விலும் வடிக்கும் கண்ணீருக்கு மதிப்பு உள்ளது என்றும், பல நேரங்களில் கண்ணீரின் வழியாகக் கடவுளைத் தெளிவாகக் காணமுடியும் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் தன் மறையுரையில் குறிப்பிட்டார்.

## வெலிக்கடைச் சிறையில் புனித வார நிகழ்வுகள்

"சிறையில் அடைபட்டிருக்கும்போது எங்கள் வாழ்வை மீண்டும் ஒருமுறை பின்னோக்கிப் பார்க்க இறைவன் வாய்ப்பளிக்கிறார்" என்று இலங்கையில் உள்ள ஒரு சிறைக் கைதி கூறினார்.

திருக்குடும்பத் துறவுச் சபையைச் சார்ந்த அருள் சகோதரிகளின் முயற்சியால் வெலிக்கடைச் சிறையில் புனித வார நிகழ்வுகள் நடாத்தப்பட்டன.

புனித வெள்ளியன்று நடைபெற்ற சிலுவைப் பாதையிலும், உயிர்ப்பு ஞாயிறன்று நடைபெற்ற திருப்பலியிலும் நூற்றுக்கும் மேற்பட்ட பெண் கைதிகள் கலந்துகொண்டனர் என்றும் இவர்களில் தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளைப் பேசும் கைதிகள் இருந்தனர் என்றும் அருள்தந்தை பிரசன்னா பெர்ணாண்டோ ஆசிய செய்தி நிறுவனத்திடம் கூறினார்.

உயிர்ப்பு ஞாயிறு திருப்பலியில் காணிக்கைப் பவனியின்போது கைதிகள் எரியும் மெழுகுதிரிகளை ஏந்தி வந்தனர்.

## மே மாதம்! மரியாளின் வணக்க மாதம்



"உங்கள் உள்ளங்களிலும் இல்லங்களிலும் நாட்டிலும் அமைதியை விரும்புகிறீர்களா? ஒவ்வொரு மாலையும் ஒன்றுகூடி செபமாலை சொல்லுங்கள். பல வேலைச் சுமைகளும் உழைப்பும் களைப்பும் இருந்தாலும் செபமாலை சொல்லாமல் ஒருநாள்கூட உங்கள் வாழ்நாள் கடந்துவிடவேண்டாம்."
- திருத்தந்தை 11ஆம் பத்திநாதர்

## போலந்தில் உலகின் மிக உயரமான 2ஆம் அருள் சின்னப்பரின் சிலை



உலகின் மிக உயரமான திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பரின் சிலை போலந்து நாட்டில் திறந்து வைக்கப்பட்டது. உலக கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவராக இருந்தவர் திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் (போப் ஜோன் போல் II). இவர் கடந்த 78ம் ஆண்டு ஒக்ரோபர் 16 ஆம் திகதி திருத்தந்தையாகப் பதவியேற்றார். இவர் போலந்து நாட்டைச் சேர்ந்தவர். கடந்த 2006ஆம் ஆண்டு இறக்கும்வரை இவர் திருத்தந்தையாக இருந்தார்.

வரலாற்றில் நீண்ட காலம் திருத்தந்தையாக இருந்தவர் பட்டியலில் 2ம் இடம் பிடித்தவர். இவருடைய உருவச் சிலை போலந்து நாட்டில் கடந்த ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது. 45 அடி உயரம், 5 தொன் எடையுள்ள போப் இரண்டாம் ஜோண் போலின் இந்தச் சிலைதான் உலகிலேயே மிக உயரமானது என்பது குறிப்பிடத்தக்கது.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

வாசகப் பெருமக்களே!
மன்னா பத்திரிகைப் பணத்தை காலம் தாழ்த்தாமல் உடனடியாகச் செலுத்துவதன் மூலம் மன்னா விநியோகஸ் -தர்களுக்கு உங்கள் மேலான ஒத்துழைப்பை வழங்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.
- மன்னா நிர்வாகம்

## மே 19ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவு



போரில் மரணித்த உறவுகளை மனதிருத்தி செபிப்போம்!

## இயேசுவை அடக்கம் செய்த துணி

### The Shroud of Turin



இயேசுக் கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு இறந்ததும் அவரது உடலைப் போத்தி அடக்கம் செய்யப்பட்டதாகக் கருதப்படும் துணியில் ஈட்டியால் குத்தியதில் இயேசுவின் விலாவில் ஏற்பட்ட காயத்தின் வடு பதிந்துள்ளது. இந்தத் துணி இத்தாலியின் தூரின் நகர தேவாலயத்திலுள்ளது.

14.3 அடி நீளமும், 3.7 அடி அகலமும் கொண்ட இந்தத் துணியில் சிலுவையில் அறைந்து கொல்லப்பட்ட ஒருவரது உடலின் முன் பகுதியும் பின் பகுதியும் பதிந்துள்ளன.

ஈட்டியால் குத்தியதில் இயேசுவின் விலாவில் ஏற்பட்ட காயத்தின் வடுவும் இதில் காணப்படுகிறது.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா
## மனப்பொழிவு
### பதிப்பாசிரியர் பகர்வது

## மாதாவின் வணக்க மாதத்தில்
# செபமாலை செபிப்போம்

*லூயி பாஸ்ரர் என்றவுடன் மருத்துவ உலகம் தலைநிமிர்ந்து நிற்கும். அவருடைய ஆழ்ந்த அறிவு முதிர்ச்சியின் மூலம் பல மருத்துவ சாதனைகளைப் புரிந்தவர். கத்தோலிக்க விசுவாசத்தில் ஆழமாக ஊறியவர். ஒருமுறை பரிஸ் நகரிலிருந்து வேறொரு இடத்திற்கு புகைவண்டியில் பயணிக்கிறார். கையில் செபமாலை வைத்து அடக்கமாகச் செபிக்கிறார். அதே பெட்டியில் சில விடலைப் பையன்கள் ஆடல் பாடல்களில் ஈடுபட்டிருந்தனர். அவர்களுக்கு செபமாலை சொல்லும் அந்த மனிதர் லூயி பாஸ்ரர் என்று தெரியாது. லூயி பாஸ்ரர் செபமாலை சொல்லிக் - கொண்டிருந்ததைக் கண்டு, "யோவ் அந்த செபமாலையை எறிந்துவிட்டு, எங்களோடு சேர்ந்து ஆட வாருங்கள்" என்று அழைத்தனர். இன்னொரு பையன் "உங்களுடைய பெயரைத் தெரிந்துகொள்ளலாமா?" என்று கேட்டான். அவர் அமைதியாக தன் சட்டைப் பையில் இருந்த அறிமுக அட்டையை (Visiting Card) காண்பித்தார். "லூயி பாஸ்ரர், முனைவர், ஆராய்ச்சியாளர், அறிவியல் மையம்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதைப் பார்த்ததும் அந்த வாலிபப் பையன்கள் வாயடைத்து நின்றார்கள்.*

பல ஆண்டுகளுக்கு முன்னர் 'ரைற்றானிக்' என்ற ஒரு திரைப்படம் உலகை ஒரு கலக்கு கலக்கியது. அதில் ஒரு காட்சி – சிலவேளை நாம் அதை பெரிதாக அவதானித்திருக்க மாட்டோம் - ரைற்றானிக் கப்பல் மூழ்கிக்கொண்டிருந்த வேளையில், அதில் இருந்த இயேசுசபைக் குருவும் அவர் அருகில் இருந்த சிறார்களும் ஒன்றாகக்கூடி செபமாலை செபித்துக்கொண்டிருந்தனர். இது வியப்பான ஒரு காட்சியாக அமைந்திருந்தது.

*நான்கு தேவ இரகசியங்களை மீண்டும் மீண்டும் சொல்லிச் செபிக்கின்றபோது நம்முடைய உள்ளத்திற்கு மன அமைதி கிடைக்கிறது. அதேவேளையில் தேவ அன்னையை வாழ்த்தி அவர் வழியாக இறைவனை மகிமைப்படுத்துகிறோம்.*

"கிளிப்பிள்ளைபோல ஓயாமல் திரும்ப திரும்ப அருள் நிறைந்த மந்திரத்தைச் சொல்வது சிறுவர் சிறுமியர், அல்லது வேலை இல்லாத கிழவிகளுக்குத்தான் பொருந்தும்" என்ற கருத்தில் சிலர் செபமாலையின் முக்கியத்துவத்தை இன்று குறைத்துப் பேசுவதைப் பார்க்கின்றோம். இப்படிப்பட்டவர்களுக்கு திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் இப்படிப் பதில் கூறுகின்றார்: "இந்தப் பக்தியை தவறான முறையில் புரிந்துகொண்டதனால் வரும் சிக்கல் இது. திரும்ப திரும்ப அருள் நிறைந்த மந்திரத்தைச் சொன்னாலும், நமது சிந்தனையெல்லாம், நமது ஆண்டவரின் பிறப்பு, வளர்ப்பு, பாடுகள், இறப்பு, உயிர்ப்பு, விண்ணேற்றம், தூய ஆவி, மரியன்னை மகத்துவம் பெற்றது என்பவற்றைப் பற்றியே இருக்கின்றது என்பதே இப்பக்தியின் சாரம். இதைப் பழக்கத்தில் கொண்டுவந்தால் நாள்தோறும் பலமணி நேரம்கூட இந்தப் பக்திக்குச் செலவிடலாம். ஏனெனில் இவ்வாறு நாம் இறை யேசுவுடனும், தூய ஆவியுடனும், மரியன்னையுடனும், உறவுகொண்டு அதில் முன்னேற்றம் அடைகிறோம்."

*"திருச்சபை ஆயிரமாயிரம் பக்தி முயற்சிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. ஆனால் செபமாலைப் பக்தி முயற்சியில் நடந்த அற்புதங்களைப்போல் வேறு எந்தப் பக்தி முயற்சிகளிலும் அற்புதங்கள் நடைபெறவில்லை" என்று திருத்தந்தை 10ஆம் பத்திநாதர் கூறியுள்ளார்.*

*"உன்னால் முடிந்த அளவுக்கு செபம் செய். ஏனெனில் செபம் அதிகமாகச் சிந்திப்பதில் அடங்கியில்லை. மாறாக அதிகம் அன்புசெய்வதில் அடங்கியுள்ளது." இறைவனிடம் செபிப்பதும், அன்னையை நோக்கி செபமாலை சொல்வதும் ஓர் இயந்திரமான சிந்தனைக் காரியமல்ல. மாறாக அன்னைமீது நாம் கொண்டுள்ள உண்மையான அன்பின் வெளிப்பாடாக, உறவின் பரிமாற்றமாக இருக்கவேண்டும் என்பது புனித அவிலா தெரேசாவின் விருப்பம். இத்தகைய அன்பு உறவின் புரிதலில் மட்டுமே நாம் "அவர் சொல்வதைச் செய்யுங்கள்" என்று சொல்லும் அன்னையின் பரிந்துரையை ஏற்று இறைவழி நடக்க முடியும்.*

*வானதூதர் மரியாளிடம், "அருள்நிறைந்த மரியே வாழ்க, பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே.... " என்று கூறியதையே நாமும் செபமாலையில் செபிக்கிறோம். விவிலியமே செபமாலை. எனவே செபமாலை மூலம் விவிலிய வாழ்வைப் பின்பற்ற முயற்சிக்கின்றோம். 'சீடர்கள் அன்னை மரியாவோடு செபத்தில் இணைந்திருந்ததுபோல்' நாமும் குடும்ப செபமாலை வழியாக அன்னையுடன் இணைந்து இயேசுவின் பிறப்பு, பணி, இறப்பு, உயிர்ப்பு, ஆகிய மறையுண்மைகளை செபித்து தியானிப்போம்.*

*செபமாலைப் பக்தி முயற்சியில் நாம் பங்கேற்கும்போது மரியன்னையின் அரவணைப்பில் நாமிருக்கிறோம். குழந்தைகளுக்கு கற்றுக்கொடுப்பதுபோல நம் தாய் மரியன்னை ஒவ்வொரு தேவ இரகசியமாக நமக்கு விளக்கிச் சொல்கிறார். நித்தமும் கரங்களில் செபமாலை, சித்தமெல்லாம் அவர்தம் புகழ் மாலை பாடுவோமா?*

*மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை,*
*அன்புடன் அருட்பணியாளர் தமிழ் நேசன்,*
*மன்னா பதிப்பாசிரியர்*

## மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி (தேசிய பாடசாலை)
### க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள்

2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் மன்/ புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை மாணவிகளான செல்வி. ஷாளினி ஜோசப் பீரிஸ், செல்வி. அருள்ஷீபா ஸ்ரான்லி டி மெல், செல்வி. ஆன் பிரியந்தி ஹென்றிச் ரவி ஆகியோர் தமிழ் மொழி மூலம் தோற்றி 9A சித்திபெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். இவர்களைக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் அனைவரும் மகிழ்வுடன் வாழ்த்திப் பாராட்டுகின்றனர்.


செல்வி.
ஷாளினி ஜோசப் பீரிஸ்


செல்வி.
அருள்ஷீபா ஸ்ரான்லி டிமெல்


செல்வி.
ஆன் பிரியந்தி ஹென்றிச் ரவி

## மாகாண மட்டத்தில் முதலிடம்

1. 2012 ஆம் ஆண்டு மாகாண மட்டத்தில் நடைபெற்ற திருக்குறள் மனனப் போட்டியில் மன்/ புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை மாணவி செல்வி. சேவியர் கிறிஷேறா - தரம் - 3 மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.
2. 'டயலொக்' நிறுவனத்தினர் நடாத்திய சித்திரப் போட்டியில் மன்/ புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை மாணவி செல்வி. சிவானந்தகுமார் சிவானிக்கா மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார். இவர்கள் இருவரையும் அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் வாழ்த்திப் பாராட்டுகின்றனர்.


செல்வி.
சேவியர் கிறிஷேறா


செல்வி.
சிவானந்தகுமார்
சிவானிக்கா

## மன்னார் மறைமாவட்டம்
### திருவழிபாட்டு நாட்காட்டி – 2013

## வைகாசி

01 - தொழிலாளர்களின் பாதுகாவலர் தூய சூசையப்பர் விழா
- புதுக்கமம், கற்கிடந்தகுளம், வேப்பங்குளம், அச்சங்குளம், சேமமடு.

03 - திருச்சிலுவை விழா - கள்ளியகட்டைக்காடு
- தூய யூதாதேயு விழா - ஒலிமடு

10 - தூய செபமாலை அன்னை - பிச்சகுளம்.

12 - கர்த்தர் ஆலய விழா - கீரி

13 - அன்னை வேளாங்கண்ணித் திருவிழா - தேத்தாவாடி மருதங்குளம்.
- பற்றிமா மாதா - ஜீவபுரம்.

15 - தூய ஆரோக்கிய அன்னை திருவிழா - களிமோட்டை

18 - தூய பூண்டி அன்னை விழா - எமில்நகர்
- புதுமை மாதா - குகன் நகர்.

19 - தூய ஆவி விழா - (காணிக்கைகள் ஆயர் இல்லத்திற்கு அனுப்பிவைக்கப்படும்.)
- மன்னார் மறைமாவட்ட அன்பிய வாரம் ஆரம்பம்.

20 - தூய சவேரியார் திருவிழா - செட்டியார் மகன் கட்டையடம்பன், தேவன்பிட்டி, சின்னப்பண்டிவிரிச்சான், சுண்டிக்குழி
- கர்த்தர் விழா - சுண்டிக்குழி

25 - சகாயமாதா - கந்தபுரம்.

26 - தூய பிலிப்பு நேரியார் விழா - ஆத்திக்குழி, கொன்னையன் குடியிருப்பு, இசைமாலைத்தாழ்வு, கன்னாட்டி.
- மறைமாவட்ட அன்பிய தினம்.

30 - தூய நீற்றம்மா திருவிழா - உமநகரி
- தூய செபமாலை அன்னை திருவிழா - மழுவராயர் கட்டை அடம்பன்.

■ மாதத்தின் 2வது, 4வது சனி உபவாசத்தியானம் - தோட்டவெளி ஆன்மீக இல்லம்.

**உங்கள் பங்கின் முக்கிய செய்திகளை பங்குத்தந்தையின் கையெழுத்துடன் மன்னாவுக்கு அனுப்பிவையுங்கள்**

## உண்மை உறைக்கும் — கமிலஸ்



(நன்றி - தி மெசஞ்சர்)

## திருவுளப் பணியாளர் சபைக்கு முள்ளிக்குளத்திலிருந்து புதிய தியாக்கோன்

மன்னார் முள்ளிக்குளம் கிராமத்தைச் சேர்ந்தவரும் இலங்கைத் திருவுளப் பணியாளர் சபையின் உறுப்பினருமாகிய அருட்சகோதரர் அந்தோனி ஜேசுராஜ் சில்வா அவர்கள் கடந்த ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் ஆயர் அவர்களினால் தியாக்கோனாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

அன்றைய தினம் இடம்பெற்ற குருத்துவ திருநிலைப்படுத்தல் திருப்பலியின்போதே இவர் தியாக்கோனாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். 2004ஆம் ஆண்டு திருவுளப் பணியாளர் சபையில் இவர் சேர்ந்தார். முள்ளிக்குளத்தை இவர் பிறப்பிடமாகக் - கொண்டிருந்தாலும் இடப்பெயர்வு காரணமாக கடந்த 10 வருடங்களாக இவருடைய குடும்பத்தினர் மன்னார் குழந்தையேசுபுரத்தில் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## திருத்தம்!

கடந்த ஏப்ரல் மாத மன்னா பத்திரிகையின் 4ஆம் பக்கத்தில் 'வரலாற்றில் தடம் பதித்த புதிய திருத்தந்தை பிரான்சிஸ்' என்ற கட்டுரையில் 3ஆம் பந்தியில், 'உலகத்தில் உள்ள 120 மில்லியன் கத்தோலிக்கர்...." என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அது 120 பில்லியன் அதாவது 120 கோடி என்று இடம்பெற்றிருக்க வேண்டும். தவறைச் சுட்டிக்காட்டியவர்களுக்கு நன்றி. (மன்னா நிர்வாகம்)

## குஞ்சுக்குளத்தில் கவனயீர்ப்பு சிரமதானம்

குஞ்சுக்குளம் கிராமத்தின் பிரதான வீதியில் கவனயீர்ப்புச் சிரமதானப் பணியொன்று அண்மையில் கிராம மக்களால் மேற்கொள்ளப்பட்டது. சுமார் 300 குடும்பங்கள் இந்தச்சிரமதானப் பணியில் ஈடுபட்டன.

மன்னார் - மதவாச்சி பிரதான வீதியில் இருந்து குஞ்சுக்குளம் கிராமத்துக்குச் செல்லும் பிரதான வீதி கடந்த பல வருடங்களாகச் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. குறித்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு கிராம மக்கள் அதிகாரிகளிடமும் அரசியல்வாதிகளிடமும் கோரிக்கை விடுத்திருந்த போதிலும் அந்தக் கோரிக்கை இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

இந்த நிலையில் குறித்த கிராமத்தைச் சேர்ந்த மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு முழு நாளும் கவனயீர்ப்புச் சிரமதானப்பணி ஒன்றினை மேற்கொண்டு குறித்த வீதியைப் புனரமைத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு, மன்னிப்பு போன்ற ஆன்மீக அடிப்படைகளை முன்னேற்றுவதற்கு ஆற்றிய பணிகளுக்காக

# தென் ஆபிரிக்க பேராயர் டுட்டுவுக்கு அமெரிக்கா பரிசு



தென் ஆபிரிக்கப் பேராயர் டெஸ்மண்ட் டுட்டு 1.6 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான டெம்பிளேட்டன் விருதை வென்றுள்ளார். அன்பு, மன்னிப்பு போன்ற ஆன்மீக அடிப்படைகளை முன்னேற்ற அவர் தனது வாழ்நாளில் ஆற்றிய பணிகளுக்காகவே அவருக்கு இந்த ஆண்டுக்கான மேற்படி பரிசு வழங்கப்பட்டுள்ளதாக பரிசு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். அவர் எதிர்வரும் 21.05.2013 அன்று இலண்டனிலுள்ள ஹைட்ஹோலில் மேற்படி பரிசை பெற்றுக் கொள்ளவுள்ளார். கடந்த 40 ஆண்டுகளாக வழங்கப்பட்டுவரும் டெம்பிளேட்டன் விருதானது தனிநபரொருவருக்கு வழங்கப்படும் மாபெரும் பரிசாக விளங்குகிறது.

இப்பரிசானது ஆன்மீக வாழ்க்கைக்கு அசாதாரண பங்களிப்பைச் செய்தவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. 1912 ஆம் ஆண்டு அமெரிக்காவில் பிறந்த பெருந்தகை ஜோன் டெம்பிளேட்டனின் நிதியுதவியுடன் செயற்படும் இந்தப் பரிசு வழங்கும் திட்டம் அவரது பெயரால் அழைக்கப்படுகிறது. கடந்த வருடம் மேற்படி பரிசு திபெத்திய ஆன்மீகத் தலைவர் தலாய் லாமாவுக்கு வழங்கப்பட்டது.

## பிலிப்பைன்ஸ் நாட்டில் பெரிய வெள்ளிக்கிழமை அன்று உண்மையாகவே சிலுவையில் அறையப்படும் பக்தி முயற்சி



பிலிப்பைன்ஸ் நாட்டின் வடபகுதியில் உள்ள கிராமங்களில் இயேசுக் கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதைக் குறிக்கும் நிகழ்வு ஒவ்வொரு ஆண்டும் பெரிய வெள்ளிக்கிழமை தினத்தன்று இடம்பெறுகின்றது. அக்கிராமத்தைச் சேர்ந்த பக்தர்களின் கரங்கள் உண்மையாகவே ஆணிகளால் சிலுவைவோடு அறையப்படுகிறது. பல நிமிடங்கள் அவர்கள் சிலுவையில் தொங்குகின்றனர். தங்கள் பாவத்திற்கு பரிகாரமாகவும், நோய்களில் இருந்து குணம் பெறுவதற்காகவும், இன்னும் கடவுளுக்கு நன்றிசெலுத்தவும் இந்த வழக்கம் இடம்பெற்று வருகின்றது.

கடந்த பெரியவெள்ளியன்று இடம்பெற்ற இச்சடங்கின்போது ரூபன் எனாஜி (52 வயது) என்பவர் இயேசு கிறிஸ்துவாக வேடம் தரித்து சிலுவையில் அறையப்பட்ட நிலையில் தோன்றுவதை படத்தில் காணலாம். திருச்சபை இந்த பக்திமுயற்சியை நிறுத்தும்படி கோரிக்கை விடுத்தபோதும் பாரம்பரியமான இந்த பக்திமுயற்சி தொடரவே செய்கின்றது.

## மன்னார் ஏ- 14 பிரதான வீதியை அகலப்படுத்தும் நடவடிக்கை

மன்னர் நகர சபையும் டயஸ்போரா லங்கா அமைப்பும் இணைந்து மன்னார் நகர சுற்று வளைவில் இருந்து ஏ- 14 பிரதான வீதியை அகலப்படுத்துவதற்கான ஆரம்பக்கட்ட வேலைத்திட்டத்தை தற்போது மேற்கொண்டு வருவதாக டயஸ்போரா லங்கா அமைப்பின் இயக்குனர் ஜெர்மி லியனகே தெரிவித்தார். ஏ- 14 வீதி தற்போது மிகவும் குறுகியதாகக் காணப்படுவதனால் போக்குவரத்துச் சேவைகளை மேற்கொள்வதில் பாதசாரிகளும் வாகன உரிமையாளர்களும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இதனால், இந்த வீதியில் விபத்துக்கள் ஏற்படுவதற்கான சூழ்நிலை காணப்படுகின்றது.

இந்த நிலையில் மன்னார் நகர சுற்றுவளைவிலிருந்து மன்னார் பொதுவிளையாட்டு மைதானம் வரையிலான ஏ- 14 பிரதான வீதி அகலப்படுத்துவது தொடர்பான விசேட கூட்டம் அண்மையில் இடம்பெற்ற நிலையில், தற்போது அதனை அகலப்படுத்துவதற்கான ஆரம்பக்கட்ட வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வீதியை அதிகாரிகள் மேற்பார்வைசெய்து வருவதாக டயஸ்போரா லங்கா அமைப்பின் இயக்குனர் மேலும் தெரிவித்தார்.

## மன்னார் தமிழ்ச் சங்கத்திற்கு புதிய நிர்வாகிகள் தெரிவு

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் பொதுக்கூட்டம் கடந்த 25 ஆம் திகதி மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையத்தின் கலையருவி மண்டபத்தில் இடம்பெற்றது. இக்கூட்டத்தின்போது புதிய நிர்வாகத்தெரிவு இடம்பெற்றது. இதில் இச்சங்கத்தின் புதிய தலைவராக மீண்டும் அருட்திரு தமிழ் நேசன் அடிகளார் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். பொதுச் செயலாளராக ஆசிரியர் எம். சிவானந்தனும் பொருளாளராக ஜனாப் எஸ். எச். எம். ஷிஹாரும் தெரிவுசெய்யப்பட்டனர். சிரேஷ்ட துணைத் தலைவராக மூத்த ஊடகவியலாளர் ஜனாப் மக்கள் காதரும் துணைத் தலைவராக தர்மகுமார குருக்களும் துணைப் பொதுச் செயலாளராக திருமதி பெப்பி விக்ரர் லெம்பேட்டும் நிர்வாகச் செயலாளராக மன்னார் அமுதனும் தெரிவுசெய்யப்பட்டனர். இதைவிட ஆறு நிர்வாகக்குழு உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். அவர்கள் வருமாறு:

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## மன்னாரில் தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் மன்னாரில் இடம்பெறவுள்ளது. இதற்கான ஆலோசனைகளும் ஆயத்தங்களும் இடம்பெற்று வருகின்றன. இதுபற்றிய விரிவான தகவல்களை அடுத்த மாதா மன்னா தாங்கி வரும்.

## இஸ்லாமியர்களும், கிறிஸ்தவர்களும் நாட்டில் அச்சத்துடன் வாழும் நிலை

மன்னாரில் அந்தோனியார் திருச்சுருபத்தை சேதமாக்கி தேவாலயத்திற்குள் 'மலத்தை' வீசியெறியும் அளவுக்கு மனித மனம் கொடுரமாகியுள்ளது. இந்த நிலைமையை உடனடியாகத் தடுக்காவிடின் நாட்டில் கொடுரத்தன்மை வேரூன்றிவிடும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், மேல் மாகாண சபை உறுப்பினருமான கலாநிதி ந. குமரகுருபரன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

அண்மைக்காலங்களாக தினமும் முஸ்லிம் பள்ளிவாசல்கள் சேதமாக்கப்படுவது வழமையான விடயமாகிவிட்டது. அதன் கோர்வையாக இன்று கிறிஸ்தவ தேவாலயங்கள்மீதும் தாக்குதல்கள் நடத்தப்படும் படலம் ஆரம்பமாகியுள்ளது.

மன்னாரில் அந்தோனியார் திருச்சுருபம் சேதமாக்கப்பட்டு தேவாலயத்திற்குள் மலம் வீசப்பட்டுள்ளது. அந்தளவிற்கு மனிதமனம் கொடுரமாகிவிட்டதோடு காட்டுமிராண்டித்தனம் நாட்டில் தலைதூக்கியுள்ளது.

பொதுபலசேனாவின் நடவடிக்கைகளால் கிறிஸ்தவ, இஸ்லாமிய மக்கள் அச்சமடைந்துள்ளனர். ஏனெனில் இச்சம்பவங்கள் தொடர்பில் ஜனாதிபதி மௌனமாக உள்ளார். எனவே இந்த மதவாத அமைப்பின் பின்னணியில் பலம் வாய்ந்த கை ஓங்கியிருப்பதாக எண்ணியே இம்மக்கள் அச்சத்துடன் வாழ்கின்றனர்.

இந்தநிலை தொடருமானால் நாட்டில் மதவாதக் கலவரங்கள் தலைதூக்குவது நிச்சயமாகும். இலங்கை பல்லின, பல மதங்களைச் சேர்ந்தவர்கள் வாழும் நாடு எனவே அவர்களிடையே பதற்றம் நிலவுவது நாட்டுக்கு நல்லதல்ல.

இதனால் ஜனாதிபதி இப்பிரச்சினையில் நேரடியாக தலையிட்டு கிறிஸ்தவ, இஸ்லாமிய மக்களின் பீதியை போக்கி மனதில் நம்பிக்கையை ஏற்படுத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

## மன்னார் கோட்டை இராணுவத்தினரிடம்



மன்னாரிலுள்ள பழைமை வாய்ந்த ஒல்லாந்தர் கோட்டையை இராணுவத்தினர் பொறுப்பேற்கவுள்ளதாக அறியவந்துள்ளது.

இந்த ஒல்லாந்தர் கோட்டையின் பராமரிப்பு மற்றும் அதனை நிர்வகிக்கும் பொறுப்பு என்பனவற்றை இராணுவத்திடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக வன்னிப் பிரதேசத்துக்கான கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா தெரிவித்தார்.

மேலும் இராணுவத்தினரிடம் இந்தக் கோட்டை ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் உல்லாசப் பயணிகளைக் கவரும் வகையில் உணவகமொன்று அங்கு அமைக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். தற்போது இந்த ஒல்லாந்தர் கோட்டை அதன் புராதனத் தன்மைக்குப் பங்கம் ஏற்படாதவாறு இராணுவத்தினரால் புனரமைக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கூட்டமைப்பின் 3 கட்சிகளின் தலைவர்கள்

# மன்னார் ஆயருடன் சந்திப்பு

### பதிவின் அவசியம் தொடர்பில் ஆராய்வு

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் மூன்று கட்சிகளின் தலைவர்கள் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை தலைமையிலான சிவில் சமூகப்பிரதிநிதிகளை சந்தித்துப் பேசியுள்ளனர்.

மன்னார் ஆயரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் ஈ.பி.ஆர்.எல்.எப்.இன் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி., ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., புளோட் தலைவர் தருமலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் உட்பட பலரும் கலந்துகொண்டனர். இந்தச் சந்திப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி கலந்துகொள்ள இருந்தபோதிலும் தவிர்க்க முடியாத காரணத்தால் அவர் பங்கேற்கவில்லை.

இந்தச் சந்திப்பின்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. கூட்டமைப்பை பதிவுசெய்து அதனைப் பலப்படுத்துவதன் அவசியம் குறித்து இங்கு வலியுறுத்தப்பட்டது.

ஆயருடனான சந்திப்பையடுத்து மன்னாரில் உள்ள ரெலோ அலுவலகத்தில் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நான்கு கட்சிகளின் தலைவர்களும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

## இலங்கை பௌத்த நாடு அதனைப் பாதுகாப்போம் பொதுபல சேனா தேரர் கூறுகிறார்

இலங்கை ஒரு பல்லின நாடு அல்ல என்று பொது பல சேனா அமைப்பின் உறுப்பினர் மெதகொட அபோத்ன தேரர் தெரிவித்தார். அந்த அமைப்பின் வாராந்தக் கூட்டத்தொடர் கடந்த மார்ச் மாதம் 24ஆம் திகதி நடைபெற்றது. அதில் கருத்து வெளியிடுகையில் இலங்கை ஒரு சர்வமத நாடு அல்ல. இது ஒரு பௌத்த நாடு எனவே சிங்கள – பௌத்த மக்களைத் தவிர ஏனைய இனங்கள் இலங்கையில் ஆட்சி அமைப்பதில் இருந்து நாட்டைப்பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்று தேரர் தெரிவித்தார்.

பங்குத்தந்தை அவமதிக்கப்பட்டதைக் கண்டித்து

# முருங்கனில் ஆர்ப்பாட்டம்









ஆட்காட்டிவெளி பங்குத்தந்தை அவர்கள் முருங்கன் பகுதியில் நீர்ப்பாசனத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவரால் தரக்குறைவாக நடத்தப்பட்டதையும், அவர்மீது மரியாதைக் குறைவான வார்த்தைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதையும் கண்டித்து கடந்த ஏப்ரல் 19ஆம் திகதி அன்று நூற்றுக்கணக்கான பொது மக்கள் முருங்கன் (செம்மண்தீவு) நீர்ப்பாசணத் திணைக்கள அலுவலகக் கட்டிடத்திற்கு முன்பாக ஒன்றுதிரண்டு குறித்த அதிகாரிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அன்று காலை 9.45 மணியிலிருந்து 10.30 மணிவரை பொதுமக்கள் பல்வேறு வாசகங்களைக் கொண்ட சுலோக அட்டைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அப்பகுதிக்கு அரச அதிகாரிகள் எவரும் வராததால் ஆத்திரமடைந்த அவர்கள் மன்னார் மதவாச்சி பிரதான வீதியை முற்றுகையிட்டு வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் காலை 10.30 மணி தொடக்கம் 11.30 மணிவரை மன்னார் - மதவாச்சி பிரதான வீதி ஊடாக அனைத்து போக்குவரத்துகளும் சுமார் ஒரு மணித்தியாலயம் முற்றாக ஸ்தம்பிதமடைந்தன.


வீதி மறியல் போராட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் அடம்பன் கன்னாட்டி கிராமத்தில் கடந்த ஏப்ரல் 17ஆம் திகதி அன்று பிலிப்பு நேரியார் சிலை உடைக்கப்பட்டதையும் ஏப்ரல் 18ஆம் திகதி அன்று முருங்கன் பகுதியில் உள்ள புனித கிறிஸ்து அரசர் ஆலயம் தாக்கப்பட்ட சம்பவத்தையும் கண்டித்துக் கோஷங்களை எழுப்பினர்.

இந்நிலையில் முருங்கன் பகுதிக்கு வருகை தந்த மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டி மெல் வீதி மறியலில் ஈடுபட்ட பொதுமக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதுடன் கத்தோலிக்க மத குருவை அதிகாரி ஒருவர் நிந்தித்துப் பேசியது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார். பொதுமக்கள் மகஜரொன்றையும் அவரிடம் கையளித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடுவுக்கு இம்முறை இரயிலில் செல்லலாம்!

## இரவு பகலாகப் புனரமைப்புப் பணிகள்





மன்னாரிலிருந்து மடு வரையிலான இரயில் பாதையைச் செப்பனிடும் பணிகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன. மடுமாதா ஆலய பெருந்திருவிழாக்கள் (யூலை, ஓகஸ்ட்) ஆரம்பமாகவுள்ளதால், பயணிகளின் நன்மை கருதியே இந்தப் பணிகள் அவசர அவசரமாக இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

போரினால் சேதமடைந்த மதவாச்சி இரயில் நிலையத்திலிருந்து தலைமன்னார் இறங்குதுறை வரையான சுமார் 106 கிலோமீற்றர் நீளமான இந்தப் பாதையைச் செப்பனிடும் பணிகளை இந்திய நிறுவனமான 'இர்கோன்' மேற்கொண்டு வருகிறது. இதில் முதற்கட்டமாக மதவாச்சியிலிருந்து மடு வரையான 43 கிலோமீற்றர் பாதையின் திருத்தப் பணிகள் மடு தேவாலய வருடாந்த பெருந்திருவிழாவுக்கு முன்னர் முடிக்கப்பட்டு இரயில் சேவை ஆரம்பிக்கப்படுமென நம்பப்படுகிறது.

இதன்மூலம் மடுதேவாலயத்துக்கு மதவாச்சி ஊடாகச் செல்லும் பயணிகள் பெரிதும் நன்மையடைவரென எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பாதை திருத்தப் பணிகள் தற்போது செட்டிகுளப் பகுதியில் இரவு பகலாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சகல சமயங்களும் சமாதானம் நோக்கியே பயணிக்கின்றன

## மட்டக்களப்பு ஆயர் பொன்னையா ஆண்டகை



உலகம் இன்று உண்மையான மாற்றத்தை வேண்டி நிற்கிறது. அதற்கு ஒவ்வொருவரும் தன்னலத்தை விட்டு பிறர் நலம் பேணுவோமாயின் அது சாத்தியமாகும்.

இவ்வாறு மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு ஜோசப் பொன்னையா ஆண்டகை கல்முனையில் நடைபெற்ற சர்வ சமய மாநாட்டில் பிரதான உரையாற்றும்போது தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய ஆயர் தெரிவித்ததாவது, உலகிலுள்ள சகல சமயங்களும் சமாதானத்தை நோக்கியே பயணிக்கின்றன. உலகம் இன்று விஞ்ஞானத்திலும் தொழில்நுட்பத்திலும் உச்சக்கட்ட வளர்ச்சியைக் கண்டுள்ளபோதும் உண்மையான சமாதான சகவாழ்வைக் கண்டுபிடிக்கவில்லை. உலகிலுள்ள மக்கள் சமயத்தின் பேராலும், இனத்தின் பேராலும், மொழியின் பேராலும், சாதியின் பேராலும், நிறத்தின் பேராலும் வேறுபடுத்தப்பட்டுள்ளனர். இது தவறு. மனிதன் அணுகுண்டைக் கண்டுபிடித்தான். அது பேரழிவைத் தந்தது. ஆனால் சமாதானத்தை வரவழைக்கக்கூடிய அன்பு மொழியைக் கண்டுபிடிக்கத் தவறிவிட்டான். அந்த அன்பு மொழியை நாம் கைக்கொள்ளும் பட்சத்தில் மன்னிப்பு, கருணை, விட்டுக்கொடுப்பு, பொறாமையின்மை, வெறுப்பின்மை போன்ற நல்ல பண்புகள் தானாகவே உருவாகும். மனிதனிடையே நிலவும் முரண்பாடுகள், விரிசல்கள் பிளவுகளை நீக்க உண்மையான சமாதானம் மலர வேண்டும். இது அந்த அன்பு மொழியினூடாகவே முடியும்.

# பொதுநலவாய மாநாடு இலங்கையில் வேண்டாம்

## கனேடியப் பிரதிநிதிகளிடம் யாழ். ஆயர் வலியுறுத்தல்



பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடைபெறுவதாக இருந்தால், அது தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதாக அமைய வேண்டும். அது தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கத் தவறுமாக இருந்தால் அவ்வாறானதொரு மாநாடு இலங்கையில் நடைபெறக்கூடாது. இவ்வாறு கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த பொதுநலவாய மாநாட்டு விசேட குழுவின் செனற்றர் மற்றும் கனேடியத் தூதுவர் ஆகியோரிடம் வலியுறுத்தினார் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை.

பொதுநலவாய மாநாட்டு விசேட குழுவின் செனட்டர் ஹக் டீ. சீகல், கனேடிய தூதுவர் ஷெலி விடிங் உட்பட 5 பேர் கொண்ட குழுவினர் யாழ். ஆயரை அவரது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே ஆயர் இதனைத் தெரிவித்தார்.

**மன்னா வாசகர்களே,**

மன்னா பத்திரிகைப் பணத்தை காலம் தாழ்த்தாமல் உடனடியாகச் செலுத்துவதன் மூலம் மன்னா விநியோகஸ்-தர்களுக்கு உங்கள் மேலான ஒத்துழைப்பை வழங்குங்கள்.

- மன்னா நிர்வாகம்

# நடந்த நடப்புக்கள்

## தருவது நாங்கள் ....... தீர்மானிப்பது நீங்கள்.......

### இதுவரை 8000 இலங்கையர்கள் ஆஸிக்கு படையெடுப்பு

இலங்கையில் நடைபெற்று வந்த யுத்தம் கடந்த 2009ஆம் ஆண்டு மே மாதம் முடிவுக்கு வந்த நாள் தொடக்கம் இந்தியாவில் உள்ள முகாம்களைச் சேர்ந்த அகதிகள் அடங்கலாக இதுவரை ஆகக்குறைந்தது 8000 இலங்கையர்கள் அவுஸ்திரேலியாவை வந்தடைந்துள்ளதாக அவுஸ்ரேலிய குடிவரவுத் திணைக்கள வட்டாரமொன்று தெரிவித்துள்ளது.

### மது அருந்துவோர் பட்டியலில் இலங்கைக்கு 4ம் இடம்

உலகிலேயே மது அருந்துவோர் அதிகமாகவுள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கை நான்காம் இடத்தில் உள்ளது.

### 31,029 வெடிக்காத வெடிபொருட்கள் மீட்பு

போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 2009 ஆம் ஆண்டு மே மாதம் முதல் இலங்கை இராணுவத்தின் மிதிவெடியகற்றும் பிரிவினரால் சுமார் 31 ஆயிரம் 29 வெடிக்காத வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கண்ணிவெடிகள் தொடர்பான சர்வதேச விழிப்புணர்வு தினம் கடந்த வாரம் கொழும்பில் அனுஷ்டிக்கப்பட்டபோது இந்தக் தகவல்கள் வெளியிடப்பட்டன.

### தெற்கில் புலமைப் பரிசில் பரீட்சையில் 34,000 மாணவர்கள் சித்திபெறவில்லை

கடந்த வருடம் தென்னிலங்கையில் 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய 34 ஆயிரம் பிள்ளைகள் சித்தியடையவில்லையென தென் மாகாண கல்வி அமைச்சர் சந்திமராச புத்திரம தெரிவித்துள்ளார்.

### இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக 65 வீத மாணவர்கள் க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தி

கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சை பெறுபேற்று முடிவுகளின்படி முதல் பத்து இடங்களுக்குள் யாழ். வேம்படி மகளிர் பாடசாலை இடம்பெற்றுள்ளதாகவும், இலங்கை கல்வி வரலாற்றில் முதல் முறையாக இம்முறை 65 வீதமான மாணவர்கள் க.பொ.த சாதாரண பரீட்சையில் சித்தி பெற்று சாதனை படைத்துள்ளதாகவும் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

### இருதயக்கோளாறினால் வருடமொன்றில் 7,440 பேர் மரணிக்கின்றனர்

வருடமொன்றிற்கு 7,440 பேர் இலங்கையில் இருதயக்கோளாறு காரணமாக மரணமடைவதாக தகவல் வெளியிட்டுள்ள சுகாதார அமைச்சு நாளொன்றுக்கு 600 நோயாளர்கள் சிகிச்சைக்கு அனுமதிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

### கிளிநொச்சி, முல்லைத்தீவில் இருந்து காணாமற்போனோர் தொடர்பில் 1000 முறைப்பாடுகள்

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இரு மாவட்டங்களிலும் காணாமற்போனோர் தொடர்பாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் தமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணாமற்போனோர் தொடர்பான விவரங்களைத் திரட்ட ஆரம்பித்தபோது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன என்றார்.

### நாட்டில் தினமும் 1000 கருக்கலைப்பு

இலங்கையில் நாள்தோறும் ஆயிரம் கருக்கலைப்பு சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன என்று சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார்.

இலங்கைப் பெண்களின் கல்வியறிவு 90 வீதமாகவும் தொழில் பங்களிப்பு 33 வீதமாகவும் உயர்வடைந்துள்ளது. இவ்வாறான ஒரு பின்னணியில் அதிகளவான பெண்கள் கருத்தரிப்பதைப் பொருளாதார ரீதியான பிரச்சினையாக கருத முடியாது என்று அவர் தெரிவித்தார். இதனை ஒரு சமூகப் பிரச்சினையாகவே கருத வேண்டும். இது தொடர்பிலான குற்றச்சாட்டை சுகாதாரத் துறையினர்மீது சுமத்த முடியாது என்று அவர் மேலும் கூறினார்.

### போருக்குப் பின்னர் 19 ஆயிரத்து 420 சிறுவர்கள் அவயவங்களை இழந்துள்ளனர்

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19ம் திகதிக்குப் பின்னர் 19 ஆயிரத்து 420 சிறுவர்கள் போரால் பாதிக்கப்பட்டுள்ளமை பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இப்பதிவுகளுக்கமைய கண், காது, மூக்கு மற்றும் கை, கால் போன்ற அவயவங்களை இழந்தவர்களாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 7 ஆயிரத்து 410 சிறுவர்களும், கிளிநொச்சியில் 7 ஆயிரத்து 336 சிறுவர்களும், யாழ்ப்பாணத்தில் 4 ஆயிரத்து 674 சிறுவர்களும் வசிக்கின்றமை தெரியவந்துள்ளது. எனினும் இச்சிறுவர்களுக்கு இதுவரையான காலப்பகுதியில் எந்தவொரு அரச, சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளும் கிடைக்கவில்லை என ஆதங்கம் வெளியிட்டுள்ளது.

### 2012இல் மட்டும் 15,000 பேர் புற்றுநோயால் பாதிப்பு

கடந்த வருடத்திற்குள் மட்டும் 15 ஆயிரம் புற்றுநோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# மதக் கலவரம் வெடிக்கும் அபாயம்

## மனித உரிமை ஆணைக்குழு முன்னெச்சரிக்கை

மத முரண்பாடுகளால் கலவரம் ஏற்படக்கூடிய அபாய நிலை உருவாகியுள்ளது என்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழு முன்னெச்சரிக்கை விடுத்துள்ளது. நாட்டில் நிலவிவரும் சூழ்நிலைமைகள் அபாயகரமானவை எனவும் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டில் இடம்பெற்றுவரும் மத முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கு சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டிய அரச அமைப்புக்கள் மௌனம் காத்து வருவதாகவும் இந்த நிலைமை பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் தெரிவித்துள்ளது.

தற்போது நிலவிவரும் பதற்ற நிலைமையானது இன சமூகங்களுக்கு இடையில் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் அமைந்துள்ளது.

பேச்சுக்கள் இணக்கப்பாடுகளின் மூலம் முரண்பாடுகளைக் களைய முடியும். இன மற்றும் மதப் பிரிவினைவாதங்களை ஏற்றுக்கொள்ளக்கூடாது. இது ஆபத்தானது. அரசியல் கட்சிகளோ ஏனைய அமைப்புக்களோ நாட்டின் தற்போதைய சூழ்நிலையை தங்களது சுயலாப நோக்கங்களுக்காக பயன்படுத்திக்கொள்ளக் கூடாது. சமூகங்களை நல்வழிப்படுத்தவும், நல்லொழுக்கம்மிக்க மனிதர்களை உருவாக்கவுமே சமயங்கள் உருவானது என்றும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

## மன். கிறிஸ்தவ தேவாலயங்கள்மீதான தாக்குதலுக்கு

# இந்து மாமன்றம் கண்டனம்

மன்னார் முருங்கன் பகுதியில் கத்தோலிக்க, மெதடிஸ்த ஆலயங்கள் தாக்கப்பட்டமைக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. மாமன்றம் அனுப்பிவைத்துள்ள கண்டன அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு.

பௌத்த தர்மம் போற்றப்படுகிறது என்று சொல்லப்படும் இந்நாட்டில் ஏனைய மத வழிபாட்டுத்தலங்களை சேதப்படுத்துதல் மக்களின் மத நம்பிக்கையை இழிவுபடுத்தும் செயலாகும்.

முருங்கன் கிராமத்திலுள்ள கத்தோலிக்க, மெதடிஸ்த ஆலயங்களினுள் இனந்தெரியாத குழுவினர் புகுந்து அங்கிருந்த பூசைப் பொருட்கள், உடைமைகளைச் சேதப்படுத்தியுள்ளனர். இச்செய்தியைப் பார்த்து அகில இலங்கை இந்து மாமன்றம் அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றது. இதற்கு எதிராக எமது கண்டனத்தை தெரிவிக்கின்றோம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மட்டு சிறையில் உயிர்த்த ஞாயிறு ஆராதனை

மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகையினால் மட்டக்களப்பு சிறைச்சாலையில் உயிர்த்த ஞாயிறு ஆராதனை நடாத்தப்பட்டது. எமது பாவங்களுக்காக இயேசு சிலுவையில் அறையப்பட்டு எம்மை இரட்சிப்பதற்காக மீண்டும் உயிர்பெற்றார். இப்படியான அர்ப்பணிப்போடும் மனித நேயத்தோடும் நாம் வாழப் பழகிக்கொள்ள வேண்டும் என்று கைதிகளின் சீர்திருத்தத்திற்கான ஆராதனையில் கலந்துகொண்டு உரையாற்றும்போது ஆயர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

### இறை அழைத்தலுக்கான உலக செபநாள் 21.04.2013

# இறை அழைத்தல்களை ஊக்குவியுங்கள்

### அருட்தந்தை சேவியர் குரூஸ் அடிகளார் குருக்களிடம் வேண்டுகோள்



இவ்வாண்டு இறை அழைத்தலுக்கான உலக செபநாள் கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி ஞாயிறு தினம் கொண்டாடப்பட்டது. இந்நாளையொட்டி மன்னார் மறைமாவட்ட இறை அழைத்தல் ஊக்குனர் அருட்திரு. சேவியர் குரூஸ் அடிகளார் வெளியிட்ட அறிக்கையில் இந்த நாளின் முக்கியத்துவத்தைப்பற்றி குருக்கள் தமது பங்கு மக்களுக்கு விளங்கப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

"இந்த ஞாயிறு தினமானது குருக்கள் மற்றும் துறவியருக்கான அழைத்தல்களை ஊக்குவிக்கும் செபநாளாக அனுசரிக்கப்படுகின்றது. அத்துடன் இந்தத் தூய்மையான நோக்கத்திற்காக தமது செபங்களையும் தியாகங்களையும் ஒப்புக்கொடுக்கும்படி குருக்கள் தமது மக்களை ஊக்குவிக்க வேண்டும். இறைவனுடைய அழைத்தலுக்கு விசுவாசத்துடனும் பெருந்தன்மையுடனும் தமது பிள்ளைகள் பதில் அளிக்க பெற்றோர்கள் அவர்களை ஊக்குவிக்கவேண்டும்" என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொருத்தமான, சிறந்த வேட்பாளர்களைக் கண்டுபிடித்து அவர்களைக் கண்காணித்து வளர்க்கும் பொறுப்பு மேய்ப்பர்கள் என்ற வகையில் குருக்களுக்கு உண்டு. உங்களுடைய ஊக்குவிப்பினாலும், தொடர் கண்காணிப்பினாலும் இளையோர்கள் மிகுந்த உற்சாகத்துடன் குருத்துவ அல்லது துறவற வாழ்வை அரவணைத்து இறைவனுக்கும் திருச்சபைக்கும் பணிபுரிய முன்வருவார்களாக எனவும் அடிகளார் கேட்டுக்கொண்டுள்ளார்.

## மன்னார் குருசுக்கோவிலில் சிறார்களின் உயிர்ப்பு விழா ஒன்றுகூடல்



மன்னார் புனித செபஸ்தியார் பேராலயப் பங்கை சார்ந்த மூர்வீதி, உப்புக்குள வலயத்தைச் சார்ந்த சிறார்களுக்கு கடந்த மார்ச் மாதம் 30ம் திகதி ஞாயிறு அன்று குருசுக்கோவில் மைதானத்தில் உயிர்ப்புவிழா ஒன்றுகூடல் இடம்பெற்றது. OMMI சபையை சார்ந்த அருட்சகோதரிகள் றீற்றா குணநாயகம், றோசலி தேவசகாயம் என்பவர்களால் இந்நிகழ்வு நடாத்தப்பட்டது.

இந்த ஒன்றுகூடலில் 1ம் ஆண்டு தொடக்கம் 13ம் ஆண்டு வரையிலான பெண்கள், ஆண்களாக 48 சிறார்கள் பங்குகொண்டார்கள்.

மன்னார் பேராலய உதவிப்பங்குத்தந்தை அருட்பணி. டெஸ்மன் ஆஞ்சலோ அடிகளாரும் இதில் பங்கேற்றார். அனைத்துச் சிறார்களுக்கும் விளையாட்டுப் போட்டிகள் நடாத்தி சிறிய பரிசில்களும் இனிப்புகளும் வழங்கப்பட்டன. பெற்றோர்களும் இந்நிகழ்வுக்கு வருகை தந்து ஒத்துழைப்பு வழங்கினார்கள்.

## மன்னார் கல்வி வலயத்தில்

# சாதனையாளர்கள் கௌரவம்



மன்னார் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் சாதனை புரிந்த சாதனையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலையில் நடைபெற்றது. நிகழ்வுக்கு மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் மீரா முகைதீன் முஹம்மது சியான் தலைமை தாங்கினார்.

2012ஆம் ஆண்டிற்கான பாடவிதானம் மற்றும் இணைப்பாட விதானம் ஆகியவற்றில் மாகாண மட்டம், தேசிய மட்டம் ஆகியவற்றில் சாதனை புரிந்த 254 சாதனையாளர்கள் குறித்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக அமைச்சர் ரிஷாட் பதியுதீன், மற்றும் கௌரவ விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஹீனைஸ் பாருக் ஆகியோர் கலந்துகொண்டனர். விருந்தினர்களாக வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன், மன்னார் மாவட்ட அரச அதிபர் சரத் ரவிச்சந்திர, பிரதேசச் செயலாளர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பொலிஸ் அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் சிறந்த ஆசிரியர்களும் அதிபர்களும் கௌரவிக்கப்பட்டதோடு 254 மாணவ சாதனையாளர்களும் பதக்கம், வெற்றிக்கேடயம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

வலயக்கல்விப் பணிமனை
மன்னார்

## 'திருவுள இராகங்கள்' இசை இறுவட்டு வெளியீட்டு விழா

பேசாலையின் மூத்த இசைக்கலைஞர்களுள் ஒருவரும், சிறந்த இசையமைப்பாளரும், பேசாலை புனித சிசிலியாள் பாடகர் குழாமை நெடுங்காலம் நெறிப்படுத்திவந்தவரும், ஓய்வுபெற்ற பாராளுமன்ற உரைபெயர்ப்பாளருமான திரு. எட்வேட் பீரிஸ் அவர்களால் இயற்றி இசையமைக்கப்பட்ட, ஆலய வழிபாடுகளில் பாடத்தக்க 12 பாடல்கள் அடங்கிய "திருவுள இராகங்கள்" எனும் இசை இறுவட்டு கடந்த 08.04.2013 திங்கட்கிழமையன்று தோட்டவெளி வேதசாட்சிகளின் இராக்கினி ஆலய வளாகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போது வெளியிட்டு வைக்கப்பட்டது.



பிரதம விருந்தினராக மடுமாதா சிறிய குருமட அதிபர் அருட்பணி. அ. சேவியர் குருஸ் அடிகளாரும், சிறப்பு விருந்தினராக இலங்கை திருவுளச் சபையின் மாகாண அதிபர் அருட்பணி. அ. சகாயநாதனும், கௌரவ விருந்தினர்களாக மன்னா பதிப்பாசிரியர் அருட்பணி. தமிழ் நேசன், அருட்பணி. யூட் குருஸ், அருட்பணி. ஞானராஜ் குருஸ், அருட்பணி. வின்சன் பற்றிக் (அமதி) ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## வங்காலை முதியோர் சங்கத்தின் 10 ஆண்டுகள் நிறைவு விழா

வங்காலை புனித சூசையப்பர் முதியோர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு 10 ஆண்டுகள் நிறைவடைந்ததால் அத்தினத்தையும் உயிர்ப்பு விழாவையும் மையப்படுத்தி கடந்த மார்ச் மாதம் 31ஆம் திகதி இச்சங்கம் ஒன்றுகூடல் நிகழ்வொன்றை நடாத்தியது.

இச்சங்கம் முன்னாள் நானாட்டான் பிரதேசச் செயலாளர் திரு. அ. பத்திநாதன் அவர்களின் பணிப்புரைக்கமைவாக முன்னாள் நானாட்டான் பிரதேச சமூக சேவைகள் உத்தியோகஸ்தர் திருமதி. ஜே. மரியைப்பிள்ளை அவர்கள் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு 9.7.2004 அன்று அரசால் பதிவுசெய்யப்பட்ட சங்கமாக மலர்ந்தது. இச்சங்கம் பல பரிசில்களும் பாராட்டுக்களும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

நிறைவு தின விழாவில் பிரதம அதிதியாக மன்னார் மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகஸ்தர் திருமதி. ஜே. மரியைப்பிள்ளை அவர்களும் சிறப்பு அதிதியாக முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. எம். ஏ. றெவல் அவர்களும் நானாட்டான் பிரதேச சமூக சேவைகள் உத்தியோகஸ்தர் திரு.எஸ். சந்திரபோஸ் அவர்களும் கலந்துகொண்டனர். விசேட அதிதிகளாக வங்காலை உதவிப்பங்குத்தந்தை அருட்பணியாளர் எமில் எழில்ராச் அடிகளாரும் வங்காலை கன்னியர் மடத்தலைவியும் அருட் சகோதரிகளும் கலந்துகொண்டனர். பிரமுகர்களாக மன்னார் மறைமாவட்ட முதியோர் சங்கங்களின் சமாசப் பிரதிநிதிகளும் கலந்து சிறப்பித்தனர்.

இவ்விழாவை முன்னிட்டு 20.03.2013 அன்று சிறப்பான சிரமதானப்பணி இடம்பெற்றது. இவ்விழாவின்போது வினாவிடைப்போட்டியும் பாடல் போட்டியும் இடம்பெற்றது. போட்டியில் பங்குபற்றியோருக்கு ரொக்கப்பணப் பரிசுகளும், பரிசில்களும் வழங்கப்பட்டன. சிரமதானப்பணியில் பங்குபற்றியோருக்கு அன்பளிப்புப் பொருட்கள் வழங்கப்பட்டன.

தகவல் :- திரு. எஸ். எஸ். லெம்பேட், தலைவர்















## மறையறிவுப்பு ஞாயிறு நிதி சேகரிப்பு

மன்னார் மறைமாவட்டம் - 2012

| பங்குகள் | தொகை |
|---|---|
| 1. சிலாவத்துறை | 61,336.00 |
| 2. வவுனியா | 291,000.00 |
| 3. அரிப்பு | 92,000.00 |
| 4. மன்னார் | 644,055.00 |
| 5. அளவக்கை | 53,200.00 |
| 6. பேசாலை | 415,400.00 |
| 7. பம்பைமடு | 14,506.00 |
| 8. தாழ்வுபாடு | 205,380.00 |
| 9. ஓமந்தை | 70,000.00 |
| 10. ஆக்காட்டிவெளி | 72,000.00 |
| 11. கற்கிடந்தகுளம் | 102,540.00 |
| 12. கீளியன்குடியிருப்பு | 50,000.00 |
| 13. தேவன்பிட்டி | 300,500.00 |
| 14. வேப்பங்குளம் | 135,000.00 |
| 15. கோமரசன்குளம் | 57,400.00 |
| 16. விடத்தல்தீவு | 62,768.00 |
| 17. இலுப்பைக்குளம் | 44,110.00 |
| 18. செட்டிகுளம் | 33,000.00 |
| 19. தச்சனாமருதமடு | 5,000.00 |
| 20. நானாட்டான் | 21,300.00 |
| 21. தலைமன்னார் | 113,963.00 |
| 22. அடம்பன் | 40,000.00 |
| 23. உயிலங்குளம் | 39,800.00 |
| 24. வஞ்சியங்குளம் | 28,000.00 |
| 25. வங்காலை | 107,350.00 |
| 26. மடு | 50,000.00 |
| 27. பண்டிவிரிச்சான் | 40,360.00 |
| 28. பள்ளிமுனை | 74,500.00 |
| 29. தோட்டவெளி | 200,190.00 |
| 30. குஞ்சுக்குளம் | 100,000.00 |
| 31. எழுத்தூர் | 100,000.00 |
| 32. முருங்கன் | 50,300.00 |
| 33. காத்தான்குளம் | 67,000.00 |
| 34. கனகராயன்குளம் | 7,200.00 |
| மொத்தம் | 3,749,168.00 |

தகவல் : அருட்திரு. எஸ்.அன்ரன், மறைமாவட்ட நிதியாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசுவாச ஆண்டு சிறப்புப் பொழிவு

சிறப்புக் கட்டுரை

# திருவழிபாடே நம்பிக்கையின் மறைபொருள்

கி. அருளப்பு,
தன்னார்வ இறைவார்த்தைப் பணியாளர்,
(விடத்தல்தீவு) சின்னக்கடை, மன்னார்.

### "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்று இயேசு சொன்னாரே தவிர, "இதை நினைவாக வைத்திருங்கள்" என்று சொல்லவில்லை!



கடவுள் வேறு, வாழ்க்கை வேறு அல்ல! வழிபாடு வேறு, கடமை வேறு அல்ல! மதம் என்பது கோவில் மட்டுமல்ல! வாழ்க்கையே மதம்தான்! மத வாழ்க்கையின் அடித்தளம்தான் இறை உணர்வு. இதுவே இறை நம்பிக்கை. நம்முடைய உடல்பூராகவும் இரத்தம் செறிந்து பரந்திருப்பதுபோல் எம் இறை நம்பிக்கையும் எம் உடலோடு செறிந்துள்ளது. இது போலவே வாழ்வும் வழிபாடும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்த பிரிக்கமுடியாத இரு யதார்த்தங்கள். இரண்டு அன்பு உள்ளங்கள் திருமண பந்தத்தில் இணைகின்றபோது அங்கு வாழ்வு மலர்கின்றது; உறவு மலர்கின்றது; மனிதம் மலர்கின்றது. இதைப்போலவே இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் உறவு மலருகின்றபோது அந்த உறவு புனிதமாகின்றது; அதுவே வழிபாடாகின்றது.

இறை - மனித உறவு மனிதர்களுக்கிடையேயான உறவுக்கு வித்திடுகின்றது. மனித உறவானது இறை மனித உறவை உறுதிப்படுத்துகின்றது. இறை மனித சந்திப்பும் ஒன்றிப்பும்தான் திருவழிபாடு. வாழ்விலே பிரதிபலிக்காத வழிபாடும் வழிபாட்டில் வலிமை பெறாத வாழ்வும் வீணானதே! திருவழிபாடு எல்லோரும் பங்குபற்றும் ஓர் நிகழ்வு. இதன் உட்பொருள் இது ஓர் மறை உடலின் வழிபாடு - அதாவது இறை மக்கள் இறை மகனோடு சேர்ந்து தந்தைக்குச் செய்யும் வழிபாடு.

இவ்வழிபாட்டுக்கு மூன்று கூறுகள் உண்டு. அரச பணி, குருத்துவப் பணி, இறைவாக்குப் பணி. இதுவே திருச்சபையின் பணி. இறைவனுக்கு மாட்சியையும் மனிதனுக்கு மீட்பையும் கொண்டுவருவதே திருவழிபாட்டின் நோக்கம். இறைவனுக்கு ஆராதனை செய்து, மனிதனைப் புனிதப்படுத்தி கிறிஸ்தவ சமுதாயத்தை கட்டியெழுப்புவதே இதன் முக்கிய பணி. கல்வாரிப்பலி எம்முடைய அன்றாட வாழ்க்கைப் பலி என்பதை நாம் மறந்துவிடல் ஆகாது.

இதுவே எமது நம்பிக்கையின் வாழ்வு! இவ்வழிபாட்டின் மத்தியில் நற்கருணை நிகழ்வு மிகமிக முக்கியமானது. இதன் நிறைவில் குருவானவர் இது விசுவாசத்தின் மறைபொருள் என்று உச்சரிக்கும்போது இறைமக்கள் அனைவரும் பதில் மொழியாக, "ஆண்டவரே, தேவரீர் வருமளவும் உமது மரணத்தை அறிக்கையிடுகின்றோம். உமது உயிர்ப்பையும் எடுத்துரைக்கின்றோம்" என்று பதில் கொடுக்கின்றனர். எப்போது? எப்படி? எங்கே? இதை நாம் செயல்படுத்தினோம் என்பதை நாம் ஒவ்வொருவரும் கேட்டுப் பாக்கவேண்டும். திருப்பலி நிறைவிலும் 'சென்று வாழுங்கள்' என்று கூறப்படுகின்றது. அதாவது திருவழிபாட்டு நிகழ்வு அனைத்தையும் எம் அன்றாட வாழ்வில் நாம் நடைமுறைபடுத்த வேண்டுமென நமக்கு நினைவூட்டப்படுகின்றது. இது எம் நம்பிக்கை வாழ்வின் எதிர்நோக்கு.

உயிர் தரும் உணவாம் நற்கருணை நமக்கு வாழ்வு தருகின்றது. இந்நற்கருணை நமது நம்பிக்கை வாழ்வின் பல்வேறு பரிமாணங்களை உணர்த்திநிற்கின்றன. என் தசையைத் தின்று இரத்தத்தை குடிப்பவன் என்னில் நிலைத்து நிற்கின்றான் என்று இறைவார்த்தை கூறுகின்றது. அர்ச்சிக்கப்பட்ட நற்கருணைய்ய மட்டும் நாம் உட்கொள்கின்றோம் என்பதல்ல. இயேசுவினுடைய நற்செய்தியின் விழுமியங்களான அன்பு, நீதி, உண்மை, சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய பண்புகளையும்தான் நாம் உண்கின்றோம். இதை உண்டு, ஜீரணித்து இதிலே வருகின்ற சத்தான சவால்களை எதிர்கொண்டு வாழ எம் ஒவ்வொருவரையும் திருச்சபை அழைக்கின்றது. "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்று இயேசு சொன்னாரே தவிர "இதை நினைவாக வைத்திருங்கள்" என்று சொல்லவில்லை. எனவே நடமாடும் நற்கருணைச் சமூகமாக வாழவும், மறு கிறிஸ்துக்களாக மாற்றப்படுவதுமே நம்பிக்கை வாழ்வில் நம் ஏற்றத்தின் முதல்படியாக அமைகின்றது."ஆகவே "கிறிஸ்து யேசுவை ஆண்டவராக ஏற்றுக் - கொண்டீர்கள். அவரோடு இணைந்து வாழுங்கள். அவரிலே வேரூன்றியவர்களாகவும் அவர்மீது கட்டியெழுப்பப் - பட்டவர்களாகவும் இருங்கள். நீங்கள் பெற்றுக்கொண்ட விசுவாசத்தில் உறுதியாய் நில்லுங்கள். போலிப் போதகர்களாலும் வீணான ஏமாற்றுப்பேச்சுக்களாலும் யாரும் கவர்ந்து கொள்ளப்படாதீர்கள். கவனமாய் இருங்கள். இறைத்தன்மையின் முழுநிறைவும் உடலுருவில் கிறிஸ்துவுக்குள் குடிகொண்டிருக்கின்றதை மறவாதீர்கள்" (கொலேசியர் 2:6-9) என இறைவார்த்தை எமக்கு எடுத்துரைக்கிறது.

இந்த உண்மைகளை நாம் சரியாக அறிந்துகொள்ளும் போதுதான் திருவழிபாட்டை முழுமையாகப் பயன்படுத்த முடியும். திருப்பலியில் விவிலியப் பகுதிகளை வாசிக்கும்போது முழுமையான பின்னணிகளை புரிந்து எந்தச் சூழ்நிலையில் யாருக்கு எதற்காக சொல்லப்பட்டது என்று தெரிந்துகொள்வது எம் விசுவாச வாழ்வுக்கு பயனுடையதாக இருக்கும். இறைவார்த்தை மட்டும்தான் மனிதத்தையும் புனிதத்தையும் எமக்குக் கற்றுத்தருகின்றது.

ஆனால் நம்பிக்கை சார்ந்த வாழ்வைப் பொறுத்த மட்டில் ஒவ்வொரு கிறிஸ்தவனும் அனுபவநிலையை அடைந்திருக்க வேண்டும். இன்றைய நிலை அவ்வாறு இல்லை என்பது மிகுந்த வருத்தத்தைத் தருகிறது. அதாவது இன்று நற்செய்தி அறிவிப்போரின் எண்ணிக்கை பல மடங்காக அதிகரித்துள்ளது. நற்செய்தி அறிவித்தலை பலரும் ஆதாயம் தேடுவதற்கும், பத்திலொரு பங்கு பெற்று தங்கள் வருவாயை பெருக்கிக்கொள்வதற்கும் பயன்படுத்துகின்றனர். தங்களின் சுயவிளம்பரத்திற்காக நற்செய்தியை திரித்துக் கூறி கத்தோலிக்க ஆடுகளை திருடுவதற்கும் பயன்படுத்தி வருகின்றார்கள். இவர்கள் யேசுவோடு இணைந்து வாழும் அனுபவ நிலையில் ஊற்றெடுக்கும் நற்செய்தி அறிவித்தலை செய்யவில்லை என்றே தோன்றுகின்றது. கிறிஸ்துவின் அருள்சாதன வாழ்வோடு தொடர்பில்லாத கிறிஸ்தவர்களாக பிரிவினைச் சபையினர் உள்ளனர்.

திருவருட்சாதனங்கள் ஒவ்வொன்றும் ஆண்டவர் யேசுவின் உடல் ரீதியாகக் கொடுக்கப்பட்டவைகள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஒவ்வொரு கிறிஸ்தவனும், "ஆளும் வளரணும் அறிவும் வளரணும் அதுதாண்டா வளர்ச்சி" என்ற நிலையோடு நின்றுவிடாமல் தன் நம்பிக்கை (விசுவாச) வாழ்விலும் வளரவேண்டும். தன்னையும் வளர்த்து, பிறரையும் வளர்த்து உருவாக்க வேண்டும். "நம்புகிறவர்களுக்கு எல்லாம் நிகழும்" என்று கூறி இறைவார்த்தையின் ஆற்றலை இயேசு தன் சீடர்களுக்கும், மற்றவர்களுக்கும் அறியச்செய்தார். இதனால்தான் பலர் யேசு அனுபவம் பெற்ற பிறகு அவரைப் பின்பற்றி இறை ஆட்சியின் தூதுவர்களாக மாறினர். அவர்கள் நம்பிக்கையில் வளர்ந்தார்கள்; யேசுவின் சீடத்துவ வாழ்வில் பயணித்தார்கள்.

உதாரணமாக கண்ணனுடைய தாசனாய் இருந்து கண்ணா கண்ணா என்று பாடிய கண்ணதாசன் இயேசுவின் தாசனாக மாறி இயேசு காவியம் என்ற நூலையே எழுதினார்.

நாங்களும் வாழையடி வாழையாக யேசுவின் திருமுழுக்கைப்பெற்று கிறிஸ்தவர்கள் என்று நாமம் தரித்து வாழ்ந்து - கொண்டிருக்கின்றோம். "அரச குருத்துவ திருக்கூட்டம், இறைவனுக்கு சொந்தமான மக்கள்" என்ற கௌரவ பெயரைப் பெற்று வாழ்கின்றோம். காலத்துக்குக் காலம் திருவருட்சாதனங்களைப் பெறுகின்றோம். நாம் ஏனோ தானோ என்று இருந்தோமானால் நாமும் ஓர் முடக்குவாதக்காரனாகவே இருப்போம். சிந்திப்போம் நம்பிக்கை வாழ்வின் எதிர்நோக்கை இலக்காகக் கொண்டு பயணிப்போம். மற்றவர்களையும் பயணிக்க ஊக்குவிப்போம்.

## நம்பிக்கையின் ஆண்டில்

# எமது தேடல்

அருட்சகோதரி மேரி றுவீனா,
திருக்குடும்ப கன்னியர் மடம், மன்னார்.



இவ்வருடத்தை, திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் நம்பிக்கையின் ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளார். நம்பிக்கை என்பது தந்தை, மகன், தூய ஆவி ஆகிய மூவொரு இறைவனை நம்புவதாகும். நாம் இறைத்தந்தை 'அப்பா'வில் நம்பிக்கைகொள்ள, அன்புறவுடன் வாழ, இறைவார்த்தையைக் கேட்க, வாசிக்க, எமது இதயத்தைத் திறக்க வேண்டும். அன்று முற்செடியின் நடுவில் மோசேயுடன் பேசிய இறைவன் (வி. ப 3:4-5), இன்று இறைவார்த்தையினூடாக எம்முடன் பேசிக்கொண்டிருக்கின்றார். எமது உள்ளக் கதவைத் திறந்தால் அவரது குரலைக் கேட்க முடியும்.

இம்மண்ணுலகில் மனுவுருவெடுத்த மாந்தர் அனைவரும் தம் வாழ்வில் எதை எதையோ தேடிக்கொண்டே இருக்கின்றார்கள். சிலர் தேடிக் களைத்துச் சோர்ந்துவிடுகிறார்கள். பலர் விடாமுயற்சியோடு தேடிக்கொண்டே இருக்கின்றார்கள். நாம் எதைத் தேடவேண்டும்? வாழ்க்கைக்குத் தேடுதல் தேவையானது; நல்லது, வளர்ச்சிக்குரியது, முன்னேற்றத்திற்கு வழிகோலுகின்றது. ஆனால் எவ்விதமான தேடுதல் தேவை என்பதைத்தான் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

நாம் பிறக்கும்பொழுது என்ன கொண்டு வந்தோம்? இறக்கும்பொழுது எதைக் கொண்டுபோக இருக்கின்றோம்? வெறுமையாக வந்தோம்; வெறுமையாகப் போகின்றோம். ஆனால் நாம் இவ்வுலகில் செல்வச் சிறப்புடன் வாழ்ந்து - கொண்டிருக்கின்றோம். இவையனைத்தையும் எமக்குத் தாராளமாகக் கொடுத்து எம்மை மகிழ்வுடன் வாழவைத்துக்கொண்டிருப்பவர் இறைவன் ஒருவரே. இவற்றை நாம் உணராதவர்களாக, அழிந்துபோகின்ற உலக செல்வங்கள், பதவி, பட்டம், பணம், பொருள் ஆகிய இவையனைத்தையும் தேடி அலைகின்றோம். நிலையான அழியாத செல்வமாகிய இறையரசை, இறைவனைத் தேட, அவரில் நம்பிக்கை வைத்து அவர் வழிசெல்ல ஆவல், அக்கறை, நேரம் எமக்குக் கிடைப்பதில்லை. இப்படிப்பட்ட எமது நிலையை உணருகின்றோமா?

இறைவனைத் தேடி, அவரில் நம்பிக்கைவைத்து வாழும்பொழுது இறைத் தந்தை 'அப்பா' அனைத்தையும் தம் பிள்ளைகளுக்கு அள்ளித்தருவார் என்று இறைவார்த்தை எமக்கு எடுத்துக் கூறுகின்றது. துன்பத்திலும், நோயிலும், மகிழ்விலும், தேவையிலும் நாம் இறைவனில் நம்பிக்கை வைத்து அவரைத் தேடிச் செல்லும்பொழுது அவர் இரு கரம் விரித்தவராய் அன்போடு தம் பிள்ளைகளின் தேவைகளை நிறைவுசெய்ததை இறைவார்த்தையில் காண்கின்றோம்.

"யோசேப்பு புல்வெளியில் வழிதவறி அலைவதை ஒரு மனிதன் கண்டு என்ன *'தேடுகிறாய்'* என்று அவரைக் கேட்டான். யோசேப்பு, என் சகோதரர்களைத் *'தேடுகிறேன்'* என்றார்" (தொ. நூல் 37: 15-17). "ஆண்டவரே துயரத்தில் உம்மைத் *தேடினோம்*" (எசா 26:16). நன்மைசெய்யக் கற்றுக்கொள்ளுங்கள். நீதியை நாடித் *'தேடுங்கள்'* (எசா 1:17). "என்னை ஆவலோடு *'தேடுகின்றவர்கள்'*, என்னைக் கண்டுபிடிப்பார்கள்" (நீதிமொழி 8:17). "உமது கை உம் எதிரிகளை எல்லாம் *'தேடிப்'* பிடிக்கும்" (தி.பா 21:8). "கடவுளை நாடித் "தேடுகிறவர்களே" உங்கள் உள்ளம் ஊக்கமடைவதாக (தி.பா 69:32). "முழுமனத்தோடு அவரைத் *'தேடுவோர்'* பேறுபெற்றோர்"(தி.பா. 119:2). "ஆண்டவருடைய தூதர் யோசேப்புக்கு கனவில் தோன்றிக் கூறியது குழந்தையை ஏரோது கொல்வதற்காகத் 'தேடப்' போகிறான்" (மத் 2:13). *'தேடுங்கள்'* நீங்கள் கண்டடைவீர்கள;" (மத் 7:7). "மரியாளும் சூசையும் உறவினர்களிடையேயும் அறிமுகமானவர்களிடையேயும் யேசுவைத் 'தேடி' கப்பர்நாகுமுக்குச் சென்றனர்" (லூக் 2:44). "முடக்குவாதமுற்ற ஒருவரைக் கட்டிலோடு சுமந்துகொண்டுவந்து அவரை உள்ளே கொண்டுபோய் யேசுவின் முன்வைக்க வழி 'தேடினர்'. (லூக் 5:18). "யேசு சீடரை நோக்கிக் கூறியது, எதை உண்பது எதைக் குடிப்பது என நீங்கள் 'தேடிக்' கொண்டிருக்க வேண்டாம். உலகுசார்ந்த பிற இனத்தவரே இவற்றை எல்லாம் 'தேடுவர்' (லூக் 12:29-30). ஏனெனில் கடவுள் உன்னைத்தேடி வந்த காலத்தை நீ அறிந்துகொள்ளவில்லை" (லூக் 19:44). யோவானின் சீடர் இருவர் தம்மைப் பின்தொடர்வதைக்கண்டு யேசு அவர்களிடம் என்ன 'தேடுகிறீர்கள்' என்று கேட்டார்" (யோ 1:38).

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

## புதிய திருத்தந்தையை தேர்வுசெய்யும் வாக்கெடுப்பில் பங்கெடுத்த கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகையின் மனப்பதிவுகள்



நான் கொண்கிளேவ் (Conclave) என்று சொல்லப்படுகின்ற திருத்தந்தையைத் தேர்வுசெய்யும் அமர்வில் பங்கெடுத்தபோது, "என் எண்ணங்கள் உங்கள் எண்ணங்கள் அல்ல. உங்கள் வழிமுறைகள் என் வழிமுறைகள் அல்ல" (எசாயா 55:8) என்ற இறைவார்த்தையையே நினைவுகூர்ந்தேன் என கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் பேராயராகிய கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் 25ஆம் திகதி பொறளையில் உள்ள புனித லூசியா பேராலயத்தில் இடம்பெற்ற புனித எண்ணைகள் ஆசீர்வதிக்கும் திருப்பலியில் கலந்துகொண்டு மறையுரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது, உண்மையில் இந்த வாக்கெடுப்பைப்பற்றி மனித கண்ணோட்டத்தில் சிந்திப்பது பலனற்ற ஒரு செயலாகும். ஏறக்குறைய 5000 பத்திரிகையாளர்கள் இந்த வாக்கெடுப்பு நிகழ்வை கண்காணித்தார்கள். பல்வேறுவிதமான கேள்விகளுடன் கர்தினால்களுடைய எண்ணங்களை அறிந்துகொள்வதற்காக அவர்கள் வெளியில் போராடிக்கொண்டிருந்தார்கள். ஆனாலும் இறுதியில் நடந்ததைப் பார்க்கும்போது இவர்களின் கணிப்பீடுகளும் எதிர்பார்ப்பும் தவறாகவே இருந்தது. கடவுள் அவருக்கே உரித்தான வழியில் செயற்படுவது நமக்கு அங்கே தெளிவாகியது.

கொண்கிளேவ் (Conclave) என்று சொல்லப்படுகின்ற திருத்தந்தையைத் தேர்வுசெய்யும் அமர்வில் பங்கெடுத்த கர்தினால்களை ஆச்சரியத்தில் மூழ்கச்செய்தது திருத்தந்தையின் தெரிவு குறுகியதாகவும், தூய ஆவியின் செயற்பாடு மிகுந்ததாகவும் காணப்பட்டமையாகும். 'திருத்தந்தை பிரான்சிஸ்' என்ற வடிவில் திருச்சபைக்கு ஓர் உலகத் தலைவர் கிடைத்திருக்கின்றார். இவர் எளிமையானவர், அதேவேளை ஆழமான கல்வி ஞானமுள்ளவர். ஏழை எளியவர்கள், ஒதுக்கப்பட்டோர்மேல் பிரத்தியேகமான அன்பைக் கொண்வர் என கர்தினால் தெரிவித்தார்.

## கொழும்பு உயர் மறைமாவட்டத்திற்கு இவ்வாண்டு 12 புதிய குருக்கள்



கொழும்பு உயர் மறைமாவட்டத்திற்கு இவ்வாண்டு 12 புதிய குருக்கள் திருநிலைப்படுத்தப்பட்டனர். கடந்த ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி கொழும்பு பொறளை புனித லூசியா பேராலயத்தில் கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை அவர்களால் இவர்கள் குருக்களாக திருநிலைப்படுத்தப்பட்டனர்.

## இலங்கைத் திருச்சபை வரலாற்றியல் ஆய்வாளரும் அறிஞருமான 100 வயதை எட்டிய பேணியோலா அடிகளாருக்கு கௌரவம்

அருட்திரு. வீற்றோ பேணியோலா (யே.ச) அடிகளாரின் நீண்டகால வரலாற்று ஆய்வுப் பங்களிப்புகள் மற்றும் அவருடைய அறிவுப் புலமை ஆகியவற்றை கௌரவிக்கும் வகையில் விருது வழங்கப்பட்டுள்ளது. இலங்கை றோயல் ஏசியாற்றிக் கழகம் (The Royal Asiatic Society of Sri Lanka) என்ற அமைப்பினால் 'சேர் ஒபேசேகர நினைவு விருது - 2013' என்ற பெயரில் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் வண. அக்குறந்றிய நன்ந்த தேரோ அவர்களின் பரிந்துரையிலே இவ்விருது இவருக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



அடிகளார் 100வது பிறந்தநாள் திருப்பலியில்



அடிகளாருக்கு விருது வழங்கப்பட்டபோது

## வேளாங்கன்னி வந்த இலங்கையர் 70 பேர் பொலிஸாரால் திருப்பி அனுப்பப்பட்டனர்

தமிழ் நாட்டில் உள்ள வேளாங்கண்ணித் திருத்தலத்திற்கு சுற்றுலா வந்த இலங்கையைச் சேர்ந்த 70 பேர் கடந்த 24.02.2013 அன்று பொலிஸாரால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

சென்னையிலிருந்து விமானம் மூலம் 24.02.2013 அன்று பிற்பகல் 70 இலங்கைப் பயணிகள் திருச்சி வந்தனர். இவர்கள் வேளாங்கண்ணிக்கு செல்வதற்காக திருச்சியிலிருந்து 2 பஸ்களை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு வேளாங்கண்ணி நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

இவர்களின் வருகை குறித்து விமான நிலையக் குடியேற்றப் பிரிவு அதிகாரிகள் அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் தகவல் அளித்தனர். இதன்பேரில் நீடாமங்கலம் காவல் ஆய்வாளர் முருகேசன் இலங்கையினர் வந்த 2 பஸ்களையும் தடுத்து நிறுத்தி திருச்சிக்கு திருப்பி அனுப்பினார்.

24.02.2013 அன்று இரவு திருச்சி வந்த அவர்கள் திருச்சியிலிருந்து சென்னைக்கு புறப்பட்டுச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர். அண்மையில் நாகை மாவட்டத்துக்கு வந்த இலங்கை எம்.பி. யின் வருகைக்கு எதிர்புத் தெரிவித்து போராட்டங்கள் நடைபெற்றன. இதன் காரணமாவே இந்த இலங்கையர் திருப்பி அனுப்பப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## இனங்களுக்கிடையிலான இடைவெளியை நிரப்ப அங்கிலிக்கன் பேராயரின் யோசனை


சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதன் மூலமும், நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதன் மூலமும் இனங்களுக்கு இடையிலான இடைவெளியை நிரப்பமுடியும் என்று அங்கிலிக்கன் திருச்சபையின் முன்னாள் தலைமைப் பேராயர் துலிப் டி சிக்கேரா தெரிவித்துள்ளார். பேச்சு மூலம் இன மற்றும் சமூகங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை வலுப்படுத்திக்கொள்ள மேலும் அவர் தெரிவித்ததாவது. மதங்களை மனிதரின் பிரதான அடையாளமாகக் கருத முடியாது. ஒரு மதச் சமூகம் ஏனைய சமூகங்களை அடக்கி ஆள முற்படும்போது முரண்பாடுகள் ஏற்படுகின்றன. கடும்போக்காளர்கள், மிதவாதிகள் என சகல தரப்பினரும் ஒன்றாக இணைந்து பிரச்சினைகளுக்கு பேச்சு மூலம் தீர்வு காண்பதே ஏற்புடைய நடைமுறையாகும் என்றார்.

## பெந்தகோஸ்தே பெருவிழா – 19.05.2013

### சிறப்புக்கட்டுரை

## திருச்சபையின் பிறந்த நாள்

அருட்சகோதரி இ. யோகா. (scjm)




இயேசுக் கிறிஸ்துவை மீட்பராக, எம் வாழ்வின் வழியாக, அவ்வழியின் ஒளியாகவும் வழிகாட்டியாகவும் கொண்டு, தூய திரித்துவத்தின் பெயரால் திருமுழுக்குப் பெற்று, கிறிஸ்தவர்களாக திருச்சபையில் அங்கத்துவராகியுள்ளோம். நாம் எல்லோரும் பெந்தகோஸ்து நாளில் தூய ஆவியின் வருகையோடு ஆரம்பித்த திருக்கூட்டத்தின் பிறந்த நாளை நன்றிப்பெருக்கோடு இந்தப் பெந்தகோஸ்து நாளில் கொண்டாடுகின்றோம்.

இறைவனோடு எமக்கிருந்த அன்புறவை, கீழ்ப்படியாமை எனும் பாவத்தினால் நாம் முறித்துக்கொண்டோம். நம்மை மீண்டும் இறையுறவில் கட்டியெழுப்ப, இறை – மனித உறவை மீண்டும் இணைக்க இயேசு மனுவானார். மனித வாழ்வின் தார்ப்பரியத்தை தானே வாழ்ந்து காட்டினார். மனித வாழ்வில் அன்பு ஒன்றே நிலையானது, அந்த அன்பிற்காக வாழ்வதே உண்மை வாழ்வு என்று காட்டினார். அனைவரையும் அன்பு செய்யுங்கள், அன்பிற்காக வாழுங்கள் என்ற உண்மையை உணர்த்தினார். அன்பே உருவான அவரை எமது பாவத்தின் கொடூரமும், பாவத்திற்கு அடிமையாயிருந்த எமது சுயநலமும் சிலுவையிலறைந்து புதைத்தது. புதைக்கப்பட்டது சாதாரண உடலல்லவே! அது உயிருள்ள விதை! அதனால்தான் மூன்றே நாளில் புத்துயிர் பெற்று உயிர்த்துவிட்டார்.

இயேசு தன் பாடுகள் மரணம், உயிர்ப்பினூடாக கிறிஸ்துவானார். ஆனால் அவரோடுகூட இருந்தவர்கள் (சீடர்கள்) இன்னும் பயத்திலிருந்து விடுதலை பெறாததைக் கண்டார். தான் முன்கூட்டியே (யோவான் 15:26) தம் சீடருக்கு கூறியிருந்ததின்படி தேற்றரவாளரை, துணையாளரை அனுப்ப சித்தமானார். தாம் மரணத்திற்கும் அப்பாற்பட்டவர் என தாம் உயிர்த்துவிட்டதை (யோவா 20:26-27), உயிரோடு இருப்பதை (தி.பணி 1:4, யோவா 20:16-17), அனைத்தையும் கடந்த நிலையில் இருப்பதை (யோவா 20: 19, தி.பணி 1:3) பலமுறை தம் அன்பர்களுக்கு வெளிப்படுத்தியபின் தாம் உயிர்த்த நாற்பதாவது நாள் (தி.பணி 1:3-9) தன் தந்தையிடம் திரும்புகிறார். இயேசு உயிர்த்த ஐம்பதாவது நாள் - பரலோகத்திற்கு எழுந்தருளிய பத்தாவது நாள் - பெந்தகோஸ்து திருவிழாவைக் கொண்டாட யூதர்கள் எருசலேமில் தங்கியிருக்கையில் தமது ஆவியானவரை தம் சீடர்கள்மீது அனுப்புகின்றார்.

இயேசுவின் மரணத்தின்பின் தங்களுக்கும் இயேசுவைப்போல் சிலுவை மரணம் கிடைத்துவிடுமோ என அஞ்சிய சீடர், பூட்டிய கதவுகளுக்குப் பின்னால் ஒளிந்திருந்தனர். தேவ அன்னை அவர்களோடு இருந்ததனால் என்னவோ அனைவரும் கூடி செபத்தில் ஆழ்ந்திருந்தனர் (தி.பணி 1:14). யூதருக்கு அஞ்சிய நிலை – பயம், இயேசு அவர்களோடுகூட இதுவரை காலமும் இருந்ததுபோல் இல்லாமை – தனிமை, இயேசுவிற்காக எல்லாவற்றையும் விட்டுவிட்டு வந்த நிலை – எதிர்காலம் பற்றிய கேள்விக்குறி என அனைத்தும் அவர்களை வாட்டியது. இயேசு மூன்றாம் நாள் உயிர்த்ததும் அவரைப் பல சந்தர்ப்பங்களில் கண்டதும் அவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தாலும் இனி என்ன செய்வது என்ற ஏக்கம் இருந்தது (யோவா 21:3). தன்னை நம்பியோரை என்றுமே கைவிடாத தேவன், அவர்களைத் தைரியப்படுத்த இந்த ஐம்பதாவது நாளில் தன் துணையாளரை அவர்களிடையே அனுப்புகிறார்.

கதவுகள் பூட்டப்பட்டிருக்கிறது (தி.பணி 2:1), எல்லோரும் ஒன்றாக கூடியிருந்தனர் (செபத்திலிருந்தனர்), அதிகாலை வேளை பலத்த காற்று வீசி அவர்கள் கூடியிருந்த அறையை நிரப்ப நெருப்புப் போன்ற நாவுகள் அவர்கள் அனைவர்மீதும் (இயேசுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தூதர்கள், அவரது சீடர்கள், அன்னை மரியாள், ஏனைய பெண்களும் - எல்லோருமாக 120 பேர் – தி.பணி 1:15) இறங்கியது. அவர்கள் அனைவரும் தூய ஆவியைப் பெற்றுக்கொண்டார்கள். ஆவியானவரின் கொடைகளினால் நிரப்பப்பட்டார்கள். அதனால்தான் அவர்கள் திடம் பெற்று இயேசுவின்மேல் கொண்ட நம்பிக்கையில் உறுதி பெற்றார்கள். 'இயேசுவே ஆண்டவர்' எனப் பறைசாற்ற, இயேசுவிற்காகத் தம் வாழ்வை முழுமையாக செயற்பாடுள்ள விதத்தில் அர்ப்பணிக்க, இயேசுவே தாம் எதிர்பார்த்திருந்த உண்மையான மெசியா எனப் போதிக்க துணிவோடு கதவுகளை திறந்துகொண்டு வெளியேறினார்கள்.

பயத்தினால், சுயநலத்தினால் தமக்குள்ளேயே புதைந்து போயிருந்தோர் ஆவியின் துணைகொண்டு வெளியே வந்தனர். மக்கள் மத்தியில் 'இயேசுவே ஆண்டவர்' என முழக்கமிட்டனர். இயேசு எனும் 'உண்மை' அவர்களை பயத்திலிருந்து விடுதலை பெறச் செய்தது. சுயநலக்கட்டிலிருந்து அவர்களை அவிழ்த்துவிட்டது. (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் கல்வாரியில் விதையாகிய

# குருத்துவ விருட்சங்கள்

## அருட்பணி. சரத்ஜீவன், அருட்பணி. பிரான்சிஸ் யோசப்

*ஆக்கம்: அருட்பணி. அன்ரன் ஸ்ரீபன், யாழ் மறைமாவட்டம்*

2009 மே 18. பொழுது கரைந்துகொண்டிருந்த நேரம். கந்தகப்புகையும், நெருப்பும் படிப்படியாக மறைந்துகொண்டிருந்த நேரம். மனித அலறல்களும், ஒப்பாரிகளும் மூச்சடங்கியிருந்த நேரம். ஆங்காங்கே ஓரிரண்டு துப்பாக்கி வெடியோசைகளும் புரியாத மொழியினரின் ஏளனக்குரல்களும், நையாண்டிகளும் ஓங்கி ஒலித்துக்கொண்டிருந்த நேரம். போர் எல்லைகளைத் தாண்டி, நீண்ட வரிசையில் நின்று, நிர்வாணமாக்கப்பட்டு, உடல் பரிசோதனை செய்யப்பட்ட அவமானத்தோடும் பசி, தாகம், களைப்பு, சோர்வு, ஏமாற்றம் என்ற பெரும் உடல், மனப் பாரத்தோடும் நின்ற எம்மை முள்ளிவாய்க்கால் எல்லையிலுள்ள இரட்டை வாய்க்கால் சாளம்பன் என்ற இடத்தில், யுத்தத்தில் உயிர் தப்பிய இறுதி மனிதர்களின் கூட்டத்தில் ஒலித்துக் கொண்டிருந்த, "சரா பாதர் செத்திட்டார்" என்ற ஒப்பாரி குரல்கள் ஒருமுறை நிலைகுலையச் செய்தது.

சிறுவர் முதல் பெரியவர்வரை எல்லோருடைய கண்களும் நீரால் நிறைந்திருந்தது. "காலமை எங்களோட வந்த பாதர் இப்ப எங்களை விட்டுட்டு போட்டார்" என்று எல்லோரும் அங்கு ஒலித்த அதிகாரக் குரல்களுக்கும், வெருட்டல்களுக்கும் மத்தியில் அழுது குழறிய வண்ணம் இருந்தார்கள். "இப்பதான் பாதரின் சடலத்தை பஸ்சிலை கொண்டு போகினம்", "எங்களை விட்டுட்டு பாதர் போட்டார்" என்று அழுகுரல்கள் நீண்டுகொண்டே போனது. யாருக்கு யார் ஆறுதல் சொல்வது அந்த இடத்தில்? ஒரு சிலரின் குரல்களையும், வெற்றி அக்களிப்பையும் தவிர ஆறுதல் சொல்ல யாருமே இல்லை. இறுதிவரை மக்களுடன் நிற்பேன் என்ற உறுதியான முடிவுடன், இறுதிவரை நின்று முள்ளிவாய்க்கால் கல்வாரிக்குள்ளே தன்னுடைய சுவாசத்தை கரைத்துக்கொண்டவர் அருட்பணி. சரத்ஜீவன் அடிகளார்!

உலகப்பந்தின் ஒரு சிறிய புள்ளியிலே மனிதம் நொருக்கப்பட்டு, சிலுவை சுமத்தப்பட்டு, இழப்புக்களையும், மரணங்களையும், அங்கவீனங்களையும் சேமித்துக்கொண்டு கந்தகப்புகைக்குள் வாழ்வியலைத் தேடியபோது இறைபணியாளரின் பிரசன்னமும் உடனிருப்பும் அவசியமானது என்ற உண்மையை புரியவைத்து, எண்ணிக்கையில்லாமல் மாண்டுபோன தமிழர்களின் மரணத்தோடு தன்னையும் உத்தம குருவாக இயேசுவின் வழியில் பலியாக்கியவர் இவ் அருட்பணியாளர். அரச சார்பற்ற உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்கள் யுத்தப் பிரதேசத்திலிருந்து அரசினால் வெளியேற்றப்பட்ட பின்னர் யுத்தத்தின் சுடுகலன்கள் மக்களை நோக்கித் திருப்பப்பட்டன. மக்களின் இழப்புக்கள் வரையறைகளை தாண்டிச்செல்ல ஆரம்பித்தன. இந்தக் காலகட்டத்தில், யுத்தப் பிரதேசத்தில் கத்தோலிக்க திருச்சபையின் இருப்பு அரசினால் விரும்பப்படாத ஒன்றாகக் கருதப்பட்டது. இதன் விளைவாக அங்கு பணியாற்றிக்கொண்டிருந்த கத்தோலிக்க அருட்பணியாளருக்கு அரசினால் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்ற பகிரங்க அறிவித்தல் கொடுக்கப்பட்டது. அவர்கள் அனைவரும் வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். ஆனாலும் ஒருசில குருக்கள் இறுதிவரை மக்களுடன் இருப்போம் என்ற உறுதியான முடிவெடுத்தார்கள். அவர்களில் ஒருவர் அருட்பணி. சரத்ஜீவன் அடிகளார்.

இவ்வருட்பணியாளர் பலரது உள்ளங்களில் அழியாமல் இடம்பிடித்த ஒரு இறைபணியாளர். எதையும் நல்மனத்தோடு ஏற்றுக்கொள்ளும் துணிவுகொண்டவர். உருத்திரபுரத்தின் பங்குக் குருவாக பணியாற்றிக்கொண்டிருந்தபோது வன்னி மறைக்கோட்ட இயேசு சபை அகதிகள் பணி நிறுவனத்தின் இயக்குனராகவும் கடமைபுரிந்தவர். 2008ம் ஆண்டு நடுப்பகுதியில் யுத்தம் கிளிநொச்சி நகரை அண்மித்தபோது உருத்திரபுர மக்களுக்கும் இடம்பெயர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அந்த வேளையில் இறுதி மனிதராக இவரும் வெளியேறினார்.

இக்காலப் பகுதியில் இவரின் பணி வட்டக்கச்சி பிரதேசத்தில் கல்மடு என்னும் இடத்தில் வசதிக் குறைபாடுகள் மத்தியிலும் தடங்கலின்றி நடைபெறத்தொடங்கியது. ஆன்மீகப் பணியோடு தன்னால் இயன்ற சமூகப் பணியையும் மக்களுக்கு ஆற்றிக்கொண்டிருந்தார். கல்மடு, வட்டக்கச்சி பகுதிகளையும் யுத்தம் அண்மித்தபோது, இவர் தனது பணியிடத்தை மூங்கிலாறு உடையார்கட்டு பகுதிக்கு குறிப்பிட்ட சில நாட்கள் இடைவெளிக்குள் மாற்றிக்கொண்டார். ஒருசில தடவைகளில், அகோர எறிகணைத் தாக்குதல்களுக்குள் சிக்குண்டு பயங்கரமான அனுபவத்தைப் பெற்றுக்கொண்டார். மூங்கிலாறு பிரதேசத்தில் இவர் ஆற்றிய நிவாரணப் பணி மிகவும் முக்கியமானது. பொருட்கள் தட்டுப்பாடான காலத்தில் அவற்றைச் சேகரித்து பொதி செய்து மக்களுக்கு விநியோகித்து உன்னத பணியாற்றினார். இவர் மிகவும் இரக்க சுபாவம் கொண்டவர். சுதந்திரபுரம், உடையார்கட்டு, இரணைப்பாலை, வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் என மக்களோடு இடம்பெயர்ந்து, தனது இருப்பால் இறை பிரசன்னத்தை வெளிப்படுத்தி மக்களுக்கு நம்பிக்கையைக் கொடுத்தார். முகம் கோணாமல், எதற்கும் துணிந்தவாரக பலவிதமான உதவிகளைச் செய்தார்.

வன்னி மறைக்கோட்ட குருக்கள் எல்லோரும் வலைஞர்மட ஆலயத்தில் தஞ்சமடைந்த வேளையில் இவரும் அங்கு இருந்தார். மக்களின் வாழ்விடங்கள் மிகவும் குறுகிய நிலையில் நாற்புறமும் யுத்தத்தால் சூழப்பட்டபோது பதுங்கு அகழிகளை விட்டு வெளியில் நடமாடுவது உயிராபத்தான விடயமாக இருந்தது.



*தாக்குதல் தினத்தன்று தீயணைப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட பணியாளர்களுடன் அருட்தந்தை பிரான்சிஸ் யோசப். திகதி 30.01.2009 நேரம் பி.ப. 01.31, இடம் : உடையார்கட்டு, சுதந்திரபுரம்.*



*தூய யூதாததேயு ஆலய வளாகத்தில் அமைந்திருந்த கரித்தாஸ் - கியூடெக் அலுவலகம்மீது எறிகணைத் தாக்குதல் நடைபெறுவதற்கு சில நிமிடங்கள் முன்பாக அங்கு அமைந்திருந்த பதுங்குகுழிகளுக்குள் பாதுகாப்புத்தேடி இருக்கும் அருட்தந்தையர்களோடு சில பணியாளர்கள். திகதி 30.01.2009*

அந்த நாட்களில் வீதியினால் பயணிப்பவர்கள் திடீரென கொல்லப்படும் நிலைமையிலும்கூட, இவர் உறுதியோடு பயணித்து தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டவர். வலைஞர்மடம், மாத்தளன் பகுதிகளில் மக்கள் கடற்றொழில் செய்ய ஏதுவான சூழ்நிலை இருந்தவேளையில், இவர் அதிகாலையில் எழுந்து கடற்கரைக்குச்சென்று அங்கு மக்கள் படும் துன்பத்தைக்கண்டு வேதனைப்படுவார்.

2009ம் ஆண்டு பரிசுத்தவார வழிபாடுகள் வலைஞர்மடம், இரட்டை வாய்க்கால் ஆகிய இரண்டு இடங்களில் மட்டுமே நடைபெற்றன. வலைஞர்மடத்தில் குருக்களும், அருட்சகோதரிகளும் வழிபாடுகளை மக்களுக்காக ஒழுங்குபடுத்தினார்கள். இரட்டை வாய்க்கால் செல்லுவது உயிராபத்தான விடயமாக இருந்தாலும் இரண்டு அருட்பணியாளர்களுடன் தானாக முன்வந்து அங்கு சென்று அந்த மக்கள் பரிசுத்தவார வழிபாடுகளில் முழுமையாக பங்குகொள்ள மிகவும் உதவியாக இருந்தார்.

மே, 13ம் திகதி அவருடைய பிறந்தநாள். புனித பற்றிமா அன்னையின் பெருவிழா. இதனால்தான் என்னவோ தேவமாதாவின்மீது இவர் அதீதபக்தி கொண்டவர். மூன்று தடவைகளுக்கு மேலாக தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்களில் சிக்குண்டபொழுதெல்லாம், கைகளில் செபமாலையைத் தாங்கி தொடர்ச்சியாக பல செபமாலை சொல்லி மற்றவர்களையும் செபிக்கத் தூண்டி மரியன்னையின் அடைக்கலத்தில் தன்னோடு இருந்தவர்களை ஒப்படைத்து எல்லோரையும் காப்பாற்றினார்.

ஒருமுறை உடையார்கட்டு பகுதியில் திடீரென எறிகணைகள் விழ மக்கள் தூய யூதாததேயு ஆலயத்தை நோக்கி ஓடிவந்து அங்கு தஞ்சமடைந்தார்கள். எறிகணைத் தாக்குதல்கள் மிக அகோரமாக உடையார்கட்டு, புதுக்குடியிருப்பு வீதியை இலக்கு வைத்து நடத்தப்பட்டுக்கொண்டிருக்க, ஆலயத்தில் தஞ்சமடைந்தவர்கள் ஒப்பாரி வைத்து குழறத் தொடங்கினார்கள். கண்களுக்கு முன்னால் மக்கள் காயமடைந்தும் இறந்துகொண்டும் இருந்தார்கள். அந்தவேளையில், அருட்பணி. சரத்ஜீவன் நிதானமாக இருந்து "அழவேண்டாம், அழுவதனால் பயன் இல்லை, செமாலையை கைகளில் ஏந்திச் செபமாலையைச் சொல்லுங்கள்" என அறிவுறுத்தி உரத்தகுரலில் செபமாலையைச் செபிக்க ஆரம்பித்தார். அகோர தாக்குதலின் மத்தியிலும் அழுகுரல்கள் அடங்கி, எல்லோருடைய நாவும் அன்னை மரியாளின் நாமத்தை உச்சரிக்கும் புதுமை அங்கு நடைபெற்றது. மே மாதம் 17ம் திகதி இரவு முழுவதும் செபமாலையை கையில் ஏந்தி செபித்துக்கொண்டிருந்தார்.

யுத்தம் இறுதிக் கட்டத்தை அண்மித்த அந்த இறுதி நாள்களில் மரணபயம் எல்லோரையும் சூழ்ந்து நின்ற வேளையிலும் மரணத்தைக் கண்டு இவர் அஞ்சவில்லை. மரணத்திலும் உறுதியாக இருந்தார். நாற்புறமும் இராணுவம் சூழ்ந்து நின்ற வேளையிலும் மரணத்தைக் கண்டு இவர் அஞ்சாது, தங்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலின்படி 2009 மே 17ம் திகதி மாலை இரண்டு குருக்களோடும், ஒருசில பிள்ளைகளோடும் வெள்ளைக் கொடியுடன் இரண்டு தடவைகள் சமகால இடைவெளியில் இராணுவத்தினரை எதிர்கொண்டு செல்ல முற்பட்டபோது இவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இறுதியாக 18ம் திகதி காலை வேளையில் மீண்டும் ஒரு தடவை வெள்ளைக்கொடியுடன் இராணுவத்தை எதிர்கொள்ள முயற்சித்தபோது இவரும் துணிவுடன் அந்த முயற்சியில் ஈடுபட்டார். "தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு எதுவுமில்லை" (யோ:15:3) என்கின்ற இறைவார்த்தை அவரது உள்ளத்தில் ஓங்கி ஒலித்ததன் பிரதிபலிப்பு இந்தச் சம்பவத்தில் நிருபணமாகியது. இறுதியாக இந்த முயற்சி வெற்றியடைந்தது.

அங்கு இருந்தவர்கள் விசாரணை செய்யப்பட்ட விதம், இவர் தாக்கப்பட்ட சம்பவம், போராட்டத்தின் எதிர்பாராத அந்த முடிவு இவரது மனதில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தியது. இவைகள் எல்லாவற்றினதும் தாக்கம் இதயத்துடிப்பை படிப்படியாக குறைத்திருக்க வேண்டும். எரியும் சுவாலைகளுக்கு மத்தியில் வெறுங்காலுடன் பல நூறு மீற்றர் மனப்பாரத்தோடு நடந்த இவரது உடல் படிப்படியாகச் சோரத் தொடங்கியது. இவர் சுமந்துவந்த பொருட்களடங்கிய இரண்டு பொதிகளை இவருடன் வந்த ஒருவர் பெற்றுக்கொள்ள, இன்னும் இரண்டு பிள்ளைகள் இவரைக் கைத்தாங்கலாக சுமக்க முற்பட்டபோது, அவர் கூறிய "என்னால் முடியும், நான் தனியே நடந்து வருவேன்" என்ற வார்த்தைகள் இறுதி நேரத்திலும் இவரது மன உறுதியைக் காட்டி நின்றன.

"நீங்கள் எங்கள் அடிமைகள்" என்ற ஏளனக் குரல்களுக்கு மத்தியில் நண்பகல் 12.30 மணியளவில் இரட்டை வாய்க்காலுக்கு அண்மித்த பகுதியில் இவரது உடலின் இசைவாக்கம் படிப்படியாக குறைந்து போக, இன்னும் சிலருடன் பல பிரயத்தனங்களுக்கு மத்தியில் ஓர் உழவு இயந்திரத்தில் இவரும் ஏற்றப்பட்டு சாளம்பன் என்ற இடத்திற்கு அனுப்பப்பட்டார். அங்கு மதியம் 2.45 மணியளவில் மருத்துவ உதவிகள் மறுக்கப்பட்ட நிலையில் அவரது இதயமும் தனது துடிப்பை நிறுத்த இவ்வுலகைவிட்டு பரமனடி சேர்ந்தார்.

அருட்பணி. சரத்ஜீவனின் உறுதியான மனநிலையும், இறைமகன் இயேசுவின் பாதையில் தன்னை பலியாக ஒப்புக்கொடுத்த நிகழ்வும் பணிக்குருத்துவத்தில் புதிய ஒரு அத்தியாயத்தை வரைந்து நிற்கின்றன.

..................................

இதே காலப்பகுதியில் பல்லாயிரம் மக்களோடு காணாமல்போன அருட்பணி. பிரான்சிஸ் யோசப் அடிகளாரும் 50 வருடகால குருத்துவ பயணத்தில் தனித்துவமான பல சாதனைகளை புரிந்திருக்கிறார். இறைவழியில் நின்று மனத்துணிவுடன் உண்மைக்குச் சான்று பகர்ந்து துன்பப்பட்ட மக்களோடு தனது வாழ்வினையும் இணைத்துக்கொண்டார். காணாமல்போனோர் பட்டியலில் அவரது பெயர் சேர்த்துக் கொள்ளப்பட்டு, அவரது இருப்பு கேள்விக்குறியானாலும் தமிழரின் வரலாற்றில் அவர் தனித்துவமான ஒரு இடம்பிடித்தவர். இவ்வருட்பணியாளரின் வாழ்வின் சில பதிவுகள்:

2009 மே. 13ம் திகதி காலை நேரம். முள்ளிவாய்க்கால் பகுதி முழுவதும் ரணகளமாய் மாறியிருந்தது. திரும்பும் திசையெங்கும் சடலங்களும், அங்கவீனர்களும், ஒப்பாரிகளும், கூக்குரல்களும், பற்றியெரியும் வாகனங்களும், 12ம் திகதி நள்ளிரவு தொடங்கி 13ம் திகதி அதிகாலைவரை நடத்தப்பட்ட பல்குழல், ஆட்லறி, கனன் எறிகணைத் தாக்குதல்களின் எச்சங்கள்தான் இவைகள். ஒருசில மணித்தியாலங்களிலேயே ஆயிரக்கணக்கானோர் காயப்பட்டும், கொல்லப்பட்டும் கிடந்தார்கள். அன்றைய தினம் மதிய நேரம் அருட்பணி. பிரான்சிஸ் யோசப் அடிகளாரை சந்திப்பதற்காக அவரின் பதுங்கு அகழிக்கு சென்றபோது அவருடன் அவரது பணியாளர்களும், கால் ஊனமுற்ற ஒரு பெண்ணும் இருந்தார். நாங்கள் உள்ளே இருந்து உரையாடிக்கொண்டிருந்தபோது, மீண்டும் எறிகணைத் தாக்குதல்கள் சரமாரியாக மேற்கொள்ளப்பட நாங்கள் இருந்த இடத்திலிருந்து ஒரு சில மீற்றர் தள்ளியிருந்த எண்ணைக் களஞ்சியம் தீப்பற்றி எரிய ஆரம்பித்தது. எங்கும் தீச்சுவாலை, அதன் வெக்கை உள்ளே இருந்த எங்களை வாட்டி வதைத்துக் கொண்டிருந்தது. அப்போது கையில் கிடைத்த துணிகளை சுற்றி தண்ணீருக்குள் தோய்த்து உடல் வெக்கையை தணித்துக் கொண்டிருந்தோம். பதுங்கு குழியைவிட்டு வெளியில் செல்ல முடியாத அளவிற்கு எறிகணைகள் எம்மைச்சுற்றி வீழ்ந்துகொண்டிருந்தன.

இதுதான் இறுதிச் சந்திப்பு என்பதை அன்று நான் உணரவில்லை. ஆனால் இன்று அது நிதர்சனமாக்கப்பட்டுள்ளது.

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகத் திருச்சபைச் செய்திகள்

# உயிர்த்த கிறிஸ்துவின் சக்தி ஒவ்வொருவரையும், குறிப்பாகத் துன்புறுவோரைச் சென்றடையட்டும்

## திருத்தந்தை பிரான்சிஸ்



கிறிஸ்து தீமையை முழுமையாகவும் முடிவாகவும் வென்றுவிட்டார். ஆயினும் இவ்வெற்றியை தங்களது வாழ்விலும், வரலாறு மற்றும் சமுதாயத்தின் உண்மைத்தன்மைகளிலும் ஏற்றுக்கொள்வது நம்மைச் சார்ந்தது என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

'வானதூதரின் திங்கள்' என அழைக்கப்படும் உயிர்ப்பு ஞாயிறுக்கு அடுத்த நாளான திங்களன்று பகல் 12 மணிக்கு வத்திக்கான் தூய பேதுரு வளாகத்தில் கூடியிருந்த இலட்சக்கணக்கான மக்களுக்கு அல்லேலூயா வாழ்த்தொலி உரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் இவ்வாறு கூறினார்.

நம்மைக் கடவுளின் பிள்ளைகளாக ஆக்கும் திருமுழுக்கும், நம்மைக் கிறிஸ்துவோடு இணைக்கும் திருநற்கருணையும் நமது வாழ்வாக மாறவேண்டுமென்று விசுவாசிகளிடம் கேட்டுக்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ், இவை நமது எண்ணங்களிலும், நமது புரிந்துகொள்ளுதலிலும், நமது நடத்தைகளிலும், செயல்களிலும், நாம் தெரிந்தெடுப்பவைகளிலும் வெளிப்பட வேண்டுமென்றும் கூறினார்.

"உமது திரு அவையை வளரச்செய்யும் எம் வானகத் தந்தையே, உமது விசுவாசிகளாகிய நாங்கள் பெற்றுக்கொண்ட விசுவாசத்தை திருவருள்சாதன வாழ்வில் வெளிப்படுத்த உதவி செய்யும்" என இதற்காகவே இன்றைய திருவழிபாட்டில் நாம் செபிக்கிறோம் என்றும் திருத்தந்தை கூறினார்.

பாஸ்கா திருவருள்சாதனத்தில் அடங்கியுள்ள திருவருள் நமது தனிப்பட்ட குடும்ப மற்றும் சமூக வாழ்வைப் புதுப்பிப்பதற்கு அளவற்ற சக்தியைக் கொண்டுள்ளது என்றுரைத்த திருத்தந்தை ஒவ்வொன்றும் மனித இதயங்களின் வழியாகச் செல்வதால், உயிர்த்த கிறிஸ்துவின் அருளோடு நாம் ஒத்துழைத்தால், நமக்கும் மற்றவருக்கும் தீமை விளைவிப்பவற்றை அவ்வருள் நன்மையாக மாற்றும். அவ்வருள் நம் வாழ்விலும், உலகிலும் பெரிய மாற்றத்தைக் கொணரும் என்றும் கூறினார்.

இறையருளின்றி நம்மால் ஒன்றும் செய்ய இயலாது. திருமுழுக்கு மற்றும் திருநற்கருணையின் அருளால் நாம் கடவுளின் கருணையின் கருவியாக மாற முடியும் என்றும் திருத்தந்தை கூறினார்.

பாஸ்கா மறைபொருள், நம்மிலும் நம் காலத்திலும், வெறுப்பை அன்பாகவும், பொய்மையை மெய்மையாகவும், பழிவாங்குதலை மன்னிப்பாகவும், வருத்தத்தை மகிழ்ச்சியாகவும் மாற்றும்பொருட்டு அன்னைமரியின் பரிந்துரை வழியாக உயிர்த்த கிறிஸ்துவிடம் செபிப்போம் என்று தனது அல்லேலூயா வாழ்த்தொலி உரையை நிறைவுசெய்து அனைவரோடும் சேர்ந்து அல்லேலூயா வாழ்த்தொலி செபத்தையும் திருத்தந்தை பிரான்சிஸ் செபித்தார்.

மேலும், வத்திக்கான் தூய பேதுரு பசிலிக்கா பேராலயத்துக்குக் கீழே இருக்கின்ற தூய பேதுருவின் கல்லறைக்கு கடந்த 1.4.2013 அன்று மாலை சென்று திருத்தந்தை பிரான்சிஸ் செபத்தில் ஈடுபட்டார்.

## முத். இரண்டாம் ஜோன் போல் பீடத்திற்கு முன்பாக திருத்தந்தை பிரான்சிஸ்



ஏப்ரல் 2ம் தேதி மாலை 7 மணியளவில் புனித பேதுரு பசிலிக்காப் பேராலயம் திருப்பயணிகளுக்கு மூடப்பட்ட பின்னர், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மறைந்த திருத்தந்தை முத்திப்பேறுபெற்ற இரண்டாம் ஜோன்பால் அவர்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ள பீடத்திற்கு முன்பாக செபத்தில் ஈடுபட்டார்.

2005ம் ஆண்டு ஏப்ரல் 2ம் தேதி இறையடி சேர்ந்த முத்திப்பேறு பெற்ற திருத்தந்தை இரண்டாம் ஜோன் போல் அவர்கள் மறைந்ததன் எட்டாம் ஆண்டு நினைவையொட்டி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் புனித பேதுரு பசிலிக்காப் பேராலயத்தின் மேல்தளத்தின் அமைந்துள்ள புனித செபஸ்டியன் சிற்றாலயத்தில் வைக்கப்பட்டுள்ள அவரது கல்லறைக்கு முன் செபத்தில் ஈடுபட்டார்.

இதன் பின்னர் பேராலயத்தின் இன்னும் இரு இடங்களில் திருத்தந்தையர்களான புனித பத்தாம் பயஸ் அவர்களும், முத்திப்பேறு பெற்ற 23ம் ஜோன் அவர்களும் வைக்கப்பட்டுள்ள கல்லறைகளுக்கு முன்பாகவும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் செபத்தில் ஈடுபட்டார்.

புனித பேதுரு பசிலிக்காவின் அடித்தளத்தில் ஈரடுக்குகளுக்குக் கீழ் பாதுகாக்கப்பட்டு வரும் புனித பேதுருவின் கல்லறையையும், அதற்கு மேல்தளத்தில் அமைந்துள்ள பல திருத்தந்தையரின் கல்லறைகளையும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கடந்த 1.04.2013 அன்று தரிசித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சமுதாயத்தின் விளிம்பிற்கு ஒதுக்கப்பட்டுள்ளவர்களை திருத்தந்தை பிரான்சிஸ் அரவணைத்தார்

## திருப்பீடப் பேச்சாளர்



சமுதாயத்தின் விளிம்பிற்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒரு சிறு குடும்பத்தின் உறுப்பினர்களை அரவணைக்கும் வகையில் திருத்தந்தை பிரான்சிஸ் புனித வியாழன் மாலைத் திருப்பலியில் இளம் கைதிகளின் பாதங்களைக் கழுவித்துடைத்தார் என்று திருப்பீடப் பேச்சாளர் இயேசு சபை அருள்தந்தை லொம்பார்டி (Federico Lombardi) கூறினார்.

புனித வியாழன் மாலை இயேசுவின் இறுதி இரவுணவுத் திருப்பலியை உரோம் நகரில் உள்ள Casal del Marmo எனப்படும் வளர் இளம் கைதிகள் இல்லத்தில் கொண்டாடிய திருத்தந்தை அப்பலியின் ஒரு முக்கிய பகுதியான பாதம் கழுவும் சடங்கின்போது இரு இளம்பெண்களின் பாதங்களைக் கழுவினார் என்பதை ஒரு பிரச்சினையாக ஊடகங்கள் பேசி வந்ததற்குப் பதிலிறுக்கும் வகையில் அருள்தந்தை லொம்பார்டி விளக்கம் ஒன்றை வெளியிட்டார்.

அனைத்து மக்களின் முன்னிலையில் மேற்கொள்ளப்படும் ஒரு பொதுவான திருவழிபாட்டில் பாதம் கழுவும் சடங்கிற்கு ஆண்களே தெரிவுசெய்யப்பட்டிருப்பர் என்று விளக்கம் அளித்த அருள்தந்தை, இளம் கைதிகள் இல்லமோ ஒரு தனிப்பட்ட குழுமம் என்றும், அங்கு பெண்களை ஒதுக்கிவைப்பது பொருள் தராத சடங்காக மாறும் என்றும் கூறினார்.

அடுத்தவருக்கு பணிவிடை செய்தல் என்ற உயர்ந்ததோர் பாடத்தை இயேசு பாதம் கழுவும் சடங்கில் நமக்குச் சொல்லித்தருகிறார் என்றும், அத்தகைய உன்னதமான ஒரு செயலில் ஆண் பெண் என்ற வேறுபாடுகளுக்கு அதிக முக்கியத்துவம் தருவது அந்த எடுத்துக்காட்டின் மேன்மையைக் குறைக்கும் என்றும் அருள்தந்தை விளக்கினார்.

## திருத்தந்தை 23ம் அருளப்பரின் செயலருடன் திருத்தந்தை பிரான்சிஸ் தொலைபேசியில் தொடர்பு

1963ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11திகதி திருத்தந்தை 23ஆம் அருளப்பர் "Pacem in Terris", அதாவது, 'உலகில் அமைதி' என்ற புகழ்பெற்ற சுற்றுமடலை வெளியிட்டார். அம்மடலின் 50ம் ஆண்டு நிறைவை நெருங்கிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் அம்மடலை எழுத திருத்தந்தை 23ம் அருளப்பருக்கு பெருமளவு உதவிகள் செய்த அந்நாள் செயலரும் தற்போது 98 வயது நிரம்பியவருமான பேராயர் Capovilla அவர்களைத் திருத்தந்தை பிரான்சிஸ் தொலைபேசியில் அழைத்து வாழ்த்துக் கூறினார். இத்தொலைபேசி அழைப்பு தனக்கு மிகுந்த ஆச்சரியத்தையும், மகிழ்வையும் அளித்தது என்று கூறிய பேராயர், தான் திருத்தந்தையை வத்திக்கானில் சந்திக்க முயற்சிகள் எடுத்து வருவதாகக் கூறினார். 1960களில் அணு ஆயுதங்கள் பெருகிவந்த நேரத்தில் வெளியான "Pacem in Terris" சுற்றுமடல், கத்தோலிக்கத் திருஅவை என்ற வட்டத்தையும் தாண்டி நல்மனதுள்ளவர்கள் அனைவரும் அமைதி முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென விடுக்கப்பட்ட ஓர் அழைப்பாக இருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

## திருத்தந்தை பிரான்சிஸ் வதியும் புதிய இடம்

திருத்தந்தை 10ஆம் பத்திநாதர் 1903ஆம் ஆண்டில் தூய பேதுரு சதுக்கத்திற்கு எதிர்ப்புறமான ஒரு பகுதியிலேயே வசித்து வந்தார். அவருக்குப்பின் திருத்தந்தையின் வாசஸ்தலத்தை விட்டு 110 வருடங்களுக்குப்பின் வேறு இடத்தில் இருக்க முடிவெடுத்த முதலாவது திருத்தந்தை இவராவார். உலகில் உள்ள மிகப்பெரிய இரண்டாவது மாளிகை திருத்தந்தையின் வாசஸ்தலம் ஆகும். முதலாவது பெரிய மாளிகை திபெத் நாட்டின் தலைவர் தலே லாமாவின் வதிவிடமேயாகும். திருத்தந்தையின் வதிவிடத்தில் 1400 அறைகள் உண்டு 1000ற்கும் மேற்பட்ட படிக்கட்டுக்கள் உண்டு.

ஆனால் திருத்தந்தை பிரான்சிஸ் இதனைத் தவிர்த்து புதிய இடமாகிய "Domanus Sancta Martha" என்ற வத்திக்கானின் ஒரு மூலையில் அமைந்துள்ள 5 மாடிக் கட்டிடமான விருந்தினர் விடுதியில் தங்குவதற்கு முடிவெடுத்துள்ளார். இங்குதான் அவர் Conclaveக்கு வந்து தங்கியிருந்தார். இங்கு 105 அறைகள் உண்டு அவற்றில் தனி அறைகள் 26 (Single Room) திருத்தந்தையின் வாசஸ்தலத்தில் வேலை செய்வோரும், நிரந்தரக் குடியிருப்பாளர்களுமே இங்கே வசித்துவருகின்றனர். இங்கு 4 சிற்றாலயங்களும் கருத்தரங்கு மண்டபமும் அல்லது கேட்போர் கூடமும் உண்டு. அவர்களோடு கடந்த 22.03.2013 அன்று திருப்பலி ஒப்புக்கொடுத்து ஒவ்வொருவருக்கும் ஆசீர் வழங்கினார்.


## திருத்தந்தை பிரான்ஸிசின் முகம் தாங்கிய பொருட்கள்

புதிய திருத்தந்தையாக பிரான்சிஸ் தெரிவுசெய்யப்பட்ட மறுநாள் அதாவது மார்ச் 14ஆம் திகதி காலை வத்திக்கான் நகரம் முழுவதும் அவரது புன்னகை பூத்த முகம் தாங்கிய செபமாலைகள், மெழுகுதிரிகள், பென்சில், பேனை, தபால் அட்டைகள், கையடக்கத் தொலைபேசி மேலுறைகள், தலையணை உறைகள், திறப்புக் கோர்வை போன்றவை விற்பனைக்கு வந்திருந்தன. அவற்றைக் கீழே காணலாம்.




## திருத்தந்தையின் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள்

திருத்தந்தையின் வாசஸ்தலத்தையும், அவரையும் பாதுகாப்பதற்கென 110 சுவிஸ் நாட்டுப் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் கடமையாற்றி வருகின்றனர். அத்தோடு மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்தவும் போக்குவரத்து நெரிசல்களைக் குறைக்கவும் இவர்கள் செயற்படுவார்கள். சுவிஸ் பாதுகாப்பு உத்தியோகஸ்தர் ஒருவர் திருத்தந்தையின் பதவியேற்பு வைபவம் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், "எமக்குப் புதிய திருத்தந்தை பிரான்சிஸ் சில புதிய செயற்பாட்டு முறைகளை நடைமுறைப்படுத்த அறிவுரை வழங்கியிருக்கின்றார். மக்கள் தன்னை நெருங்கி வருகின்ற வேளையில் அவர்களைத் தடுக்க வேண்டாம் என்றும் அவ்வேளையில் பாதுகாப்பு அவசியம் அற்றது என்றும் குறிப்பிட்டுள்ளார். நாம் மக்கள் நெருங்கி வருவதைப் பார்க்கும்போது பதட்டம் அடைவதுண்டு இருப்பினும் எம்மை நாம் இப்போது அவரது விருப்பத்திற்கேற்ப செயற்படப் பழகி விட்டோம்" என்று அந்த அதிகாரி குறிப்பிட்டார்.



சுவிஸ் பாதுகாப்பு படையினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அதிர்வுகள் ......!

## அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

### சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 19.




**காதல் 'ஓட்டப்போட்டி'!**

பாடசாலைகளில் முதல் தவணையில் விளையாட்டுப்போட்டி நடைபெறுவதுண்டு. சில கிராமங்களில் இவ்விளையாட்டுப் போட்டியை 'ஓட்டப் போட்டி' என்றும் அழைக்கிறார்கள். பரவலாக இவ்வாண்டும் எல்லாப் பாடசாலைகளிலும் 'ஓட்டப் போட்டிகள்' மிகச் சிறப்பாக நடைபெற்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வோட்டப் போட்டிகளுக்காக ஓடிப் பழகியோ என்னவோ, சில பாடசாலைகளிலிருந்து ஒருசில மாணவ மாணவியர்கள் 'சோடி'களாக ஓடியிருப்பதாக அறியக்கிடக்கிறது. அதுவும், இச்'சோடி'கள் சிறுவர்கள் (minors) என்ற வகைப்படுத்தலின்கீழ் வருபவர்கள். அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் இச்சோடி ஓட்டத்தில் யாருக்கு முதலிடம் கொடுக்கலாம் என்பதில் திண்டாடிப் போகிறார்களாம். காரணம், இந்த ஓட்டப்போட்டியில் இருவர் மட்டுமே ஓடுகிறார்கள். இருவரும் சேர்ந்தே ஓடுவதால் எந்த நூல் பிடித்தும் முதலிடம் யாருக்கு என்பதில் தொடர்ந்து இழுபறி நிலையே நிலவுவதாகவும், இதனால், இப்போட்டி நடுவர்களாகிய அதிபர் ஆசிரியர்கள் பெற்றோர், தங்களுக்குள் இவ்விடயத்தில் முரண்பட்டுக்கொள்வதாகவும் தெரிகிறது.

பாவம், அதிபர் ஆசிரியர்களால் என்ன செய்ய முடியும்? அவர்கள் கல்வி அமைச்சினால் நிர்ணயிக்கப்பட்ட பாடத்திட்டத்தைத்தான் (syllabus) கற்பிப்பார்கள். "இல்லை, நாங்கள் விரும்புகின்ற 'சிலபஸ்சை'த்தான் (syllabus) படிப்போம்" என்றால் இந்த அப்பாவி அதிபர் ஆசிரியர்களால் என்னதான் செய்யமுடியும்? அத்துடன், ஆசிரியர்கள் வகுப்பறைகளில் மாணவர்களை இருத்தி வைத்து ஆறுதலாக அமைதியாக கற்பிப்பார்கள். 'இதுகள்', "இல்லை நாங்கள் ஓடிபோய், ஒளிந்திருந்துதான் படிக்கப் போகிறோம், 'சிலபஸ்சை' முடிக்கப் போகிறோம்" என்று ஒற்றைக்காலில் நின்றால் யார் இவர்களுக்கு உதவ முடியும்?

என்ன, 'அந்த ஓட்ட' போட்டி வேகம், 'சோடா'வை உடைத்ததும் 'கஸ்' (gas) வெளியேறுவதுபோல விரைவாக வெளியேறி சற்று நேரத்திற்குள்ளேயே அடங்கிவிடும். பின்பு, மூன்று நான்கு நாட்களுக்கு முன்னர் பிறந்த பூனைக்குட்டிகள்போல கண்ணைத் திறந்து பார்த்தால் எல்லாம் தர்மசங்கடமாகப் போய்விடும். எனவேதான், இவ்விடயத்தில் பெண் பிள்ளைகள் மிக அவதானமாக இருக்கவேண்டும். ஏனென்றால், 'பெடிகள்', அவர்களின் உசார் அடங்கியதும் மறைந்துவிடுவார்கள். பெண்பிள்ளைகள்தான் கொஞ்சக் காலம் போனதும் தன்னோடு இன்னொன்றையும் தாய்ப்பூனை காவித்திரிவதுபோல காவித்திரியவேண்டி வரும். ஆகவேதான், அதிபர் ஆசிரியர்கள் பெற்றோர் மற்றும் வழிகாட்டிகள் இவ்விடயத்தை இளையோரின் உள்ளங்களில் நன்றாகப் பதியும்படி செய்யவேண்டும் என்பது இன்றைய காலத்தின் மிக அவசரத் தேவையாக அவதானிக்கப்படுகிறது.

இது என்ன புதுச் சமாச்சாரமா? கடந்த காலத்திலும் 'இப்படியான ஓட்டப்போட்டி'களில் ஓடிய சோடிகள் இருக்கத்தானே செய்திருக்கின்றன என்றொரு கேள்வியை யாரும் முன்வைக்கலாம். உண்மைதான், அக்காலத்திற்கும் இக்காலத்திற்கும் இடையில் ஓரே ஒரு முக்கிய வித்தியாசத்தை தெளிவாகப் பார்க்கலாம். அது, இக்காலத்தவர்களின் வேகம்! அதிவிரைவு பேருந்துகளைப் பார்த்தோ அல்லது அதில் பயணம் செய்தோ தெரியவில்லை; 'பறக்குதுகள்'!

**காதல் றம்மியமானது!**

"உலகத்தில் என்றுமே தீர்ந்துபோகாத விசயங்கள் இரண்டு. ஒன்று உழைப்பு; இன்னொன்று காதல். பூமி சூரியனைச் சுற்றிச்சுற்றி வருவது மாதிரி மனிதகுலம் இந்த இரண்டையும்தான் சுற்றிச்சுற்றி வரவேண்டும். சூரியனைச் சுற்றி வராவிட்டால் பூமிக்குப் பருவங்கள் இல்லை. உழைப்பையும் காதலையும் சுற்றிவராவிட்டால் மானுடத்தின் சரித்திரத்திற்கென்று சம்பவங்கள் இல்லை. உழைப்பு உலகத்தைப் புதுப்பிக்கிறது. காதல் உயிர்களைப் புதுப்பிக்கிறது. காதலையும் உழைப்பையும் கழித்துவிட்டால், விலங்குகளின் பட்டியலில் கடைசியாக மனிதன் பெயரும் எழுதப்பட்டிருக்கும்..." என்பார் கவிப்பேரரசு வைரமுத்து. காதல் என்றாலே றம்மியமானதுதான். காதல் புனிதமானது, அதேவேளை புதுமையானதும்கூட. காதல் உணர்வு உண்மையில் உயிரோட்டம் நிறைந்தது. உயிர் இயக்கத்தின் இருப்பிடம் என்றுகூட சொல்லக்கூடிய அளவிற்கு காதல் வலிமை படைத்தது.

ஆனால் இன்று, காதலே கத்திக்குத்துக்கும், வாள் வீச்சுக்கும், குடும்ப முறுகலுக்கும், கோஸ்டி மோதலுக்கும் காரணமாகிறது என்பதைப் பார்க்கிறபோது; என்ன கற்காலத்திலா வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்ற உணர்வு வருவது தவிர்க்க முடியாததே. இவ்வாறு காதல், விரும்பாத பல விஸ்வரூபங்கள் எடுப்பதற்குக் காரணங்களாக; ஒன்று ஒருதலைக்காதல், இரண்டு பொருந்தாக்காதல் எனச் சுருக்கமாக நோக்கலாம்.

**ஒருதலைக்காதல்! பொருந்தாக்காதல்!!**

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணைகள் முறையே புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் போன்ற காதல் ஒழுக்கங்களை கொண்டிருந்தன என சங்ககால இலக்கியங்கள் விபரிக்கின்றன. குறிஞ்சி நிலத்தில் இரவுக்குறி, பகற்குறி, பாங்கற் கூட்டம், இடம் தலைப்பாடு போன்ற காதல் ஒழுக்கங்களையும் காணலாம். இவற்றோடு கைக்கிளை, பெருந்திணை போன்ற காதல் ஒழுக்கங்களைப் பற்றியும் சங்க காலத்து இலக்கியங்கள் பேசுகின்றன.

கைக்கிளை என்பது ஒருதலைக்காதல் ஒழுக்கமாகும். தான் விரும்பும் ஒருவரை, அவர் விரும்பம் இன்றியே காதலிப்பதாகும். அனேகமாக ஆண்கள் மத்தியில் இது அதிகமாக இருப்பதாகத் தெரிகிறது. தான் நேசிப்பவளை தூக்கிக்கொண்டு போகும் சம்பவங்களை அவ்வப்போது பத்திரிகைகளின் மூலமாக அறியலாம். காரணம், இவன் காதலை, அவள் விரும்பாததால்; 'அவள் நடக்கவும் மாட்டாள்','கூட்டிக்கொண்டு ஓட வரவும் மாட்டாள்' என்பதால் தூக்கிக்கொண்டு ஓடுகிறார்கள் என இக்காதலைப் புரிந்துகொள்ள வேண்டி இருக்கிறது. இவ்வொருதலைக் காதலைத்தான் சங்க காலத்து இலக்கியம் கைக்கிளை என்றழைத்தது.

மற்றையது பெருந்திணைக்காதல் ஒழுக்கமாகும். இது பொருந்தாக்காதலைக் குறிக்கும். ஒருவன் ஒருத்திமீது கட்டுக்கடங்காக் காமத்தினால் அவளை அடைய முடியாது வரைபாய்தல், மடல் ஏறல் போன்றவற்றால் தனது இன்னுயிரை மாய்த்துக்கொள்ளுதலை பெருந்திணைக்காதல் என்றார்கள் சங்க காலத்தினர். பொருந்தாக் காதலினால் அன்று தொடக்கம் இன்று வரை உயிரை மாய்த்தல் தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது. வரைபாய்தல், மடல் ஏறல் போன்றவை நவீன வடிவங்களைப் பெற்று இக்காலங்களில் இவை வெவ்வேறு முறைகளில் நடந்தேறத்தான் செய்கின்றன. பெருகுகின்ற சனத்தொகை ஒருவகையில் குறைவதற்கும் வழி வேண்டும் அல்லவா!

**'மைனர் குஞ்சு'க் காதல்!**

இந்த நவீன யுகத்தில், இருவருக்கும், காதல் செய்யும் ஆணுக்கும் பொண்ணுக்கும்; தேவையான மனப்பொருத்தம், மனமுதிர்ச்சி, சுய விருப்பம், புரிந்துணர்வு போன்ற உள்ளம் சார்ந்த பொருத்தங்களையும்; குடும்பத்தில் புரிந்துணர்வு, பொருளாதார நிலை போன்ற புறக் காரணிகளையும் யார் சீர்தூக்கிப் பார்க்கிறார்கள் இன்று? சீர்தூக்கிப் பார்த்தபின், 'இது பொருந்தாக் காதல்' என்று யார் விட்டுவிடுகிறார்கள்? பொருந்தாது என நன்கு தெரிந்தும் பொருந்தாக் காதலையும் பொருத்திக் கொண்டல்லவா புறப்பட்டு விடுகிறார்கள் தற்காலத்துத் தலைமுறையினர். குறிப்பாக, 'மைனர் குஞ்சு' தலையெடுத்ததும், தலைகீழாகத்தான் தம்பி நடக்கத் தலைப்படுகிறான். யார் என்ன செய்ய முடியும்? அதனுடைய குணமும் இயல்பும் அப்படித்தான், 'மைனர் குஞ்சு'னுடைய எழுச்சியும் கிளர்ச்சியும் ஆரம்பத்தில் அப்படித்தான் இருக்கும்! துடுப்பாட்டத்திற்குத்தான் துடியாத் துடிப்பான்!

சவாரிக்குப் பூட்டிய காளைக்கன்றுகள் மாதிரித்தான்!! 'மைனர் குஞ்சு' பாயத்தான் நிற்பான்!!! அதுக்காக, காளைக்கன்றுகள் பாய்கிற திசையில் சவாரி செய்ய முடியுமா? குறிப்பிடப்பட்ட சுவட்டு ஒழுங்கில்தான் (track) காளைக்கன்றுகளைச் சவாரிசெய்ய பழக்கவேண்டும். இல்லையென்றால் போட்டியில் இருந்து விலக்கி விடுவார்கள். இதுபோலதான், 'மைனர் குஞ்ச'ரையும் ஒழுங்குபடுத்தப் பழக்க வேண்டும். அவர் பாய்கிற திசையில் பழக்கப்பட்டால் பக்கவிளைவுகள் பயங்கரமாகத்தான் வந்து சேரும்! ஆகவேதான், ஒவ்வொரு நாட்டின் சட்டதிட்டத்தில்கூட குடும்பமாய் சேர்ந்து வாழ்வதற்கான வயதெல்லையை வகுத்து சட்டமாக்கி வைத்திருக்கிறார்கள். பதினெட்டு ஆவதற்குள் பாய நின்றால் விளைவு என்னவாகும்? மூக்கைப் பிடித்தால் வாயைப் பிளக்கத் தெரியாத சில சின்னஞ்சிறுசுகள்கூட 'இந்த விசயத்தில்' சிங்கங்களாக மாறிவிடுகின்றன!

எனவேதான்,'மைனர் தம்பி'மாரும்,'மைனர் தங்கச்சி'மாரும் இவ்விடயத்தில் முதிர்ச்சி அடையவேண்டி இருக்கிறது. முதிர்ச்சி அடையாமல் 'வெம்பிப் பழுப்பதில்' அல்லது 'பிஞ்சில் பழுப்பதில்' எதுவித ருசியும் இருக்காது, சுவையும் இருக்காது, என்று கூறுவதிலும் பார்க்க ஒரு பிரயோசனமும் இருக்காது என்றே சொல்லவேண்டும். ஆக, இளையோர் இதனைக் கொஞ்சம் ஆழ்ந்து சிந்திப்பதும், இளையோரை இவ்விடயம் குறித்து ஆழ்ந்த சிந்தனைக்குத் தூண்டுவதும் பெற்றோர், அதிபர், ஆசிரியர்களின் பாரிய பொறுப்பு என்பதையும் இவ்விடத்தில் கோடிட்டுக் காட்டவேண்டி இருக்கிறது. எத்தனை விடயங்கள் கோடிட்டுக் காட்டப்படுகின்றன! எந்தப் பெற்றோர் அவர்களின் வீடுகளிலும், எந்த அதிபர் ஆசிரியர்கள் அவர்கள் பாடசாலைகளிலும், எந்த சமூகத் தலைவர்கள் தம் சமய அல்லது சமூக நிறுவனங்களிலும் இவற்றைப்பற்றிச் கொஞ்சம் சிந்திக்க விளைகிறார்கள் என்பது கேள்விக்குறியே!

**காதல் என்பது எந்த மாதிரி?**

"காதல் என்பது 'current' (மின்சாரம்) இல்லாத நேரத்தில வாற நுளம்பு மாதிரி! துரத்தவும் முடியாது, ஒழுங்காகத் தூங்கவும் முடியாது" எனச் சொல்லிச் சென்றான் ஒருவன். இதனைச் சொன்னவன், நல்ல நுளம்புக்கடி (காதலினால் விழுந்த அடி) வாங்கியவனாகத்தான் இருக்கவேண்டும். அல்லது போனால், இப்படிச் சிந்தனை எப்படிப் பிறக்கும்! "காதல் என்பது 'பபிள் கம்'(bubblegum) மாதிரி! முதலில் இனிக்கும், பிறகு இழுபடும்" என்றான் இன்னொருவன். இவனும் 'பபிள் கம்' சாப்பிட்டுப் சாப்பிட்டே காலத்தைக் கடத்தியவனாக இருக்க வேண்டும். காதலால் மிஞ்சியது இவருக்கு 'பபிள் கம்' ஆகக்கூட இருக்கலாம். பழையதை நினைத்து 'பபிள் கம்'மை சப்பிக்கொண்டு இருக்கவேண்டியதுதான்? வேறென்ன செய்வது? ஒவ்வொருவரும் தங்கள் அனுபவத்திலிருந்துதான் என்றல்ல, அனுபவத்திலிருந்தும் பேசுவதுண்டு!

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

# புனிதர்களின் பாதையில்

## புனித டோமினிக் சாவியோ

### துறவி, இளைஞர்களின் பாதுகாலன் – (கி.பி. 1982 - 1857)



**மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்**

வட இத்தாலியில் கி. பி 1842ல் முரியால்டோ நகரில் தோன்றிய டோமினிக் புனித டொன் பொஸ்கோவின் முதல் மாணவர்களில் ஒருவர். இவரது குடும்பத்தில் இவரின் குழந்தைப்பருவம் முதல் புனிதத்தில் வளரும் சூழ்நிலை எப்பக்கத்தில் திரும்பினாலும் நிலவியது. ஆலயம் சென்றால் அங்கே பங்குத்தந்தை ஜோன், இவருடைய புனிதமான களங்கமற்ற உள்ளத்தைக் கண்டு அதில் தெய்வீக நெருப்புப் பற்றியெரிந்து கொண்டிருக்க வழிவகைகளைக் காண்பித்தார். அன்னை மரியிடம் கொண்டிருந்த இவரது பக்தியை வளர்க்க எங்கும் நல்ல சூழ்நிலை அமைந்திருந்தது. மிக இளவயதிலிருந்தே காற்றோ, குளிரோ, மழையோ, எதையும் பொருட்படுத்தாமல் அதிகாலை 5 மணிக்கே ஆலயம் செல்வதும், தவறாது பூசைக்கு உதவி செய்வதும் இயல்பாகவே அவருக்கு இருந்த ஆசை. இது அவரது ஆன்மீகத்தின் ஆழத்தை வெளிக்கொணர்ந்தது.

"டோமினிக் என்ற ஓர் இளைஞர் தமது திருமுழுக்கு நாளன்று பெற்றுக்கொண்ட புனிதத்தைப் பழுதின்றிக் காப்பாற்றத் தெரிந்து கொண்டவர். இவர் உண்மையிலேயே ஒரு புனிதர்" என்று குறிப்பிட்டார் திருத்தந்தை 10ஆம் பத்திநாதர்.

"தூய்மை, பக்தி, ஆன்ம வேட்கை இம்மூன்றினின்றும் இவர் அடைந்த ஆற்றல் - இவரது கிறிஸ்தவ வாழ்வுக்கு ஊற்றுக்கண்ணாக அமைந்தது" என்று 11ஆம் பத்திநாதர் குறிப்பிடுகிறார்.

1857ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 9ஆம் நாள் இவர் இறக்கும் வேளையில் "ஆகா, என்ன இன்பமயமான அற்புதக் காட்சி" என்று விண்ணகக் காட்சி பற்றிப் பரவச வார்த்தைகள் கூறி உயிர் துறந்தார்.

1954ஜுன் 12ஆம் நாள் திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் இந்த இளைஞருக்குப் புனிதர் பட்டம் அளித்தபோது இவ்வாறு கூறினார், "இந்தப் 15 வயது இளைஞர் டோமினிக் சாவியோவைப் பீடங்களில் ஏற்றலாம் என்று இந்தத் திருச்சடங்கு மூலம் பிரகடனப்படுத்துவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இன்றைய இளைஞர்கள் இவரின் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். மிகக்குறிப்பாக, தீய சக்திகள் காட்டுத்தீபோல பரவிக்கொண்டிருக்கும் கால கட்டத்தில் புனிதத்தை இளம் உள்ளங்களிலிருந்து கருவறுப்பது மட்டுமன்றி நஞ்சையும் புகுத்திக்கொண்டிருக்கின்ற மூழ்நிலையில், சாவியோவின் புனித வாழ்க்கை நம் இளைஞர்களுக்கு அறைகூவலாக அமையட்டும்."

*__சிந்தனைக்கு__*

"எனக்குப் பெரிய செயல்களைச் சாதிக்க ஆற்றல் கிடையாது. ஆனால் நான் செய்வது அனைத்தையும் மிகச் சிறியவையேயானாலும் இறைவனின் மிகப் பெரும் புகழ்ச்சிக்காகவே செய்து முடிப்பேன்"- புனித சாவியோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் முஸ்லிம் மக்களிடையே சமாதான நல்லுறவை ஏற்படுத்த

# மன்னார் பிரஜைகள் குழு நடவடிக்கை

காலம் காலமாக தாய் பிள்ளைகள்போல நல்லுறவுடன் சமாதானமாக மன்னார் மாவட்டத்தில் வாழ்ந்துவந்த தமிழ், முஸ்லீம் மக்களிடையே அண்மைக்காலங்களில் நம்பிக்கையீனங்களும், முரண்பாடுகளும் தோன்றியுள்ளன. 1990ல் முஸ்லிம் மக்கள் மன்னார் மாவட்டத்தில் இருந்து வெறும் கையினராக ஆயுததாரிகளால் விரட்டப்பட்டவர்களாயினும், இதன் காரணமாக இம்மக்களின் நல்லுறவு பாதிப்படையவில்லை. ஆயினும் அரசியல்வாதிகளால் தம் சுய அரசியல் இலாபம் கருதி தமிழ், முஸ்லீம் மக்கள் மத்தியில் உருவாக்கப்பட்ட பாரபட்சமான செயற்பாடுகளால் முரண்பாடுகள் தோன்ற ஆரம்பித்தன.

இப்படியான முரண்பாடுகளை முளையிலேயே கிள்ளி எறியும் நோக்குடன், மன்னார் பிரஜைகள் குழு ஓர் சமாதான செயற்திட்டத்தை முன்னெடுத்து. முதற்கட்டமாக,

1. வட்டக்கண்டல், பாலையாற்றுக்குளம், பாசிமோட்டை, அடம்பன் தாழ்வு,
2. ஓலைத்தொடுவாய், புதுக்குடியிருப்பு
3. வேப்பங்குளம், மருதமடு
4. தாமரைக்குளம், வேட்டையான் முறிப்பு, பாப்பாமோட்டை, மினுக்கன், கட்டைக்காடு, விழாங்கொழி.
5. நெடுவரம்பு, கன்னாட்டி, சாளம்பன், ஆண்டாங்குளம், பள்ளிவாசல்பிட்டி.
6. நெடுங்கண்டல், கருங்கண்டல், இத்திக்கண்டல், வேப்பங்குளம், சொர்ணபுரி.
7. பெரிய புள்ளாச்சி பொற்கேணி, சிறிய புள்ளாச்சி பொற்கேணி

ஆகிய கிராமங்களை ஏழு குழுக்களாக அமைத்து தமிழ், முஸ்லிம் மக்களை ஒன்றுகூட்டி கருத்தரங்குகளை நடாத்தியது.

இக்கருத்தரங்கில் வளவாளர்களாக மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்பணி. இ. செபமாலை, செயலாளர் திரு. தே. பி. சிந்தாத்துரை, பொருளாளர் திரு. ந. தங்கராஜா, செயற்குழு உறுப்பினர்கள் மௌலவி, எஸ். ஏ. அஸீம், திரு. அ. சகாயம் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். திரு. சு. புண்ணியலிங்கம் திரு. பீ. ஏ. அன்ரனி மார்க் ஆகியோரும் பங்களிப்பு செய்திருந்தார்கள்.

இக்கருத்தரங்குகளை முதலில் சந்தேகக் கண்ணுடன் அணுகி உண்மைச் சம்பவங்கள் சிலபற்றி, கலந்துகொண்ட முஸ்லிம் புத்திஜீவிகள் பல கேள்விகளை எழுப்பினர். அனைத்து வினாக்களுக்கும் செயலாளர் திரு. சிந்தாத்துரை அவர்கள் புள்ளி விபரங்களுடனும், ஆதாரங்களுடனும் விடையளித்தார்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## முள்ளிவாய்க்கால் கல்வாரியில் வித்தாகிய குருத்துவ விருட்சங்கள் ...

08 ஆம் பக்கத் தொடர்ச்சி

அந்த நேரத்தில் பிரான்சிஸ் அடிகளார் பல விடயங்களை மனம்விட்டு பேசினார். உரையாடல் முடிவில் அவரை எங்களோடு வந்து இருக்கும்படி கேட்டபோது, அவர் இரண்டு காலும் ஊனமுற்ற அந்தப் பெண்ணைக் காட்டி "நான் உங்களுடன் வர ஆயத்தம், ஆனால் இந்தப் பெண்ணையும் கொண்டு வந்து உங்களுக்கு சுமையாக இருக்க விரும்பவில்லை" என்று உருக்கமாகவும் நிதானமாகவும் கூறிய வார்த்தைகளால் நாம் அவரைக் கட்டாயப்படுத்தி அழைத்துச்செல்ல விரும்பவில்லை. இவர் சுட்டிக்காட்டிய அந்தப் பெண் இவரிடம் ஆங்கிலம் பயின்ற ஒரு மாணவி. அந்தப் பெண்ணைப் பார்த்தபோது, அவளுக்கு முன்னாலே நீலநிற பேசின் ஒன்றிற்குள்ளே இரண்டு பின்னங்கால்களையும் இழந்த அவரின் செல்லப் பிராணியான பூனைக்குட்டி காணப்பட்டது,

அடிகளார் கிளிநொச்சி அம்பாள் குளம் என்ற இடத்தில் பல வருடங்களாக இருந்து ஆன்மீக, சமூகப்பணி ஆற்றிக்கொண்டு இருந்தவர். தாய் நாட்டின்மீதும் மக்களின் விடுதலைமீதும் அதீத ஆர்வம் கொண்ட இவர் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற பின்னர் தமிழ்ச் சமூகத்தின் கல்வி மேம்பாட்டுக்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டவர். வரலாற்றின் பல்வேறு கால கட்டங்களில் தன்னுடைய கல்வித்துறை அனுபவத்தால் போர்க்கால சமூகக் கட்டமைப்புக்குள் உருவாக்கப்பட்டிருந்த பல கல்விசார்ந்த துறைகளில் தலைமைப் பதவிகளை வகித்தவர். வன்னியில் தமிழ் இளையோரினது ஆங்கிலமொழிப் புலமைக்கு வித்திட்டு, நீண்டநாள் கனவாகிய ஆங்கிலமொழிக் கல்லூரியை 2004ம் ஆண்டு கிளிநொச்சியில் பிறப்பெடுக்கச்செய்து தனது ஆங்கில மொழிப் புலமையினாலும் நீண்ட கால கல்வித்துறை அனுபவத்தினாலும் இக்கல்லூரியை திறம்பட இயக்கி ஆங்கில மொழிப்பட்டதாரிகளை உருவாக்கிய பெருமை இவரையே சாரும்.

கடின உழைப்பும், விடாமுயற்சியும் கொண்ட இவர் மக்களின் வாழ்வியலின் துன்பமான வரலாற்றுத் தடங்களுடன் தன்னை இரண்டற இணைத்துக்கொண்டார். இடம்பெயர்வு என்ற போரியல் சுழற்சிக்குள்ளே தர்மபுரம், வள்ளிபுரம், உடையார்கட்டு, இரணைப்பாலை, வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் என பல்வேறு குறிச்சிகளைத் தாண்டி போரின் இறுதிக்காலம்வரை துன்பப்படும் மக்களோடு இருந்தார். ஏழ்மையை வாழ்வாக்கியவர். உதவி என்று தேடிச்செல்வோரை அன்போடு அரவணைத்து மனம் கோணாமல் உதவிசெய்தார். இவர் வள்ளிபுரம் பிரதேசத்தில் இருந்தபோது குருத்துவத்தின் 50வது வருட நிறைவை உடையார்கட்டு தூய யூதாததேயு ஆலயத்தில் 2008 மார்கழி 21ம் திகதி ஏனைய குருக்களோடும் இறைமக்களோடும் சேர்ந்து மிகவும் எளிமையான முறையிலே கொண்டாடினார். 50 வருட குருத்துவப் பயணத்தில் இறைவனின் துணையோடு வரலாற்றில் பல சாதனைகளை இவர் புரிந்திருக்கிறார்.

இடப்பெயர்வின் தாக்கம் இவரின் உடலிலும் பலவிதமான நோய்களை ஏற்படுத்தத் தொடங்கியது. உடல் பலவீனம், கண்பார்வை குறைதல் போன்ற சவால்களுக்கு முகம் கொடுத்தவராக, தனது இயலாமையிலும் உறுதியாக பல பணிகளைப் புரிந்தவர். எந்தவேளையிலும் யாருக்கும் இவர் சுமையாக இருக்க விரும்பாதவர். இவர் அகோர எறிகணைத்தாக்குதல்கள் பலவற்றுக்குள் சிக்குண்டு இறை துணையால் பாதுகாக்கப்பட்டார்.

ஒருமுறை உடையார்கட்டு ஆலயத்தில் நாங்கள் ஒன்றாக இருந்தபோது எறிகணைத் தாக்குதலுக்குள் எல்லோரும் சிக்குண்டு இரவு வேளையில் சிதறி ஓடும்போது, கைத்தாங்கலாக இவரை அழைத்துச் சென்றது இன்னும் எனது நினைவில் உள்ளது. பல தடவைகளில் உந்துருளியில் இவரை அழைத்துக்கொண்டு நீண்ட பயணங்கள் செய்யும்போது, தான் கடந்து நடந்து வந்த வாழ்வியல் அனுபவங்களை என்னோடு பகிர்ந்துகொள்வார். இவர் எமது கடந்த கால வரலாற்றை நன்கு அறிந்திருந்த இறைபணியாளர் என்பதைப் புரிந்துகொண்டேன்.

இவரது கண்களில் ஒன்று சத்திரசிகிச்சை செய்யப்பட்டு குணப்படுத்தப்பட வேண்டிய கட்டாய தேவை இக்காலப்பகுதியில் ஏற்பட்டது. மருத்துவ சிகிச்சைக்காக அங்கிருந்து வெளியேறினால் தான் மீண்டும் திரும்பி வரமுடியாது போனால், தனது பணிகள் பாதிப்படையும் என்று நினைத்தவராக, ஆரம்பத்தில் மறுத்தாலும் காலப்போக்கில் இவரது பார்வை மேலும் மேலும் குன்றிப்போக பார்வையை இழக்க நேரிடும் அபாயத்தை உணர்ந்தவராக அங்கிருந்து வெளியேற விரும்பியபோது அதற்கு ஏதுவான கால சூழ்நிலைகள் இவரின் பயணத்திற்கு சாதகமாக அமையவில்லை. இவரை அங்கிருந்து மருத்துவ சிகிச்சைக்காக வெளியேற்றுவதற்கு நாங்கள் பல முயற்சிகள் எடுத்தபோதும் எதுவும் பயனளிக்கவில்லை. இருந்தாலும் எல்லாவற்றையும் நல்மனதோடு ஏற்றுக்கொண்டார்.

2009 மே, 13ம் திகதி அவரை விட்டு நான் பிரியும்போது இனம்புரியாத பயம் ஒன்று எனது மனதில் இருந்தது. தனித்து விடப்படுகிறாரே என்று எனது உள்மனம் சொல்லிக் கொண்டேயிருந்தது. அந்த வேளையில் "கடவுளுக்குச் சித்தமானால் மீண்டும் ஒருமுறை சந்திப்போம்" என்ற அவரது வாயிலிருந்து வந்த வார்த்தைகள் என்னை சற்று ஆறுதல்படுத்தியது. அந்த இடத்திலிருந்து அன்றைய தினமே வெளியேறி இன்னுமொரு இடத்தில் பாதுகாப்புத் தேடிய இவர் மே மாதம் 17ம் திகதி வட்டுவாகல் பாலத்தைத் தாண்டி பல இலட்சக்கணக்கான மக்களோடு இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்துக்குள் சென்றார்.

களைப்பு, சோர்வு அவரது உடலின் இசைவாக்கத்திலே தளர்ச்சியை ஏற்படுத்த ஒரு மரநிழலின்கீழ் தன்னுடன் இருந்த தனது பணியாளர்களோடு இளைப்பாறிக்கொண்டிருந்தார். பலர் அவரை அடையாளம் கண்டு தங்களின் சோகங்களை அவரோடு பகிர்ந்துகொண்டனர். இவரின் பிரசன்னத்தை அங்கு கண்ட அரசியல்த்துறையைச் சேர்ந்த சிலர், மே 18 காலை வேளையில் இவரை அணுகிச்சென்று தங்களை அடையாளப்படுத்தி, இராணுவத்தினரிடம் சரணடைய தமக்கு உதவிபுரியும்படி கேட்டுக் கொண்டார்கள். அடிகளாரின் ஆங்கில மொழிப்புலமை சரணடைதலுக்குரிய ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்கும் என்பதையும், அவர் ஒரு குருவானவர் என்பதால் இராணுவத்தினர் இவருக்கு மதிப்பளிப்பார்கள் என்பதையும் சுட்டிக்காட்டினார்கள். தாராள உள்ளத்தோடு மனம் கோணாமல் உதவி செய்யும் மனம் படைத்த இவர், இதற்கு இசைந்து அதனை செயற்படுத்துவதற்கு, இராணுவ உயர் அதிகாரிகளை தொடர்பு கொண்டார். அவர்களும் சரணடைதலுக்கு சம்மதித்து சரணடைபவர்களின் பெயர்ப்பட்டியலை ஆயத்தம் செய்யும்படி கேட்டுக்கொண்டார்கள். ஆரம்பத்தில் ஒருசிலர் மட்டுமே தங்களை அடையாளப்படுத்தினாலும், அடிகளாரின் அந்த முயற்சியை அறிந்த இன்னும் பலர் அங்கு ஒன்றுகூடி குடும்பசகிதம் தங்களின் பெயர் விபரங்களை அப்பட்டியலில் சேர்த்துக்கொண்டார்கள். ஒருசிலருடன் ஆரம்பித்து இப்பெயர்ப்பட்டியல் மிகவும் நீண்ட பட்டியலாக மாறியது. இறுதியில் அந்தப் பெயர்பட்டியலைப் பெற்றுக்கொண்ட அதிகாரி அவர்களுக்கென விசேட பேருந்து வண்டிகளை ஒழுங்குசெய்து அவற்றில் ஏற்றிய பின்னர் அடிகளாரையும் அந்தப் போராளிகளோடு ஏற்றிச்சென்றார்கள். இந்தச் சம்பவங்களை பலர் கண்டுள்ளார்கள். அடிகளாரின் இருப்பு இப்போது கேள்விக்குறியாக மாறிவிட்டது. அடிகளாரோடு அந்தப் பேருந்துகளில் கொண்டுசெல்லப்பட்டவர்களின் பெயர்களும் காணாமல்போனோரின் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்பட்டுவிட்டது.

இவ்வருட்பணியாளர்கள் சரத்ஜீவன், பிரான்சிஸ் யோசப் முள்ளிவாய்க்கால் என்ற உலகப்பந்தின் ஒரு சிறு புள்ளியில் மக்களின் துன்பியலோடு தங்களின் இருப்பை கரைத்துக் கொண்டவர்கள். இறுதிக் காலத்திலும் இறைபிரசன்னத்தை மக்களுக்குக் கொடுத்தவர்கள். காற்றோடும், கடலோடும், மண்ணோடும் கரைந்துபோன பல்லாயிரக் கணக்கான மனிதர்களோடு தங்களின் வாழ்வையும் இணைத்துக் கொண்டவர்கள். வரலாற்றில் உங்களின் தடங்களை என்றும் நாம் நினைவில் கொள்வோம்!

## உண்மையின் எண்ணங்கள்

## வங்காலை பங்கிலே விசுவாசத்தின் ஓர் அங்கமாக விளங்குகின்ற அடைக்கலமாதா கோவில்

S. ஞானக்கோன் மார்க், அமெரிக்கா

மன்னார் மாதோட்டத்தின் பழமை வாய்ந்த கிராமமாகவும் தனக்கென சமூக வாழ்க்கை வகுப்பில் தனித்துவம், பணித்துவம், ஒருமைத்துவம், கலைத்துவம், வீரத்துவம், கல்வித்துவம், மதத்துவம், இனத்துவம் ஆகிய மகத்துவங்களை மாசுபடாமல் காத்துவரும் சிறப்புக்கொண்ட கிராமமாகவும் அமைகின்றது வங்காலைப்பங்கு. இங்கு சுமார் 3000 குடும்பங்கள் விசுவாசத்தின் முத்துக்களாக வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். இவர்களுடன் எம் விசுவாசத்திற்கு எதிராக பெந்தகோஸ்து சபையினரும், ஏனைய சபையினருமாக சுமார் 100 குடும்பங்கள் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். இந்தச் சமூகங்களுக்கிடையில் சுமார் நாற்பது ஆண்டு காலமாக மதச்சண்டையும், கருத்து முரண்பாடுகளும், பல மோதல்களும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந்த இரு சமூகத்தினரையும் காவல்துறையினர் முன்னின்று ஒற்றுமைப்படுத்தி வருகின்றனர். இந்தப் பெந்தகோஸ்து சபையினருக்கும் ஏனைய மதத்தினருக்கும் வங்காலை எல்லைப் பகுதிக்குள் இதுவரையில் ஆலயங்களோ வழிபாட்டுத் தளங்களோ கிடையாது. 1984ம் ஆண்டு மன்னார் மாவட்டத்தில் வாழ்கின்ற சகல பெந்தகோஸ்து சபையினரும் ஒன்றுசேர்ந்து வடக்கு மன்னார் வங்காலை நுழைவாயிலிலும், கிழக்கு நானாட்டான் வீதி வங்காலைப் புறவாயிலிலும் பெரிய ஆலயம் கட்ட ஒன்றுகூடினார்கள். இதை அறிந்த அப்போதைய பங்குத் தந்தையாக இருந்த காலம்சென்ற அருட்தந்தை அமரர் மேரி பஸ்ரியன் விசுவாசத்துடன் திடம்கொண்டு எம் ஊர் சகல இளைஞர்களையும் ஒன்றுசேர்த்து இந்த ஆலயம் கட்டுவதை தடைசெய்தார்கள். எம் வங்காலைக்கு சார்பாக அயல் பங்குகளான நறுவிலிக்குளம், வஞ்சியன்குளம், மாதிரிக்கிராம இளைஞர்களும் ஒன்றுசேர்ந்து விசுவாசத்திற்காகப் போராடினார்கள். சிறிய பங்காக இருந்தாலும் நறுவிலிக்குளம், வஞ்சியன்குளம், மாதிரிகிராமம் மக்கள் விசுவாசத்தின் தூண்களாக செயல்பட்டுக்கொண்டு இருப்பது வரவேற்கத்தக்கது.

இதன்பிறகு 1995ம் ஆண்டு அருட்தந்தை அமரர் நோபட் அடிகளாரின் காலத்திலும், 2000ம் ஆண்டு அருட்தந்தை தேவசகாயம்பிள்ளை அடிகளாரின் காலத்திலும் இப்படியான மோதல்கள் இடம்பெற்றன. இதனையும் காவல்துறையினர் தலையிட்டு சமரசம் செய்தனர்.

இவ்வாறு இருக்க 2005ம் ஆண்டு மீண்டும் வங்காலை, மன்னார் பெந்தகோஸ்து சபையினர் ஒன்றுசேர்ந்து வங்காலை நுழைவாயிலில் ஆலயம் கட்ட முன்வந்தார்கள். அப்போதைய வங்காலைப் பங்குத்தந்தை விக்ரர் அவிதப்பர் அடிகளாரின் அனுசரணையுடன் துணிச்சலாக விசுவாச வீரம்கொண்டு எம் வங்காலை கத்தோலிக்க ஆண்கள், பெண்கள், இளைஞர், யுவதிகள், சிறுவர், சிறுமியராக சுமார் 5,000 பேர் அணிதிரண்டு கோவில் மணி அடிக்கப்பட்டு வங்காலையின் நுழைவாயில் தளத்தில் இறங்கினார்கள். இந்த வேளையில் கருத்து மோதல்களும், சர்ச்சைகளும் இடம்பெற்றன.

இதனைத்தொடந்து மன்னாரில் இருந்து காவல்துறையினர் வரவழைக்கப்பட்டனர். எம்முடைய பங்குத்தந்தை அவிதப்பர் அடிகளார், ஒரு பெண்மணி உட்பட 17 ஆண்களுக்கு எதிராக காவல்துறையினர் வழக்குப் பதிவுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். சுமார் 1 1/2 வருட காலமாக வழக்கு தொடர்ந்தது. எம் பங்குத்தந்தை அவிதப்பர் அடிகளார் 15 தடவைகள் குற்றவாளிக்கூண்டில் இயேசுவின் சீடனாகவும் சாட்சியாகவும் நிறுத்தப்பட்டார். இதன்பிறகு அரசாங்கத்தால் எம் தந்தை உட்பட 18 பேரும் குற்றவாளி இல்லை என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி அந்த நிலமும் எமக்கு கையளிக்கப்பட்டது.

இப்போது உங்களுக்கு முன்பாக காட்சியளிக்கின்ற சிறிய அடைக்கலமாதா ஆலயம் இதுதான் (கீழே பார்க்கவும்). இப்போது வங்காலைப் பங்கில் பணியாற்றி வருகின்ற பங்குத்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளாரின் அயராத முயற்ச்சியினாலும் எம் பங்கு மக்களின் ஆதரவுடனும் இந்த இடத்தில் இப்போது ஓர் பெரிய ஆலயம் கட்டப்பட்டு வருகின்றது. எம் பங்குத்தநதை ஜெயபாலன் குரூஸ் அடிகளார் எம் பங்கில் பல திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார். அன்பியங்களுக்கு ஊக்கம் அளிப்பது, அருட்பணிப் பேரவையை திறம்பட நடத்துவது, எம் பங்கு அன்னம்மாள் அன்னையின் திருவிழாவை திறம்பட நடாத்துவது, எம் பங்குக் கோவிலின் உள் மேற்பகுதியை அழகுபடுத்தியது, வங்காலையின் கலைப்பொக்கிஷமாக விளங்குகின்ற பெரிய நாடகத்தை 35 ஆண்டுகளுக்குப் பிறகு 2011ம் ஆண்டு திறம்பட அரங்கேற்றம் செய்தது, யேசுவின் திருப்பாடுகளின் காட்சியை 14 ஆண்டுகளுக்குப் பிறகு 2012ம் ஆண்டு திறம்பட நடிக்க வைத்தது, அன்னம்மாள் அன்னைக்கு சிம்மாசனம் அமைத்தது, வங்காலையில் நடைபெறும் கொண்டாட்டங்களில் மதுவை தடைசெய்தது, புனித அன்னம்மாள் அன்னையின் 'அம்மையே மனமிரங்கு....' C.D யை வெளியிட்டது என பல காத்திரமான பணிகளைச் செய்துவருகின்றார். எம் பங்கு தந்தைக்கு எம் பங்கு மக்கள் சார்பாக நன்றியையும் செபத்தையும் தெரிவித்து நிற்கின்றேன். என்றும் எம் பங்கு மக்கள் விசுவாசத்தின் தூண்களாக செயல்பட்டுகொண்டு இருப்பார்களாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியச் சாரளம்

# கவிதைக் களம்

## அந்த இறுதிக் கணங்கள்

(வன்னி இறுதி யுத்தத்தின் 4ம் ஆண்டு நினைவின் சில மொழிகள்

இது ஒன்றும் வெறும் கவியல்ல. கற்பனையில் நான் வடிக்க
நீங்கள் ரசித்து படித்திட அல்லது வாயில் விரல் வைத்து
விழி விரித்திட .... விசித்திரமாய் உணர்ந்திட ....!

சிவந்த மண் பகுதியில் நடப்பது இன்னதென்றே அறியாது
சிரித்துக்கொண்டே பிரிந்திட்ட என்னவரதும் ......
பனங்கூடல்களின் அடிதனில் ஊனமான உடல்களோடே
எரிந்து கருகிப்போன இளசுகளதும்.....
கொத்துக் குண்டுகளால் துளைக்கப்பட்டு
முத்தாய் சிதறிய சிறுசுகளதும்.....
முதுமையின் வலியோடே வழிகளில் மிதிக்கப்பட்டோரதும்...
காயங்கள் ஆற்றப்படாது புண்ணாக புழு வெளியேறிட
தனித்துவிடப்பட்டோரதும்.....
மல்ரி பரல்களினால் பங்கருக்குள்ளேயே மரணித்தவரதும்...
பாலிற்காய் ஏங்கி அழுது தாய் முகம் நோக்கிய பாலகரதும்
தாகம் தீர்த்திட வெட்டப்பட்ட தற்காலிகக் கிணறுகளினுள்ளே
மூச்சடங்கிப்போனோரதும்..
சந்தேகத்தின் பெயரினில் தடுக்கப்படவென்றே
தரம் பிரிக்கப்பட்டோரதும்.....
அந்நேர வேதனைகளின் இரத்தக் கறைகளின்
நினைவுகளது மைகொண்டு எழுதுகின்றேன்
உள்ளுக்குள்ளே நெருப்பெரியும்.......
அட.... உலகுக்கெங்கே இது புரியும்?

வரலாற்றில் பேசப்பட்ட முள்ளிவாய்க்கால் முடிவுகள்
ஒன்றும் எழுதி புரியக்கூடிய உன்னத உணர்வுகளல்ல....
அவை உறைக்கும் உண்மைகள்!
முடிந்தால் சிறு துளி கண்ணீர் விடுங்கள்...
கனவுகளோடே கல்லறையானோர்
ஆண்டவனில் அமைதியடைவர்!
முகவரி இழக்கப்பட்டவரது உறவுகள் ஆறுதல் பெறுவர்!
தடுக்கப்பட்டோரது உணர்வில் தன்னம்பிக்கை பிரகாசிக்கும்..
அங்கமிழந்தோர் நெஞ்சதில் உறுதிப்பாடு ஊற்றெடுக்கும்..
இல்லையேல்.... சற்றாவது..... புரிந்திட முயலுங்கள்.
உங்களோடு சமகாலத்தில் வாழ்கின்றவர்களையாவது?

கதிர், மடுக்கோவில், மடு.



## மரணத்தை வென்ற மாவீரனே

மண்ணுயிர்க்காய் தன்னுயிர் கொடுத்த மாபரனே
விண்ணில் வீரத்திருமகனாய் விந்தைகள் புரிந்த பராபரனே
கண்ணில் பட்டவர்களை கனிவுடன் கண்ணோக்கினவரே
தண்மதிபோல தரணியெங்கும் புதுமை புரிந்த புரவலனே!

ஏழைகளில் எல்லையில்லா இரக்கம்கொண்ட இறைமகனே
கோழைகளையும் கோபுரத்தில் ஏற்றிய கோமகனே
தழைநீக்கி தன்மானத்துடன் வாழவைத்த வல்லபரனே
மழைபோல மலைமேட்டில் வசனம்பொழிந்த வள்ளலே!

போதனைகள் புரிந்து மனம் மாறவைத்த போதகனே
வேதனைகள் அனுபவித்து வெற்றிகொண்ட வேந்தனே
சாதனைகள் புரிந்து சாவை வென்ற சரித்திர நாயகனே!

*சூ. சுஸ்மிதா,*
*தரம் - 11,*
*மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி*

# கொஞ்சம் சிரிங்க

தோழி :- என்ன உங்க மாப்பிள்ளை வெளியிலே வராம ஜன்னல் வழியாகவே பார்க்கிறாரு?
புதுமணப்பெண் :- கிறிஸ்மஸ்க்கு அவருக்குச் சட்டை எடுத்தேன். பேண்ட் எடுக்க மறந்துட்டேன் அதனால்தான்.
- *தே. வினோதினி, கீரி, மன்னார்.*

ராமு :- டேய் நாளைக்கு நான் சினிமாவுக்கு போறேன் ...... வாறியா?
சோமு :- முடிஞ்சா வாரண்டா ..............
ராமு :- முடிஞ்ச பிறகு ஏண்டா வாற ... படம் ஆரம்பிக்கும் போதே வந்திடு.

.........................................

காதலன் :- அன்பே! நான் சாப்பிடும்போதெல்லாம் உன் நினைவுதான்.
காதலி :- அன்பே! எனக்கு கை கழுவும்போதெல்லாம் உன் நினைவுதான்.
- *யோ. மிரியம் டர்ஷிக்கா, நானாட்டான்.*

ஒருவர் :- சேர்! இன்னைக்கு என்ன திகதி சொல்லுங்க?
மற்றவர் :- எனக்குத் தெரியாதுங்க.
ஒருவர் :- கையில் பேப்பர் வச்சிருக்கிங்க. அதைப்பார்த்து திகதி சொல்லக்கூடாதா?
மற்றவர் :- இது நேத்தைய பேப்பர் ஆட்சே. என்னால் எப்படி இன்னைய திகதியைச் சொல்ல முடியும்?

.........................................

பைத்தியம் :- பழைய டொக்டரைவிட உங்களை எங்க எல்லோருக்கும் நன்றாகப் பிடிச்சிருக்கு!
டொக்டர் :- (மகிழ்ச்சியுடன்) ஏன்?
பைத்தியம் :- நீங்க பார்க்கிறதுக்கு எங்களை மாதிரியே இருக்கீங்க!

.........................................

அப்பா :- டேய் சோம்பேறி! சூரியன் எழுந்து எவ்வளவு நேரம் ஆகிறது? இன்னும் தூங்கிக்கொண்டே இருக்கிறாயே? எழுந்திரு
மகன் :- அப்பா! சூரியன் ஆறு மணிக்கே படுக்கப்போய் விட்டது. நான் இரவு பத்து மணிக்குத்தானே படுக்கிறேன்.
- *றொ. பற்றிக் விதுஷன், சாம்பன்கட்டைக்காடு, நானாட்டான்.*

# மன்னா விளம்பரப் பலகை

முத்தோர் சொல் எமக்கு முன் கசப்பாக இருக்கும். பின் இனிப்பாக இருக்கும்.
*ஞா. கிறிஸ்து றாஜா (கிறேசியன்), பொன்தீவுகண்டல், முருங்கன்*

இடையூறுகளைக் கண்டு கலங்காதே. இடையூறுகளில்தான் உனது வீரமும், தியாகமும், மனப்பக்குவமும் உயர்ந்த நோக்கங்களும் வளர்கின்றன.
*பி. றொசானி (றொக்சி), அடம்பன்.*

நேற்று என்பது அனுபவம்.
இன்று என்பது நிகழ்வு.
நாளை என்பது நம்பிக்கை.
*மா. நிறோசா, கன்னாட்டி, அடம்பன்.*

தனியாகத் தூக்கமுடியாத ஒரு சுமையை
இருவர் சேர்ந்து எளிதில் தூக்கலாம்.
*ஜே. தர்சினி, பொன்தீவுகண்டல்.*

"சிறந்த சொல் வன்மையால் திருடன் உள்ளத்தையும் திரும்பிவிட முடியும்"
*தே. ஜெர்மா, சாளம்பன்.*

"எங்கு தற்பெருமை ஆரம்பமாகிறதோ அங்கு நற்குணங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்"
*தே. ஜெபமலர் (ஜெர்மா), சாளம்பன்.*

உயர்ந்த இலக்கை அடைவது என்பது
ஒரேயடியாக நிகழ்வது இல்லை.
ஒவ்வொரு அடியையும் ஒவ்வொரு நொடியையும்
ஒவ்வொரு படியையும் உன்னிப்பாக
நோக்குவதில் அது அடங்கியிருக்கிறது.
*ஜே. திலிபா, புதுக்கமம், உயிலங்குளம்.*

# சிறுகதை

## யேசுவே நீர் உயிர்க்க வேண்டாம்

*ஜெயா பாலாஜி, முருங்கன்.*

அன்று தவக்காலத்தின் இறுதி வெள்ளிக்கிழமை சிலுவைப்பாதை முடிந்து எல்லோரும் சென்றுவிட்டார்கள். பகல் இரவுக்கு இடம் கொடுத்து விடைபெறும் நேரம்.

அருட்தந்தை ஜெயராஜ் தனிமையில் இருந்து செபிக்க எண்ணி ஆலயத்துக்குள் சென்றார். ஒரு சிறுவன் தனியாக பீடத்தடியில் கரங்களைக் குவித்து கண்களை மூடி, முழந்தாற்படியிட்டு அமர்ந்திருந்தான். அவன் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது. அவன் அருகில் சென்றார் அருட்தந்தை. அவன் எதையோ முணுமுணுத்துக் கொண்டிருந்தான். மிக அருகில் சென்று நின்றார். அவன் திரும்பத்திரும்ப ஒன்றையே சொல்லிக் கொண்டிருந்தான். "யேசுவே நீர் உயிர்க்க வேண்டாம்", "யேசுவே நீர் உயிர்க்க வேண்டாம்". அதிர்ந்து போனார் பங்குத்தந்தை! வெளியே வந்து சிறுவனுக்காகக் காத்துக்கொண்டிருந்தார்.

அருட்தந்தை ஜெயராஜ் அந்தப் பங்கிற்கு வந்து சில காலமே ஆகி இருந்தது. அந்தப் பங்கின் விபரங்களை இனிமேல்தான் அவர் அறிந்துகொள்ள வேண்டும். சிறுவன் வெளியே வந்தான். அழுதழுது அவன் முகம் வீங்கி கண்கள் சிவந்திருந்தன. மெல்ல சிறுவனை அணைத்துக்கொண்டு, "தம்பி, உன் பெயர் என்ன ?" என்று கேட்டார். 'ஆகாஷ்' என்றான் சிறுவன். "ஆகாஷ், எதற்காக அழுகிறாய்? என்ன செபித்தாய்?" என வினவினார். மீண்டும் அழத்தொடங்கியவன் சிறிது நேரத்தின்பின் பேசத் தொடங்கினான்.

பாதர்! அம்மா, அப்பா, தம்பி, நான் நான்கு பேர் வீட்டில். என் அம்மாமீது நான் மிகவும் அன்பாய் இருக்கிறேன். என் தம்பியை மிகமிக நேசிக்கிறேன். என் அப்பாவும் அன்பானவர். ஆனாலும் அதிகமாகக் குடிப்பார். வீட்டில் அம்மாவுக்கு சமைப்பதற்கு வேண்டிய எல்லா பொருட்களும் வாங்கிக் கொடுப்பார். சிலவேளைகளில் சமையலுக்கு தானும் உதவி செய்வார். சமையல் முடிகிற நேரம் வெளியே போய் நன்றாகக் குடித்துவிட்டு வருவார். வந்து அம்மாவுடன் ஒரே சண்டை! தானும் சாப்பிடமாட்டார். அம்மாவும் சாப்பிட முடியாது. சில சமயங்களில் எல்லாவற்றையும் போட்டு உடைத்து பெரிதாகச் சத்தம் போடுவார். வீதியால் போகிறவர்கள் எல்லாம் பார்த்து சிரித்துக்கொண்டு போவார்கள்".

மீண்டும் பலமாக விம்மி விம்மி அழுதான். அருட்தந்தை அவன் கண்ணீரைத் துடைத்து தேற்ற மீண்டும் பேசத் தொடங்கினான்.



"என்னால் இரவில் படிக்க முடியாது. ஒரே சத்தம். அவரைப் பார்க்கப் பயமாக இருக்கும். தம்பியால் உறங்க முடியாது. அவர் போடுகிற சத்தத்தில அவன் எழுந்து அழுவான். அம்மா படுகிற துன்பத்தை என்னால் தாங்க முடியாமல் இருக்கும்.

தவக்காலம் முழுவதும் அப்பா குடிக்க மாட்டார். விபூதிப்புதன் தொடக்கம் தவறாமல் கோயிலுக்கு வருவார். உயிர்ப்பு ஞாயிறுவரை எங்கள் வீட்டில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. எல்லோரும் நல்ல சந்தோஷமாக இருப்போம். தம்பியை அவரே பாட்டுப்பாடி தூங்கவைப்பார். எல்லோரும் ஒன்றாகக் கோவிலுக்குப் போவோம்; ஒன்றாகச் சாப்பிடுவோம். தவக்காலத்தில் அம்மா நிறைய ஒறுத்தல் பிடிப்பா. ஆனாலும் முகத்தில் களைப்பு தெரியாது," "உயிர்த்த ஞாயிறு மீண்டும் பழைய கதை! கோவிலுக்குப் போக முன்னரே சாராயத்தை வாங்கி வைத்துவிட்டுத்தான் அப்பா கோவிலுக்குப் போவார். பூசை முடிந்து வந்த உடனே குடிக்கத் தொடங்கி விடுவார். எல்லாக் காலமும் தவக்காலமாக இருந்தால் எவ்வளவு நல்லது பாதர்!" சொல்லுங்கள் பாதர்! எல்லாக் காலமும் தவக்காலமாக உயிர்த்த ஞாயிறு வராமல் இருக்கக்கூடாதா? ஆதங்கம், ஆற்றாமை, ஆவேசம், ஆக்ரோஷம் இவற்றின் மொத்த வடிவமாய் நின்றுகொண்டு அந்த இளந்தளிர் எழுப்பிய கேள்வி அருட்தந்தையை உலுப்பியெடுத்தது.

"யேசு உயிர்க்கவில்லை என்றால் எமது விசுவாசம் வீண்" இந்த சின்னஞ்சிறுவனிடம் சொன்னால் புரியுமா? தான் கற்றுக் கொண்ட இறையியல், மெய்யியல் எதுவும் அந்தச் சிறுவனுக்குப் பதில் சொல்ல உடனடியாக அவருக்கு உதவவில்லை. எல்லோர் பாவங்களையும் தன்மேல் சுமந்த யேசுவின் பிரதிநிதியாக எல்லாப் பெரியவர்களாலும் துன்பப்படுகின்ற குழந்தைகளிடம் மன்னிப்புக் கோரும் தோரணையில் அந்தச் சிறுவனின் கரங்களை பற்றியபடி நின்றுகொண்டிருந்தார் அருட்தந்தை ஜெயராஜ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விண்மீன்களை நோக்கி .... என்ற தொடர் கட்டுரைத் தொடர் நிறைவுபெற்றது!**

அருட்சகோதரர் பப்ரிஸ்ற் குரூஸ் அவர்களினால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு வங்காலையைச் சேர்ந்த அ. யோ. மரியநாயகம் சோசை அவர்களால் தமிழாக்கம் செய்யப்பட்ட இத்தொடர் கட்டுரை கடந்த 26 மாதங்கள் மன்னாவின் இப்பக்கத்தில் தொடர்ச்சியாக வெளிவந்து நிறைவுபெற்றுள்ளது. தமிழாக்கம் செய்த மரியநாயகம் சோசை அவர்களுக்கு மன்னாவின் நன்றிகள்! - மன்னா நிர்வாகம்.

# க.பொ.த.சாதாரண மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி – 2013 கத்தோலிக்க திருமறை

தொகுப்பு :- திருமதி. ஞானமலர் மரியதாசன், மன்/ அல் - அஸ்ஹர் ம.வி

## பகுதி 1 வினாக்கள்

### மிகச்சரியான விடையைத் தெரிவுசெய்க.

01. கி. பி 6ஆம் நூற்றாண்டில் எபிரேய வேதாகமத்திற்கு எழுத்துவடிவம் கொடுத்தவர்கள்?
1. எபிரேயர் 2. மசரடிக்கர் 3. கிரேக்கர் 4. பொதுநிலையினர்

02. இலங்கையின் முதலாவது பேராயரும் முதலாவது கருதினாலுமாக நியமிக்கப்பட்டவர்?
1. தோமஸ் கூறே 2. 23ம் அருளப்பர்
3. 10ஆம் பத்திநாதர் 4. 13ம் ஆசீர்வாதப்பர்

03. புற இனத்தவரின் அப்போஸ்தலர் யார்?
1. பவுல் 2. கொர்னேலியு 3. பேதுரு 4. பர்ணபா

04. நாம் எதனை மார்புக் கவசமாக அணிய வேண்டும்?
1. நம்பிக்கையையும் எதிர்நோக்கையும் 2. நம்பிக்கையையும், தியாகத்தையும் 3. நம்பிக்கையையும், மன்னிப்பையும் 4. நம்பிக்கையையும் அன்பையும்.

05. உறுதிப்பூசுதல் அளிக்கக்கூடிய திருப்பணியாளர் யார்?
1. கருதினால் 2. குருவானவர் 3. ஆயர் 4. பொதுநிலையினர்.

06. பழைய ஏற்பாட்டுத் திருத்தூயகத்தில் காணப்பட்டவைகள் எவை? 1.பொன், தூபப்பீடம், உடன்படிக்கைப்பேழை 2. தூபப்பீடம், உடன்படிக்கைப்பேழை 3. பொன், தூபப்பீடம் 4. பொன், வெள்ளைப் போளம்.

07. திருவருகைக் காலம் எத்தனை வாரங்களைக் கொண்டது?
1. நான்கு வாரங்களை 2. இரண்டு வாரங்களை
3. ஐந்து வாரங்களை 4. மூன்று வாரங்களை

08. "ஆண்டவரே இப்போது உம் அடியானை அமைதியாய்ப் போகவிடும்" என்று கூறியவர் யார்?
1. அனனியா 2. பேதுரு 3. கமாலியேல் 4. சிமியோன்

09. சவுலுக்குத் திருமுழுக்குக் கொடுத்தவர் யார்?
1. திருமுழுக்கு யோவான் 2. யோவான் 3. அனனியா 4. இயேசு

10. எமக்கு மீட்பைப் பெற்றுத்தருவது எது?
1. எமது திறமைகள் 2.எமது அறிவு 3. எமது பலம் 4. இறைஅருள்

11. இஸ்ராயேல் என்பதன் பொருள் யாது?
1. இறைவனோடு போராடுபவர் 2. இறைவனின் நண்பர்
3. இறைவனை மேன்மைப்படுத்துபவர் 4. இறை ஊழியன்

12. பழைய ஏற்பாட்டின் கடைசி இறைவாக்கினரும் புதிய ஏற்பாட்டின் முதல் இறைவாக்கினராகவும் குறிப்பிடப்படுவர் யார்?
1. பேதுரு 2. திருமுழுக்கு யோவான் 3. பவுல் 4. யாக்கோபு

13. அமைதியை ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் ........................
1. இரக்கம் பெறுவர் 2. கடவுளின் மக்கள் எனப்படுவர்
3. கடவுளைப்போலாவர் 4. விண்ணரசுக்கு உரியவர்கள்

14. பார்வோன் மன்னன் தனது கடின மனதை மாற்றக் காரணமாக அமைந்தது.
1. நைல் நீர் இரத்தமானது 2. கால்நடைகளின் மரணம்
3. வெட்டுக்கிளிகள் 4. தலைமகன் சாவு

15. "கைவிடப்பட்டோரின் தூதன்" என அழைக்கப்படுபவர்?
1. யோசப்வாஸ் அடிகளார் 2. அன்னை தெரேசா
3. பிரான்சிஸ் அசிசியார் 4. அக்னேஸ்

16. நாம் கிறிஸ்துவின் உடலில் தொடர்புகொள்வது?
1. உறுதிப்பூசுதலின் மூலம் 2. திருமுழுக்கு மூலம்
3. நற்கருணை மூலம் 4. ஒப்புரவுமூலம்

17. துறவற சபைகள் அனைத்துக்கும் பொதுவான பண்புகள் நான்கும் எவை?
1. ஏழ்மை, கீழ்ப்படிவு, பணியார்வம், தூய்மை 2. தூய்மை, ஏழ்மை, கீழ்ப்படிவு, அன்பு 3. அன்பு, ஏழ்மை, பணியார்வம், தூய்மை 4. தூய்மை, ஏழ்மை, அன்பு, தியாகம்

18. லூக்கா நற்செய்தியாளரின் அடையாளம் எது?
1. கழுகு 2. மனிதமுகம் 3. எருது 4. சிங்கம்

19. தற்போதைய பாப்பரசர் யார்?
1. 1ஆம் பிரான்சிஸ் 2. 16ஆம் ஆசீர்வாதப்பர்
3. 2ஆம் பிரான்சிஸ் 4. 17ஆம் ஆசீர்வாதப்பர்

20. கிறிஸ்துவுக்காகத் தம்மை அர்ப்பணித்த பொதுநிலைத் தம்பதியினர் யார்?
1. அன்னா, சப்ரா 2. ஆக்கில்லா, பிரிஸ்கிலா
3. சுவைக்கீன், அன்னம்மா 4. செக்கரியா, எலிசபேத்

21.அந்தியோக்கிய சபைக்கு அனுப்பப்பட்ட பொதுநிலை அப்போத்தலர் யார்?
1. பவுல் 2. பர்னபா 3. சீலா 4. அனனியா

22. யூதசெபக்கூடத்திற்கும் இஸ்லாமியப் பள்ளிவாசலுக்கும் சென்ற முதல் திருத்தந்தை யார்?
1. 16 ஆம் ஆசீர்வாதப்பர் 2. 2 ஆம் பத்திநாதர்
3. 2 ஆம் அருள் சின்னப்பர் 4. 1 ஆம் பிரான்சிஸ்

23. மத்திய காலத்தில் திருப்பலி எந்தமொழியில் நடைபெற்றது?
1. கிரேக்கம் 2. தமிழ் 3. எபிரேயம் 4. இலத்தீன்

24. மனிதன் படைப்பாளியாகச் செயற்படும்போது உலகம் ..............
1. அழிவடைகின்றது 2. புதுப்படைப்பாகின்றது
3. பெருமைகொள்கின்றது 3. கவலையடைகின்றது

25. ............... வாழ்வின் வழியாக அனைத்தையும் வெற்றிகொள்ள முடியும்.
1. திருமண 2. தியாக 3. ஆன்மீக 4. துறவற

26. விஞ்ஞானமும் கத்தோலிக்க ........................ முரணானவை அல்ல.
1.பாரம்பரியங்களும் 2. விசுவாசமும் 3. வழிபாடுகளும் 4. மறையும்

27. இறைவெளிப்பாடு யாரில் முழுமையடைந்துள்ளது?
1. மனிதனில் 2. படைப்பில் 3. கிறிஸ்துவில் 4. இயற்கையில்

28. எனக்காக அவரது ................ திறக்கப்பட்டதுபோல் எனது ................ அதனை உணர்ந்து துக்கப்பட வேண்டும்.
1. விலா, இருதயமும் 2. விலா, கைகளும்
3. விலா, வாழ்வும் 4. மனங்களும், விசுவாசிகளும்

29. "மனிதனாக அவதரித்தல்" என்றால் என்ன கருத்து?
1. மனிதனைப்போல் மாறுதல் 2. மனிதனுக்கு இணையாகுதல்
3. மனிதனாதல் 4. மனிதத்தன்மை ஏற்றல்

30. 'சமூக நீதி' என்ற வெளியீட்டின் ஆசிரியர் யார்?
1. தோமஸ் கூறே 2. அருட்பணி. பீற்றர் பிள்ளை
3. மக்சிமிலியன் கோள்பே 4. அருட்பணி. எமிலியானுஸ்பிள்ளை

31. கிறிஸ்துவின் மறையுடல் எது?
1. இறைவாக்கினர் 2. திருச்சபை 3. துறவிகள் 4. பாஸ்கா

32. புனித பவுலால் உயிர்ப்பிக்கப்பட்ட வாலிபன் யார்?
1.யூத்திகு (ஐத்திரு) 2.பர்னபா 3.பணக்காரவாலிபன் 4. மத்தியா

33. புதுமைகள் நடைபெறுவதற்கு அவசியமானது
1. விருப்பம் 2. ஆர்வம் 3. இடம் 4. விசுவாசம்

34. "இரக்கத்தின் சம்மனசு, சமூக நீதியின் காவலன்" என மக்களால் அழைக்கப்பட்டவர்
1. புனித மாட்டீன் தெபோரஸ் 2. புனித அலோசியஸ் கொன்சாகா
3. புனித அக்னேஸ் 4. புனித மரிய கொறற்றி

35. இறைசித்தத்திற்கு தன்னை அர்ப்பணித்த இயேசுவிடம் காணப்பட்ட மிக உயர்ந்த பண்பு?
1. அறிவு 2. ஞானம் 3. முன்மாதிரிகை 4. கீழ்ப்படிவு

36. கிறிஸ்து தனது மீட்பின் பயணத்தை ஆரம்பித்த இடம்?
1. ஜெருசலேம் 2. கலிலேயா 3. கானான் 4. பபிலோனியா

37. ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் காணப்படவேண்டிய முக்கிய பண்புகளில் ஒன்று?
1. ஒன்றாக உணவருந்துதல் 2. ஒன்றாகத் திட்டமிடுதல்
3. ஒன்றாகச் செபித்தல் 4. ஒன்றாக உரையாடுதல்

38. மாசா, மெரிபா என்பதன் பொருள் என்ன?
1. சோதித்தல், வாதாடுதல் 2. வாதாடுதல், தடுத்தல்
3. சோதித்தல், மறுத்தல் 4. சோதித்தல், அழித்தல்

39. மோசே என்பதன் பொருள் என்ன?
1. நீரிலிருந்து எடுக்கப்பட்டவன் 2. சிரிக்க வைப்பவன்
3. இறைவன் உயர்த்துகின்றார். 4. இறைவன் மீட்கிறார்.

40. நிறைகுறைகளோடு பிறரை ஏற்றுக்கொள்வது?
1. பெருந்தன்மை 2. உயர்வு 3. அன்பு 4. நன்மை

### விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01.2 | 02.1 | 03.1 | 04.4 | 05.3 | 06.1 | 07.1 |
| 08.4 | 09.3 | 10.4 | 11.1 | 12.2 | 13.2 | 14.4 |
| 15.2 | 16.2 | 17.1 | 18.3 | 19.1 | 20.2 | 21.2 |
| 22.3 | 23.4 | 24.1 | 25.3 | 26.2 | 27.3 | 28.1 |
| 29.3 | 30.2 | 31.2 | 32.1 | 33.4 | 34.1 | 35.4 |
| 36.2 | 37.3 | 38.1 | 39.1 | 40.3 | | |

# உங்களுக்குத் தெரியுமா? மறையறிவுப் போட்டி- 117

*தொகுப்பு : திரு ச. மாட்டீன் டயஸ்*

இம்மாதத்திற்கான வினாக்கள் 144ம் திருப்பாடலிலிருந்து 150ம் திருப்பாடல் வரையுள்ள பகுதிகளிலிருந்து தொகுக்கப்படுகின்றன. இவை தாவீதரசனால் பாடப்படும் நன்றிப்பாடல்/ புகழ்ச்சிப்பாடல்/ வேண்டுதல் பாடல்களாக உள்ளன.

(யூன்) ஆனி மாதத்திலிருந்து நாம் இறைவாக்கினர்களுக்குள்ளே செல்வோம். முதலாவது இறைவாக்கினராக எசாயா எம் முன்னே நிற்கின்றார்.

உங்களுக்குத் தெரியுமா? என்ற இந்த வினா விடைப் போட்டியை நாம் வேதாகமத்திற்குள் நகர்த்தியபோது முதன் முதலாக நாம் தெரிந்துகொண்ட பகுதி திருத்தூதர் பணிகள் நூல். இதற்கான காரணம் இருந்தது. நற்செய்தியாளர்களுக்குள் நாம் செல்லவில்லை. நற்செய்தியை நாம் அன்றாடம் பல வழிகளில் கேட்கின்றோம். அவை பற்றிய விளக்கங்களையும் பல வழிகளில் சிறப்பாக திருப்பலி வேளைகளில் மறையுரையின்போது நாம் - குறிப்பாக மாணவர்கள் - அடிக்கடி வாசிக்க வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்படுகின்றார்கள். பரீட்சைகளுக்காக - பயிற்சி நெறிகளின்போது இவ்வாய்ப்புக் கிட்டுகின்றது.

அதனால் நற்செய்திகளுக்கு அடுத்த புத்தகமான திருத்தூதர் பணியில் நமது போட்டி வினாக்களை ஆரம்பித்து அதனைத் தொடர்ந்து வருகின்ற திருமுகங்கள், திருவெளிப்பாடு, திருப்பாடல்களையும் நிறைவுசெய்துள்ளோம்.

அடிப்படையில் நாம் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். வேதாகமம் முழுவதும் அது பழைய உடன்படிக்கையாயினும் புதிய உடன்படிக்கையாயினும் நம் அன்பராம், மீட்பராம் யேசுக் கிறிஸ்துவையே மையமாகக் கொண்டுள்ளன.

"உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன்" என்ற தொடக்க நூலின் 3ம் அதிகாரம் 15ம் வாக்கியத்திலிருந்தே தெரிகிறது.

இனி வரப்போகின்ற பகுதிகள் அந்த, அவளின் வித்துப் பற்றி என்ன சொல்லியிருக்கின்றார்கள் எனத் தெரியச் செய்யும்.

**இனி எமது வினாக்களுக்குள் செல்வோம்**

01. கடவுளின் முன்னால் மனிதன் நிலையற்றவன்/ ஒன்றுமே இல்லை எனக்குறிப்பிடும் 144ம் திருப்பாடலில் உள்ள திரு வசனம் என்ன?
02. இஸ்ராயேலரின் புதல்வியர் எப்படி இருக்க வேண்டும் என்று தாவீதரசன் ஆண்டவரைக் கேட்கின்றார்.
03. நான் சிந்திப்பது எதை? மக்கள் பேசுவது எதை?
04. ஆண்டவர் யாருக்கு அண்மையில் இருக்கின்றார்?
05. ஆண்டவர் யாருக்கான நீதியை நிலைநாட்டுகின்றார்?
06. 147ம் திருப்பாடலில் உள்ள 20 வாக்கியங்களில் அதிகமானவை இறைவனின் எந்தப் பண்பைப் பற்றிச் சொல்கின்றன?
07. ஆண்டவர் எளியோருக்கு என்ன செய்கின்றார்? பொல்லாரை என்ன செய்கின்றார்?
08. 148ம் திருப்பாடல் ஆண்டவரைப் போற்றும்படி கூறுகின்றது. யார் ஆண்டவரைப் போற்ற வேண்டும்? ஏன்?
09. ஏன் இஸ்ராயேல் மக்கள் மத்தளம் கொட்டி யாழிசைத்து நடனமாடிக் களிகூர்வார்களாக எனச் சொல்லப்படுகின்றது.?
10. மாறிக்கிடக்கும் சொற்களைக் கொண்டு கருத்துள்ள வாக்கியங்களை ஆக்குங்கள்?
போற்றுங்கள்/ போற்றுங்கள்/ அவர்தம்/ அவர்தம்/ மாண்பினைக்குறித்து/ அவரை/ அவரை/ எல்லையிலா/ குறித்து/ வல்ல/ செயல்களுக்காய்

**மாணவர் மறையறிவுப் பகுதி இல. 115 இற்கான கேள்விகளுக்கு 15 பேர் விடையளித்திருந்தனர்.**

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி**

ம. தர்மிகா, இல.109, பெரிய பண்டிவிரிச்சான், மடுக்கோவில்.

**பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்**

1. கே. கத்தறீன், நொச்சிக்குளம், உயிலங்குளம்.
2. ஜீ. ஜீவறெமா, பரிகாரிகண்டல், முருங்கன்.
3. வி. ஆன் செளமியா, 5ம் வட்டாரம், விடத்தல்தீவு.
4. ஜே.ஐ. கிஷோலா றொட்ரிகோ, 1ம் வட்டாரம், வங்காலை.
5. அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்.
6. கே. குவேனி, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
7. அ. கில்டா, கட்டையடம்பன், மடுறோட்.
8. கிறிஸ்ரின் ஏஞ்சல் டலிமா, 1ம் வட்டாரம், பேசாலை.
9. எஸ். ஷார்மி பெரேரா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
10. வி. ஜீன் சுயாட், மடுமாதா சிறிய குருமடம், மன்னார்.

## நம்பிக்கையின் ஆண்டில் ........

6ஆம் பக்கத் தொடர்ச்சி

படைப்பிரிவினரையும் தலைமைக்குருக்கள் அனுப்பிய காவலரையும் பார்த்து யேசு யாரைத் 'தேடுகிறீர்கள்' என்று கேட்டார் (யோ 18:3-4).

மேலே கூறப்பட்ட இறைவார்த்தையில் காணப்படும் 'தேடல்கள்' எல்லாம் ஒவ்வொருவருடைய தேவையைப் பொறுத்து இடம்பெற்ற தேடல்கள். துன்பத்தில், நோயில், தேவையில், சுயவிருப்பத்தில், கோபத்தில், பழிவாங்கும் மனப்பான்மையில், இடம்பெற்ற வித்தியாசமான 'தேடல்கள்'.

பலர் இறைவனில் நம்பிக்கைவைத்துத் தேடினார்கள். தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன. இன்னும் நம்பிக்கையோடு யேசுவைத் தேடிச் சென்றவர்கள் குணம் பெற்றதையும் நற்செய்தியில் காண்கின்றோம். உ+ம். லூக் 17:19.

குணம்பெற்ற பத்துத் தொழுநோயாளிகளில் நன்றிசொல்ல வந்த ஒருவனைப் பார்த்து யேசு கூறியது. உமது 'நம்பிக்கை' உமக்கு நலமளித்தது (லூக் 18:42). பார்வையற்ற ஒருவனை யேசு குணப்படுத்திக் கூறியது. உமது 'நம்பிக்கை' உம்மை நலமாக்கிற்று (மத் 15:25). கானானேயப் பெண்ணின் பேய் பிடித்த மகளை யேசு குணப்படுத்திக் கூறியது. 'அம்மா உமது நம்பிக்கை பெரிது. நீர் விரும்பியவாறே உமக்கு நிகழட்டும்". இறைவனைத் 'தேடி' அவரில் 'நம்பிக்கை' வைத்து வாழ்ந்தவர்களுடைய வாழ்க்கையைப்பற்றிச் சிந்தித்த நாம், எம்மையும், எமது வாழ்வையும் சீர்தூக்கிப் பார்ப்போம்.

உலகுசார்ந்த காரியங்களில் எமது காலத்தை, நேரத்தை வீணாக விரயமாக்குகின்றோமா? இறைவனில் நம்பிக்கை வைத்து, அவரைத் 'தேடி' இறைவார்த்தையை வாசித்து, இறைவனின் குரலுக்குச் செவிமடுத்து அமைதியான, மகிழ்ச்சி நிறைந்த வாழ்வை வாழ்கின்றோமா?

திருப்பலி, வழிபாடுகளுக்கு முதலிடம் கொடுத்துப் பங்குபற்றுகின்றோமா? அல்லது பொழுதுபோக்குகள், சினிமாப்படங்கள், களியாட்டங்கள் போன்றவைதான் எமது வாழ்வில் இடம்பிடித்திருக்கின்றனவா? இவ்வுலக வாழ்வு நிலையான வாழ்வு அல்ல. நிலையான வாழ்வுக்கு வழி இறைவனைத் 'தேடல்' செய்வதுதான். உலகமெல்லாம் ஆதாயமாக்கிக்கொண்டாலும் தன் ஆன்மாவை இழந்தால் அதனால் வரும் பயன் என்ன? (லூக் 12:33-34). விண்ணுலகில் குறையாத செல்வத்தைத் 'தேடிக்கொள்ளுங்கள்' "அங்கே திருடன் நெருங்குவதுமில்லை, பூச்சியும் அரிப்பதுமில்லை. (மத் 6:33). ஆகவே அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் 'தேடுங்கள்'. அப்போது இவையனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.130

## ஓசேயா அதிகாரம் 1 முதல் 14 முடிய

உங்கள் விடைகளை யூன் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 16 | | ★ | ★ | 12 | | | | 15 | ★ |
| | 07 | | | ★ | | | 04 | ★ | |
| | | 19 | | | ★ | 14 | | | 20 |
| | | 05 | | 28 | | ★ | 26 | ★ | |
| ★ | 25 | | | 01 | | | ★ | ★ | |
| | ★ | | | | ★ | 17 | 22 | ★ | 09 |
| | | ★ | 11 | | | | | | ★ |
| | | 13 | ★ | | | 03 | | | |
| 21 | | | | ★ | 27 | | 24 | | 18 |
| ★ | 02 | | 08 | | ★ | 06 | | 10 | ★ |

(___ என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. ...................... என்னும் கட்டுகளால் ___ வந்தேன்.
3. பலகணி வழியாய் வெளிப்பட்ட .................. போலும் ஆவார்கள்.
7. ...................... நோக்கியே திரும்புகின்றார்கள்.
8. இதுவே இஸ்ரயேலின் மாபெரும் ..........................
11. ஏனெனில் இஸ்ரயேல் குடும்பத்தாருக்கு நான் இனிக் ...................... காட்ட மாட்டேன்.
12. .................... நிறைந்தவன் எவனோ ___ கொள்ளட்டும்.
14. ஆனால் அவர்கள் எனக்கு எதிராகப் ............... சொல்கின்றார்கள்.
16. ஆயினும் வேடன் ஒருவனின் .................. அவனை ___ சூழ்ந்துள்ளது.
21. அவை அவர்களுக்கு .................... வீட்டு உணவு போலிருக்கும்.
24. சமாரியா தன் கடவுளை எதிர்த்துக் .................. மூட்டிற்று.
25. உங்கள் ...................... உழுது பண்படுத்துங்கள்.
27. அவனும் .................... என் கடவுள் என்பான்.
28. அவனுக்கு ...................... விழுந்துவிட்டது.

### வலமிருந்து இடம்

3. யூதாவின் வீட்டாருக்குப் ................ நோய்போல் இருக்கின்றேன்.
4. .................. மீது விரிக்கப்பட்ட வலையுமாயிருக்கின்றீர்கள்.
5. ஆண்டவரைப் பற்றிய ...................... அவர்களுக்கில்லை.
8. ஏனெனில் ...................... ஆண்டவரைவிட்டு ___ என்றார்.
10. .................... வில் கொம்பு ஊதுங்கள்.
13. அவன் .................... போல் மலருவான்.
15. கட்டுக்கடங்காத ............. பசுவைப்போல் ___ பிடிவாதமாயிருக்கின்றார்கள்.
19. நானோ அவனுடைய நகர்கள்மேல் ................ அனுப்புவேன்.
20. நான் .................... வழங்கிய ___ சிலை செய்தார்கள்.

### மேலிருந்து கீழ்

1. தேவதாசிகளோடு சேர்ந்து ...................... செலுத்துகின்றார்கள்.
4. அவர்களின் ................ வேசியாய் வாழ்ந்தாள்.
5. அவர்கள் விரும்பி ___ செய்த .................... பொருள்கள் ___ சொத்தாகும்.
16. அவளால் ...................... கண்டுபிடித்துப் போக இயலாது.
17. உங்கள் ...................... காலை நேர ___ போகிறதே.
19. .................... அவளுடன் பேசுவேன்.
20. அவர்களுடைய ___ எதிராக ...................... பாய்ந்தெழுந்து விழுங்கிவிடும்.
22. ...................... போலப் பாயுமாறு வழியோரத்தில் மறைந்திருப்பேன்.

### கீழிருந்து மேல்

2. அவர்கள் திரும்பி வந்து என் ...................... குடியிருப்பார்கள்.
6. அதுவே அசீரியாவிலுள்ள ...................... மன்னனுக்கு ___ போகப்படும்.
7. ...................... நிலத்தில் ___ கண்டுபிடித்தேன்.
8. இறுதிநாள்களில் ___ நன்மைகளையும் ...................... நடுக்கத்தோடு வருவார்கள்.
9. ஆனால் .................... இறைவனோடு இன்னும் நடக்கிறான்.
10. ...................... கொடியோர் நிறைந்த நகர்.
18. இனிமேல் அவர்கள் ...................... கொடுக்க மாட்டார்கள்.
20. ...................... தூதரோடு போராடி வெற்றிகொண்டான்.
21. அவர்களின் ...................... சதித்திட்டத்தால் ___ எரிகின்றது.
26. என் ................ மொழிகளால் அவர்களைக் கொன்றுவிட்டேன்.
28. ஆனால் எப்ராயிமுக்கு ...................... பயிற்றுவித்தது நானே.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 128ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்

பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

முதலாம் பரிசு:
இசைக்கியேல்,
ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.

இரண்டாம் பரிசு:
இ. ஸ்ரீபனா,
களிமோட்டை, முருங்கன்.

மூன்றாம் பரிசு:
யோ.கொறிற்றா சகாயராணி குருஸ்,
தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 60 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 54 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 128ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. அருட்சகோதரி மேரி பற்றீசியா, ஆலயவீதி, தோட்டவெளி.
2. ம. சோபியா மெனடஸ், ஆலங்குளம், வட்டக்கண்டல்.
3. யோ. ஆன் றுபினா, பெரியகுஞ்சுக்குளம், மடுறோட்.
4. கே. துளசிகா, AGA. Office, பாண்டியன்குளம், நட்டாங்கண்டல்.
5. ப. மரியதாஸ், சென் மேரிஸ் வீதி, அடம்பன்.
6. செ. பிரசாந்ராஜ் பெர்ணான்டோ, பியர், தலைமன்னார்.
7. பி. நித்தியானந்தன் குருஸ், 8ம் வட்டாரம், வங்காலை.
8. சொ. ஸ்ரெலா, இல.50, வீரபுரம்.
9. கே. குவேனி, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
10. செ. ஜெசில்டா, 16வீட்டுச்சந்தி, பெரியப.விரிச்சான் மேற்கு, மடு.
11. சி. அமல உற்பவி, புனித சவேரியார் ஆலயம், தேவன்பிட்டி.
12. லீ. டெய்சி, பெற்றா, மன்னார்.
13. ஆர். கிங்ஸ்ரினோ, கபித்தாமோட்டை, அடம்பன்.
14. கே.நளாயின் தேவி, AGA Office, பாண்டிய.குளம், நட்டாங்கண்டல்.
15. கே.ஆர்.கலிஸ்ரஸ், திரு.இ.ஆண்.ஆலயம்,சிதம்பரபுரம், வவுனியா.
16. இன்பராஜன் கூஞ்ஞ, தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
17. யூ. சுஜந்தா மேரி, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
18. க. மடோனா, இல.54, கற்குளம்-02, சிதம்பரபுரம், வவுனியா.
19. ப. வினோதினி, 5ம் வட்டாரம், எழுவைதீவு.
20. நி. பிரியா, இல.58, வீரபுரம்.
21. கே. கத்தறின், நொச்சிக்குளம், உயிலங்குளம்.
22. அ. யூட் றெஜிவினி, சிறுக்கண்டல், முருங்கன்.
23. எவ். ஷார்மி பெரேரா (ஷாரு), நொச்சிக்குளம், உயிலங்குளம்.
24. நி. மரியம்மா பீரிஸ், 8ம் வட்டாரம், வங்காலை.
25. எவ். கில்மன், மணற்குளம், உயிலங்குளம்.
26. ம. மரிய திலீப், புனித சவேரியார் ஆலயம், தேவன்பிட்டி.
27. யே. கிறிஸ்தம்மா, இத்திக்கண்டல், அடம்பன்.
28. யோ. மெரியோன் டயஸ், தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
29. அரோன் ஆதர்ஸ், தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
30. பி. யூஜிற்றா, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
31. யே. யூக்கலிஸ்ரா, இத்திக்கண்டல், அடம்பன்.
32. எஸ். ஷெனொக்ஷிக்கன் பெரேரா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
33. க. யோகராஜா, தலைமன்னார் பியர், தலைமன்னார்.
34. ஜே.ஐ. கிஷோலா ரொட்ரிகோ, 1வட்டாரம், வங்காலை.
35. தே. மேரி கிறிஸ்ரீன், இருதயபுரம், எமில்நகர், மன்னார்.
36. ஜெ. நிரஞ்சினி, 5ம் வட்டாரம், எழுவைதீவு.
37. எஸ். கஜனா, ஆலங்குளம், வட்டக்கண்டல்.
38. பி. அன்சி பெர்ணான்டோ, தலைமன்னார்பியர், தலைமன்னார்.
39. எஸ். கிறிஸாந், சிறுத்தோப்பு, பேசாலை.
40. நி. யாலிசன், இல.58, வீரபுரம்.
41. வெ. ஜோசப் அருள்சீலன் டயஸ், தலைம.கிராமம், தலைமன்னார்.
42. ஐ. இருதயமேரி, இல.54, கற்குளம் - 02, சிதம்பரபுரம், வவுனியா.
43. கே. துளசிகன், AGA Office, பாண்டியன் குளம், நட்டாங்கண்டல்.
44. ஈ. நிஷாந்தினி கூஞ்ஞ, 8ம் வட்டாரம், கு.யேசு வீதி, பேசாலை.
45. யோ. ஷாலினி டயஸ், தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
46. அ. லவராணி, 4ம் வட்டாரம், மண்டைதீவு.
47. பு. அன்ரனி டிலைக்ஷன், தலைமன்னார் பியர்.
48. எஸ்.டிலிசியா குலாஸ், பவுல் வீதி, தாழ்வுபாடு, மன்னார்.
49. ம. மரிய தீபன், புனித சவேரியார் ஆலயம், தேவன்பிட்டி.
50. யோ. சாலட் சிந்துஜா, தலைமன்னார் பியர், தலைமன்னார்.

## இல.128 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ம[01] | ணி | ❋ | அ[02] | து | ❋ | பு[03] | ப் | ய | வி[04] |
| ன | ❋ | தெ[05] | ரு | ண் | ❋ | தி | நீ[07] | ❋ | ரை |
| ம் | சு[08] | க[06] | ள் | பெ[09] | ரி | ய | ❋ | ❋ | வி[10] |
| க[11] | ட | ல் | வை | ❋ | தி[12] | ற | வு | கோ | ல் |
| மு[18] | ர் | யா[17] | சா[16] | ஒ[15] | லி | த் | த | ❋ | பு[14] |
| ❋ | க[19] | ட | வு | ள் | ❋ | ணி | க[20] | கு[21] | ❋ |
| கே[24] | டு | து | ல | ல் | ந[23] | டு | வே | ர | இ[22] |
| டி | ம் | ❋ | நி[25] | ப[31] | யி | ர் | ❋ | லை | வ |
| ட் | ❋ | நி[27] | ல | க | ங் | ம[26] | ❋ | ❋ | ர் |
| எ[28] | ல் | லா | ம் | ❋ | பே[29] | ழை | ❋ | ளி | ஒ[30] |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.129ற்கான முடிவுகளை 2013ம் ஆண்டு யூன் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

## இயேசுவை அடக்கம் .......

1ஆம் பக்கத் தொடர்ச்சி

1988ஆம் ஆண்டு இந்தத் துணியின் சிறு பகுதியை ஆய்வு செய்த அமெரிக்க விஞ்ஞானிகள் இது 13ம் நூற்றாண்டளவில் போலியாக தயாரிக்கப்பட்ட ஓவியமாக இருக்கலாம் எனக் கருத்துத் தெரிவித்தனர்.

இந்நிலையில் இத்தாலியின் பதுவா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இந்தத் துணியின் மற்றொரு பகுதியை ஆய்வுக்கு உட்படுத்தினர். கார்பன் டேட்டிங் உட்பட பல நவீன தொழில்நுட்பங்களைக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் முடிவில் இந்தத் துணி கி.மு 280க்கும் கி.பி 220க்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. முந்திய ஆய்வில் பயன்படுத்தப்பட்ட துணியின் பகுதி, கிழிசலைச் சரி செய்வதற்காக வேண்டுமென பொருத்தப்பட்டிருக்கலாம் என இந்த ஆய்வில் ஈடுபட்ட பேராசிரியர் ஜீலியோ கூறினார்.

இது எப்படி நிகழ்ந்தது என்பதை தங்களால் விளக்க முடியவில்லை என்றும் ஆய்வில் ஈடுபட்ட விஞ்ஞானிகள் தெரிவித்தனர். இதுபற்றி கருத்து தெரிவித்த கிறிஸ்தவ அறிஞர்கள், "தூரின் நகரிலுள்ள இயேசுவின் உடல் அடக்கத்திற்கு பயன்படுத்தப்பட்ட துணி என்பது உறுதியாகிவிட்டது. இயேசுவின் உயிர்ப்பின்போது, உருவான பேரொளியே இந்தத் துணியில் அவரது உருவத்தை பதியச் செய்திருக்க வேண்டும் என்று கூறினர்.

## தீருவுள இராகங்கள் .....

5ஆம் பக்கத் தொடர்ச்சி

இவ்வைபவமானது ஓய்வுபெற்ற அதிபர் கலாபூசணம் ச. அந்தோனி மிராண்டா அவர்களது தலைமையில் நடைபெற்றது. தலைமையுரையை நிகழ்த்திய கலாபூசணம் ச. அந்தோனி மிராண்டா அவர்கள் வெளியீட்டாளரின் 35 ஆண்டு கால இசையனுபவத்தில் அவர் செய்த சாதனைகள் குறித்துச் சிலாகித்தார்.

மன்னா பத்திரிகையின் பதிப்பாசிரியரும் தமிழ் ஆர்வலருமான அருட்பணி. தமிழ்நேசன் அடிகளார் தாம் ஆற்றிய சிறப்புரையில், இசைத்துறையில் பல்லாண்டு அனுபவம் பெற்ற வெளியீட்டாளர் காலங் கடந்தாயினும் இம்முயற்சியில் இறங்கியமை பாராடுக்குரியதாகும் எனத் தெரிவித்ததுடன், திரு இசை குறித்தும் பல அரிய கருத்துக்களை வெளியிட்டார்.

இறுவட்டுக் குறித்த ஆழமான, அழகான ஆய்வுரையை நிகழ்த்தி வெளியீட்டாளரின் முயற்சியை வெகுவாகப் பாராட்டிப் பேசிய யாழ் அமலமரித் தியாகிகளின் சிறிய குருமட அதிபர் அருட்பணி. செ. அன்புராசா, அமதி அவர்கள், "இவ்வாறான இசை வெளியீடுகளில் கணினி மூலமாகப் பெறப்படும் இசைக்குப் பதிலாக நிஜமான இசைக் கருவிகளை இசைப்பதால் பெறப்படும் இசையைப் (live instruments) புகுத்த வெளியீட்டாளர்கள் முன்வர வேண்டும்" என்று அறைகூவல் விடுத்தார்.

பிரதம விருந்தினர் தமதுரையில் மன்னார் மறைமாவட்டத்தில் மேலைத்தேய மற்றும் கர்நாடக இசையறிவுடன் ஆலய இசைக்குப் பெரும் பங்காற்றிய இசை வல்லுநர்களான காலஞ்சென்ற எப். ஏ. குருஸ், காலஞ்சென்ற இம்மானுவேல் குருஸ் (அப்பையா மாஸ்டர்) போன்றோர் வரிசையில் வைத்து எண்ணப்படக்கூடிய ஒரு சிலரே இப்போது உள்ளனர். அவர்களுள் திரு. எட்வேட் பீரிஸ் அவர்களும் ஒருவர். அவர் முயற்சி தொடரவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகரும் வெளியீட்டாளரின் சகோதரருமான திரு. யோ. மார்சலஸ் பீரிஸ் அவர்கள் வழங்கிய நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுபெற்றது.

## போலந்தில் ......

1ஆம் பக்கத் தொடர்

இந்த சிலை அமைக்க தொழிலதிபர் லெஸ்ஜெக் லைசன் என்பவர் முழு நிதியுதவியும் அளித்துள்ளார். கடந்த 2010ம் ஆண்டு குளேஷியாவுக்கு இவர் குடும்பத்துடன் சுற்றுலா சென்றார். அப்பொழுது நீரில் மூழ்கி இவருடைய மகன் இறக்கும் நிலை ஏற்பட்டது.

அந்த விபத்தில் இருந்து இவருடைய மகன் அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்தான். அதற்கு போப் இரண்டாம் ஜோன் போலின் ஆசீர்வாதமும் பிராத்தனையும்தான் காரணம் என்று லைசன் நம்புகிறார். அதற்கு நன்றி செலுத்தும் விதமாக உலகிலேயே மிக உயரமான ஜோன் போலின் சிலையை அமைக்க இவர் நிதியுதவி வழங்கியுள்ளார். போலந்தின் மலைப் பிரதேசமான சென்டோசோவா என்ற இடத்தில் இந்தச் சிலையை ஆர்ச் பிஷப் வாக்ளோ டெபோ 16.04.2013 அன்று திறந்து வைத்தார்.

இதற்கு முன்பு சிலியில் 40 அடி உயர ஜோன் போல் சிலையே இதுவரை உலகில் மிகப்பெரிதாக கருதப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

## திருச்சபையின் பிறந்த ...


7ஆம் பக்கத்தொடர்ச்சி

தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என வெளியேறினார்கள். இயேசுவே மெசியாவென்று வீதிக்கு வீதி போதித்தார்கள். தூய ஆவியினால் துணிவுபெற்ற தூய பேதுரு போதித்த முதல் மறைபோதகத்தைக் கேட்ட பலரும் இவர்களைப் பின்தொடர்ந்தனர். இயேசுவில் விசுவாசம் கொண்டு திருமுழுக்குப்பெற முன்வந்தனர். பிறந்தது அன்று திருச்சபை!

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தூய ஆவியின் வருகையோடு பிறந்த திருச்சபையானது, அன்றுதொட்டு இன்றுவரை பல இன்ப துன்பங்களுக்கு, உயர்வு தாழ்வுகளுக்கு, ஏற்ற இறக்கங்களுக்கு முகம் கொடுத்துள்ளது. வளர்ச்சிப் பாதையில் பல கோணங்களையும் சந்தித்து உயிருள்ள ஒரு திருக்கூட்டமாக இன்னமும் வளர்ந்துகொண்டே இருக்கின்றது. இறைமகன் இயேசுவின் பிரசன்னமும், தூய ஆவியின் வழிநடத்துதலும், இறைதந்தையின் சித்தமும் இதுவாக இருக்கின்றது. இத்திருச்சபை காலத்துக்குக் காலம், தேவைக்கேற்ப தன்னைத்தானே சுத்திகரித்துக்கொண்டு இயேசுவின் பணியை பின்தொடர்ந்து செய்கின்றது. அதன் வளர்ச்சிக்கும் இயேசுவின் திருப்பெயரின் புகழ்சிக்கும் இறைவன் இத்திருச்சபையின் பிறந்த நாளன்று திருச்சபையை சார்ந்த அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுப் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.




**கட்டண விபரம்**

கறுப்பு வெள்ளை 4,500/= கலர் 7,500/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 02ம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. இன்பக்குமார் மோகன்ராஜ் சிறில்

(பெற்றா, மன்னார்.)

நாவாறு மாதங்கள் கடந்தாலும்
உன் பிரிவை எம் மனம் ஏற்காதையா?
மனமின்றி அள்ளிக் கொடுத்து
மனதிற்குள் அழுகின்றோம் - நாம்
சிறகிழந்த பறவைகள்போல்
தவிக்கின்றோம் - நாம்
தினம் கண்ணுறங்கும்போது
கனவிலாவது நீ வருவாயா என்று
ஏங்கும் எம்மை ஏமாற்றுவாயா?

*பிரிவால் துயருறும் :-*
அத்தைமார், மாமாமார், மச்சாளர்மார்,
மச்சான், மனைவி, அப்பா, அம்மா,
சகோதரர்கள், நண்பர்கள்.

மலர்வு :- 25 - 11 - 1987
உதிர்வு :- 01 - 05 - 2011

## 08ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 26 - 07 - 1922



உதிர்வு 18 - 10 - 2005

திரு. ம. கபிரியேல் மொத்தம்
(பெரிய நாவற்குளம்)

அன்புப் பெற்றோரே உங்கள் நினைவுகள்
அழியா நினைவுகள் எம் மனதில்.
ஆண்டுக்கு ஒருமுறையல்ல - எம்
ஆருயிர் இவ்வுலகில் உள்ளவரை
உங்கள் நல்லெண்ணங்களை மனதிலிருந்து
உள்ளத்தில் உறைந்துள்ள
இறைவனில் மாத்திரம் தங்கி
சுயகௌரவத்தோடு வாழ்வதே
உங்களுக்கு நாம் செய்யும் கைமாறு!

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 03 - 06 - 1930



உதிர்வு 06 - 05 - 2012

திருமதி. க. அன்னபூவதி எதிர்மனசிங்கை
(பெரிய நாவற்குளம்)

இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 6/5/2013 காலை 5.45 மணிக்கு தூய செபஸ்தியார் பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

*பிரிவால் துயருறும் :-*
*பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர்.*
*தகவல் :- அருட்தந்தை. ம. க. அருள்பிரகாசம் (மகன்)*

### அதிர்வுகள் ........ 10ஆம் பக்கத் தொடர்ச்சி

காதல் பஞ்சு மாதிரி! இலேசாகப் பறக்கவும் கூடியது, இலகுவாகப் பற்றிக்கொள்ளவும் கூடியது. பற்றிக்கொள்ளுகின்ற பக்கத்தை தமக்கு அனுகூலமாகப் பார்க்கிறார்களே தவிர மற்றைய பக்கமாகிய இலகுவாகப் பறந்துபோகக்கூடிய பக்கத்தை காதலிப்பவர்கள் நோக்குவது மிகக் குறைவாகவே இருக்கிறது. அதனால்தான், "அவள் பறந்து போனாளே என்னை மறந்து போனாளே..." எனக் கவிதைபாட வேண்டி வருகிறது.

காதல் என்பது கைத்தொலைபேசி மாதிரி! தொடக்கத்தில் தலைமாட்டிலும் வைத்துக்கொஞ்சலாம், அதேவேளை நாள்போகப் போக அதுவே தலையிடியாகவும் மாறலாம். தலையிடி இயற்கையாக வருவதுண்டு. சிலர், தாங்களே தலையிடிகளை உருவாக்கிக்கொள்வதுமுண்டு. தாங்களே உருவாக்கிக்கொள்கின்ற தலையிடிகள் 'வாழ்நாள் உபத்திரவங்கள்'ஆகவும் மாறுவதுண்டு.

காதல் என்பது சவர்க்காரம் மாதிரி! காலம் போகப் போக கரைந்து கரைந்து ஒரு கட்டத்தில் இல்லாமலே போய்விடுகிறது! இன்றைய உலகில், குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானவர்களின் காதல் வாழ்வும் இவ்வாறுதான் மாறிவிடுகிறது. 'புதுத் தும்புத்தடி நன்றாகக் கூட்டும்' (New broom Sweeps well) என்றொரு ஆங்கிலப் பழமொழி உண்டு. அதுபோலத்தான், தொடக்கத்தில் நன்றாகத்தான் காதல் செய்கிறார்கள். போகப்போக கழுதை தேய்ந்து கட்டெறும்பாகியதுபோல இவர்களுடைய காதல் வாழ்வும் மாறிவிடுகிறது.

காதல் பற்றிய மேற்சொன்ன வியாக்கியானங்களை வாசித்துவிட்டு, காதல் வாழ்வில் வெற்றி கண்டவர்கள் கண்டனக்குரல் எழுப்பலாம், ஆர்ப்பாட்டப் பேரணி நடத்த ஆயத்தமாகலாம். அவர்களுக்கு மட்டும் ஒரு செய்தி; காதல் வாழ்வில் வெற்றிபெற்ற வீரர் வீராங்கனைகளுக்கு பாராட்டுக்கள்! வாழ்க அவர்கள் காதல்! காதல் வாழ்வில் வெற்றிபெற்ற வீரர் வீராங்கனைகளுக்கு 'காதல் விருதுகள்' வழங்க விழாவொன்று ஏற்பாடு செய்தால் இக்கட்டுரை ஆசிரியரே முதல் ஆளாக நிற்பார்.

**காதல், வாழ்வை அழகாகவும் ஆக்கும், தலைகீழாகவும் மாற்றும்!**

"...சொர்க்கம் - நரகம், இரண்டில் ஒன்று, இங்கேயே நிச்சயம், காதலித்துப்பார்" என ஓரிடத்தில் கூறுகின்ற கவிப்பேரரசு வைரமுத்து, "காதலித்துப்பார் உன் கையெழுத்தும் அழகாகும்" என்கிறார் இன்னுமொரு இடத்தில்! இது, காதலித்துக் கையெழுத்தை அழகாக்கியவர்களைப் பற்றிய ஓர் எண்ணமே தவிர, காதலித்து தலையெழுத்தை தலைகீழாய் மாற்றிக்கொண்டவர்களின் வரலாறுகளைப்பற்றிப் பேசவில்லை என்பதையும் சிந்தையில் நிறுத்தவேண்டி இருக்கிறது. ஆகவேதான், தற்கால காதல் பாடல் வரிகளில்," 'லவ்' (love) பண்லாமா? வேணாமா?, வேணாமா? பண்லாம?..." இதற்கு,"...என்ன சொல்லப்போற, எப்ப சொல்லப்போற?..." (எல்லாத்துக்கு ஒரு வயசும் இருக்குதில்ல! காதல் அதிர்வுகள் தொ....ட.....ரு.......ம்.........).

### தமிழ் முஸ்லிம் .... 11ஆம் பக்கத் தொடர்

தமிழ், முஸ்லீம் மக்களிடையே முன்பு நிலவிய நல்லுறவு, நல்லிணக்கம் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட விரிசல், அவற்றுக்கான காரணங்கள், இவற்றைச் சீர்செய்யும் பணிகள் எதிர்காலத்தில் செயற்பட வேண்டிய முறைமைகள்பற்றி எல்லாம் விளக்கமாகவும், விபரணமாகவும், கலந்துரையாடப்பட்டன. ஈற்றில் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு சமாதானக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

எம் மக்களிடையே எதிர்காலத்தில் எழக்கூடிய பிரச்சினைகள், கருத்து முரண்பாடுகள் எல்லாம் சம்பந்தப்பட்ட இருதரப்பு, அங்குள்ள பெரியவர்கள், அதற்கு மேல் கிராம சேவை மட்டத்திலும், அதற்கு மேல் அமைக்கப்பட்ட சமாதான குழுவுக்கு அப்பால் செல்லாத முறையில் தீர்க்கப்படவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

பங்குபற்றிய அனைத்து மக்களும் இக்கருத்தரங்கு நிகழ்வுகளை வரவேற்றதுடன் தொடர்ந்தும் இப்படியான கருத்தரங்குகளை நடாத்தவேண்டும் எனவும் கோரிக்கைவிடுத்தனர்.

தகவல் :- பிரஜைகள் குழு, மன்னார்.

### மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவை காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்களும் இது விடயத்தில் அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

### சந்தாவைப் புதுப்பியுங்கள்!

- மன்னாவை நேரடியாகப் பெறுவோர் பத்திரிகைப் பணத்தை காலம் தாழ்த்தாமல் கொடுத்து ஒத்துழையுங்கள்.

- தபால் மூலம் பெறும் உள்நாட்டு வெளிநாட்டு சந்தாதாரர் மறக்காமல் உங்கள் சந்தாவை புதுப்பித்துக்கொள்ளுங்கள். சந்தாவைப் புதுப்பிக்காதவர்களுக்கான பத்திரிகையை எதுவித அறிவித்தலுமின்றி நிறுத்திவிடுவோம் என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறோம். - மன்னா நிர்வாகம்.

### மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 02002002978 2

### அடம்பன் பங்கில் ....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

அடம்பன் கன்னாட்டி கிராமத்தில் உள்ள புனித பிலிப்பு நேரியார் ஆலயத்துக்கு முன்பாக இந்தத் திருச்சுரூபம் கண்ணாடிப் பெட்டியினுள் பல வருடங்களாக வைக்கப்பட்டிருந்தது. போர் இடப்பெயர்வுகளுக்கு மத்தியிலும் எந்தவித சேதமும் இன்றி குறித்த சுரூபம் காணப்பட்டது.

அன்று இரவு 11.00 மணியளவில் அவ்விடத்துக்கு வந்த இனம் தெரியாத நபர்கள் கண்ணாடிப் பெட்டியினுள் வைக்கப்பட்டிருந்த இச்சுரூபத்தைத் தூக்கி எடுத்து சுமார் 50 மீற்றர் தூரத்துக்குக் கொண்டுசென்று நடு வீதியில் போட்டு உடைத்துள்ளனர்.

இது தொடர்பாக உடனடியாக விடத்தல்தீவு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதனை அடுத்து 18.04.2013 அன்று குறித்த வீதியில் ஒன்றுதிரண்ட மக்கள் வீதியை மறித்து போக்குவரத்தைத் தடைசெய்தனர். பின்னர் அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு வந்து மக்களுடன் பேச்சு நடத்தியதோடு பொலிஸாரும் அங்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். இது தொடர்பாக இதுவரை எந்தச் சந்தேகநபரும் கைதுசெய்யப்படவில்லை.

### மன்னார் தமிழ்ச் சங்கத்திற்கு ......

3ஆம் பக்கத் தொடர்ச்சி

திரு. தே. பி. சிந்தாத்துரை, திரு. செ. அந்தோனிதாசன் பெர்னாண்டோ (இராதா), திரு. ந. தங்கராஜா, திரு. செ. மாசில்லாமணி, திரு. யக்கோவு சேரம், திரு. அந்தோனி கிறிஸ்தோகு ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

இக்கூட்டத்தில் கருத்துரைத்த தலைவர், எதிர்காலத்தில் மன்னார் தமிழ் சங்கத்தின் செயற்பாடுகளை விஸ்தரிக்கவுள்ளதாகவும் மாவட்டத்தில் உள்ள அனைத்து கலை, இலக்கிய ஆர்வலர்கள், ஆற்றல் வாய்ந்தவர்களைச் சங்கத்திற்குள் உள்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் கூறினார். மாணவர் அணி, இளைஞர், பெண்கள் அணி முதியோர் அணி எனப்பல கிளைகளையும் நாடகக்குழு, நாட்டியக்குழு, சங்கீதக்குழு, கவிஞர்குழு, எழுத்தாளர் குழு, அண்ணாவியார் குழு எனப்பல குழுக்களையும் உருவாக்கி மன்னார்த் தமிழ்ச் சங்கத்தை பரந்த - பலமான ஓர் கலை இலக்கிய அமைப்பாக கட்டியெழுப்பவுள்ளதாகவும் இதற்கு அனைவரின் ஒத்துழைப்பும் தேவை எனவும் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னா

# இணைபிரியா இல்லறவாழ்வில்
# 30வது ஆண்டு நிறைவு விழா வாழ்த்து



18.05.1983 - 18.05.2013

திருமணத்தில் அடங்கியுள்ள மறைபொருள் பெரிது. இது திருச்சபைக்கும் கிறிஸ்துவுக்கும் பொருந்துவதாகக் கொள்கிறேன்." (எபே. 5:52)

இனிமை மிகுந்த இல்லறத்தில்
இதயங்கள் இரண்டும் இணைந்து
மணவிழாக்கோலம் கண்ட
முப்பது ஆண்டுகள் நிறைவு!

சோதனை வேதனை மத்தியிலும்
இணைபிரியாது பயணித்தீர்
இறைவன் அருளை நம்பி
இனிதே நடந்தீர் இகத்தினிலே.

இல்லறம் என்னும் நல்லறத்தில்
இன்னும் பல்லாண்டு வாழவேண்டும்.
இறைவன் ஆசீர் நிறைந்திடவே
இனிதாய் நாமும் வாழ்த்துகிறோம்.

அன்புடன் வாழ்த்துவோர் :-
மகன்மார், மகள்மார், மருமகன், மருமகள், பேத்தி மேரி லியோன்ஸி, உற்றார் உறவினர், நண்பர்கள்.

தகவல் :- பிள்ளைகள்.

**திரு. திருமதி. அந்தோனியப்பு றீற்றஸ் (நற்குணம்),**
**றீற்றஸ் யசிந்தா (ஜோகராணி)**
(பனங்கட்டுக்கொட்டு, மன்னார்.)

# நீங்காத நினைவுகள்

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
26
07
1951



உதிர்வு
21
04
2012

**திரு. அந்தோனிப்பிள்ளை அலோசியஸ் - (இலண்டன்)**
(பாலைக்குளி - மாந்தை)

அன்பின் உறைவிடமாய் அனைவருக்கும் ஏற்றவராய்
பண்பில் சிகரமாய் பாசத்தின் விளைநிலமாய்
உண்மையின் வடிவமாய் உயர்ந்தநல் சான்றோராய்
அணையில் வாழ்ந்த எம் அன்புமிகு தந்தையே!

வாழ்வாங்கு வாழ்ந்தவரே வல்லவரே நல்லவரே
தாழ்பணிந்தே இறைவனிடம் தேடுகின்றோம் உந்தனுக்காய்
வாழ்விடை மரணமது பாதியில் மறித்ததுவோ
வழ்வினையின் செயலாமோ நாமேதும் அறியோமே!

[illegible] இயேசுவிடம் பரகதியில் இருக்கவென
ஓராண்டு முன்னரே ஓடிநீர் சென்றதேனோ?
தீராத கவலையுடன் தினமும் ஜெபிக்கின்றோம்
இறைவன் விண்ணரசை பெற்றுநீர் மகிழவென!

- [illegible] குடும்பத்தினர்

காலஞ்சென்ற அலோசியஸ் அவர்களின் திருவுடல் 1.4.2012இல் இலண்டன் வெம்ளி ஹைறகோட்டில் அமைவுபெற்றுள்ள புனித வளனார் ஆலயத்தில் குடும்பத்தினர், உறவுகள், நண்பர்கள் புடைசூழ திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு உயர் மரியாதைகளுடன் 'அல்பேட்டன்' சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

01ம் ஆண்டு நினைவஞ்சலி இரங்கல் திருப்பலி கடந்த 21.04.2013 ஞாயிறு பி.ப 3.30 மணிக்கு புனித வளனார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. (St. Joseph's Church), 339 Highroad Wembley HA96AG Londen.

மருமகன் :- றமேஸ் - 07712648431, றாஜ் - 07813038933

குடும்ப முகவரி :-
194, LYONPARK AVE WEMBLY HA0 4HG LONDON

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
08
03
1946



உதிர்வு
09
05
2012

**திருமதி. அ. மரியநாயகி பீரிஸ் (ராணி)**
(வட்டாரம் - 08, வங்காலை)

நான் நல்லதொரு போராட்டத்தில்
ஈடுபட்டேன், என் ஓட்டத்தை
முடித்துவிட்டேன்" (2 திமோத்தேயு 4:7)

ஆண்டொன்று சென்றிடினும்
அம்மா உன் அன்பு முகம்
மாண்டதுபோல் தோன்றாது - எம்
மனக்கண்முன் நிற்கின்றதே!
நீண்ட செபதபமும்
நிறைவான நல்லொழுக்கமும்
பூண்ட உமதான்மா
புண்ணியனின் உறைவிடமாய்
ஆண்டவனின் சந்நிதியில்
அமைதியுடன் இளைப்பாற
வேண்டுகின்றோம் அனுதினமும்
விண்ணரசர் இயேசுவிடம்!

தகவல் :- குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் [illegible] அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.